T. 2447

[illegible]கக வெளியீடு—கூஎச

T.
2447

T·2447

# தமிழ்ப் புலவர் வரிசை

## நான்காம் புத்தகம்

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
26 FEB 1958
MADRAS

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

கழக வெளியீடு : ௬௭௪

# தமிழ்ப் புலவர் வரிசை

## நான்காம் புத்தகம்

ஆசிரியர் :
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Nov., 1953.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1-140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர்பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணுக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும், செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி **தமிழ்ப் புலவர் வரிசையில்** இதுகாறும் மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **நான்காம் புத்தகமாகும்.**

இதன்கண் **கச்சியப்பசிவாசாரியர்** முதல் **குமாரதேவர்** ஈருக இருபத்துநான்கு புலவர்பெருமக்கள் வரலாறுகளும் பரவை வழக்காக வழங்கும் கதைகளும், பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனையும் முதல் மூன்றுபுத்தகங்கள் போலவே, ஆசிரியர்களும், மாணுக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர்பெருமக்கள்பால் செய்ய வேண்டிய நன்றியை நிறைத்து எங்களையும் ஊக்குவார்களாக.

எங்கள் வேண்டுகோளின்படி இதனை ஆக்கித்தந்த திரு. **சு. அ. இராமசாமிப் புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ௧. | கச்சியப்ப சிவாச்சாரியர் | 1 |
| ௨. | குகனேரியப்ப நாவலர் | 7 |
| ௩. | சம்பந்த சரணாலயர் | 10 |
| ௪. | நம்பியாண்டார் நம்பி | 16 |
| ௫. | சேக்கிழார் | 22 |
| ௬. | உமாபதி சிவாச்சாரியர் | 27 |
| ௭. | தத்துவப் பிரகாசர் | 32 |
| ௮. | கமலை ஞானப்பிரகாசர் | 43 |
| ௯. | பரஞ்சோதி முனிவர் | 52 |
| ௧௦. | திருக்குருகைப் பெருமாள் கவிராயர் | 55 |
| ௧௧. | கவிராச பண்டிதர் | 58 |
| ௧௨. | அமிர்த கவிராயர் | 63 |
| ௧௩. | பாலசுப்பிரமணியக் கவிராயர் | 65 |
| ௧௪. | நிரம்ப வழகிய தேசிகர் | 68 |
| ௧௫. | வெள்ளியம்பலவாணத் தம்பிரான் | 71 |
| ௧௬. | கூழங்கைத் தம்பிரான் | 73 |
| ௧௭. | கடிகை முத்துப்புலவர் | 78 |
| ௧௮. | சைவ எல்லப்பநாவலர் | 81 |
| ௧௯. | கச்சியப்ப முனிவர் | 86 |
| ௨௦. | மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் | 91 |
| ௨௧. | இன்பகவிப் புலவர் | 93 |
| ௨௨. | மாம்பழக் கவிச்சிங்கநாவலர் | 97 |
| ௨௩. | தத்துவராய அடிகள் | 120 |
| ௨௪. | குமார தேவர் | 129 |

# தமிழ்ப் புலவர் வரிசை

[நான்காம் புத்தகம்]

## க. கச்சியப்ப சிவாச்சாரியர்

தொண்டை மண்டலத்தின்கண் சிறப்புற்று விளங்குவது காஞ்சிபுரம். அந்நகரத்தின்கண் ஏறக்குறைய தொளாயிரம் யாண்டுகளுக்குமுன் ஆதிசைவர் குலத்திலே காளத்தியப்ப சிவாசாரியர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் குமரகோட்டத்துப் பூசகர்களில் ஒருவர். அவருக்கு நெடுங்காலம் மகப்பேறில்லாதிருந்தது. பிறகு முருகக்கடவுளுடைய திருவருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் கச்சியப்பர் என்று திருப்பெயர் இட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார். அவ்வக் காலங்களில் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் முறைப்படி செய்தார். உரிய காலத்தில் கல்விப்பயிற்சியும் செய்வித்தார். கச்சியப்பர் தென்மொழி வடமொழி என்னும் இரண்டு மொழிகளிலும் தேர்ச்சிபெற்றுச் சிறந்து திகழ்ந்தார்.

சமய தீக்கை முதலியவைகளும் ஆதிசைவ மரபிற்கேற்றபடி செய்விக்கப்பெற்ற கச்சியப்பர், குமரகோட்டத்து முருகப்பெருமானை உண்மையன்புடன் வழிபட்டுக் கொண்டிருந்தார். காந்தபுராணச் சங்கரசங்கிதைச் சிவரகசிய காண்டத்தின்கண் ணுள்ள முருகன் திருவிளையாடல்

களைக் கந்தபுராணம் என்னும் பெயருடன் பாடுதல் வேண்டுமென்று முடிவு செய்தார். அவ்வாறு பாடுதற் காவன செய்தார். "திகட சக்கரச் செம்முக மைந் துளான்" என்று உருவற்ற வாக்கு உண்டாயிற்று. அத னையே முதலடியாகக் கொண்டு பாடத் தொடங்கினார்.

தினம் நூறு செய்யுட்கள் வீதம் பாடிவந்தார். முத லாறு காண்டங்களைப் பன்னீராயிரம் பாடல்களாகப் பாடி முடித்தார். ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டத் தைத் தம்முடைய மாணவராகிய குகனேரியப்ப நாவல ரைப் பாடி முடிக்குமாறு கட்டளையிட்டருளினார். அவரும் அவ்வாறே உபதேச காண்டத்தைப் பாடி முடித்தார்.

கச்சியப்ப சிவாசாரியர் தாம் பாடிய புராணத்தை அரங்கேற்றஞ் செய்வதற்கு எண்ணினார். அதற்கு நாளுங் காலமுங் குறிப்பிட்டு எல்லா விடங்கட்கும் திருமுகம் அனுப்பினார். காஞ்சி நகரத்தினர் நகரைப் பலவகையாக அழகுபடுத்தினார்கள். குறிப்பிடப்பட்ட நாளில் சைவ சித்தாந்தச் செல்வர்களும், சிவனடியார்களும், தமிழ்ப் புலவர்களும், மன்னர்களும், செல்வர்களும், பொதுமக் களும் பெருங்கூட்டமாக வந்து கூடினர்.

கச்சியப்ப சிவாசாரியர், முருகக்கடவுளை வணங்கிப் புராணத்தைப் போற்றி வழிபட்டுப் படிக்கத் தொடங் கினார். முதற்கண்,

> "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
> சகட சக்கரத் தாமரை நாயகன்
> அகட சக்கர விண்மணி யாவுறை
> விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்."

என்னுங் காப்புச் செய்யுளைப் படித்து, "திகழ் தசக்கரம் செம்முகம் ஐந்துளான்" என்று மொழிபிரித்தும்,

"விளக்கமுற்றுள்ள பத்துத் திருக்கைகளும்" என்று பொருள் கூறத் தொடங்கினர்.

அப்பொழுது அங்கு அமர்ந்திருந்த புலவர்களில் ஒருவர், 'அடிகாள்! தொல்காப்பியம் முதலிய எந்த இலக்கண நூலினும், 'திகழ்தசம்+திகடசம்' என்று புணர்தற்கு விதியில்லை. தாங்கள் இவ்வாறு கூறுகிறீர்களே' என்றார். அதற்குக் கச்சியப்ப சிவாசாரியர், 'தாங்கள் கூறியது உண்மைதான்; ஆயினும் இவ்வடி யான் பாடியதன்று. முருகப்பெருமானே அருளியதாகும்' என்றார்.

அதற்கு அப்புலவர், "யார் அருளியதாயினும் ஆகுக; அதனை எவ்வாறு ஒப்புக்கொள்வது? இலக்கண விதிக்குப் பொருந்தியிருக்க வேண்டியது முறைமையன்றோ?' என்றார். மற்றுஞ் சிலர், 'முருகப்பெருமானே எங்கட்குக் காட்சியளித்து, 'இவ்வடி நான் அருளியது; இதனை நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள்' என்று கூறுதல் வேண்டும், அல்லது எந்த இலக்கண நூலிலேனும் இவ்வாறு புணர்தற்கு விதியிருத்தல் வேண்டும். இவ்விரண்டில் ஒன்று நடவாதாயின் நாங்கள் இப்புராணத்தை அரங்கேற்றவிடமாட்டோம்" என்று கூறினார்கள்.

கச்சியப்ப சிவாசாரியர், 'இரண்டில் ஒன்று நாளைக்கு நடக்கும்' என்று கூறி அத்துடன் அன்றைய நிகழ்ச்சியை முடித்தார். அன்று அவர் உணவும் உட்கொள்ளாது, 'இதற்கு யாதேனும் வழி செய்தல் வேண்டும்' என்று முருகப்பெருமானைப் பெரிதுந் தொழுது வழிபட்டு அங்கு தானே உறங்கினர்.

முருகக்கடவுள் கச்சியப்ப சிவாசாரியருடைய கனவிலே காட்சியளித்து, "அன்பனே! வருந்துதல் வேண்டாம். சோழ நாட்டிலே வீரசோழியம் என்னும் பெயரு

டைய இலக்கண நூல் ஒன்று இருக்கின்றது. அதன்கண் திகழ்தசம்—திகடசம் என்று புணர்தற்கு விதியிருக்கிறது. அவ்விதி அந்நூலின் சந்திப்படலம் பதினெட்டாம் பாடலின்கண் உள்ளது. அந்நாட்டுப் புலவன் ஒருவன் அந்நூலை நாளைக்குக் கொண்டுவந்து, அவ்விதியை எல்லாருக்குங் காட்டுவான்," என்று கூறி மறைந்தருளினர்.

மறுநாள் பேரவை கூடியது. கச்சியப்ப சிவாசாரியர் இரவு கனவின்கண் முருகன் தோன்றித் திருவாய் மலர்ந்ததை அனைவருக்குங் கூறினர். அப்போது ஒரு புலவர் கையில் ஓலைச்சுவடி யொன்றுடன் ஆங்குத் தோன்றினர். அங்குள்ளவர்கள் அவரைப் பார்த்து, 'நீவிர் யார்? நுமது கையிலிருக்குஞ் சுவடியின் பெயர் என்னை?' என்று கேட்டனர்.

அதற்கு அப்புலவர், 'நாம் இருப்பது சோழ நாடு; நமது கையிலிருப்பது வீரசோழியம் என்னும் பெயருடைய இலக்கண நூலாகும்' என்றார்.

அவ்வளவில், முதல்நாள் அரங்கேற்றுதலைத் தடுத்த புலவர் விரைந்தெழுந்தார். சோழநாட்டுப் புலவர் கையிலிருந்த நூலைத் தம் கையில் வாங்கினர். சந்திப்படலம் பதினெட்டாவது பாடலைப் படித்தார்.

"நான்கொடு மூன்றென்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல்
ஏன்ற ஞகார மதாகும் பதினைந்தொ டெண்ணிரண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண் டுந்தொடர்பால்
ஆன்றவைந் தாமுட லாமுன்பி லொற்றுக் கழிவுமுண்டே."

என்னுஞ் செய்யுளைப் பார்த்து, மேற்கூறிய புணர்ச்சிக்கு விதியிருத்தலைக்கண்டு வியப்புங் களிப்பும் அடைந்தார். மற்றைய புலவர்களும் ஒவ்வொருவராகப் பார்த்து மகிழ்ந்

தனர். சோழநாட்டிலிருந்து வந்த புலவர் முடிவிற் சுவடியைக் கச்சியப்ப சிவாசாரியர் கையில் கொடுத்துவிட்டு, அவையோர்களைப் பார்த்து, 'அரங்கேற்றுதற்கு ஏற்பட்ட தடை இப்பொழுது நீங்கிற்று?' என்று கேட்டு மறைந்தருளினர்.

கச்சியப்ப சிவாசாரியர், சோழநாட்டுப்புலவராக வந்தவர் முருகக்கடவுளே என்றுணர்ந்து இன்பக்கடலிலே மூழ்கினர். அவையோரனைவரும் அழலிடைப்பட்ட வெண்ணெயைப்போல உள்ளம் உருகினர்கள். கச்சியப்ப சிவாசாரியருடைய பெருமையை எண்ணி அவரைத் தொழுது வாழ்த்தினர்கள்.

அரங்கேற்றுதற்குத் தடை கூறிய புலவர், கச்சியப்ப சிவாசாரியரைப் பன்முறை பணிந்து, 'பெரியீர்! தங்கள் பெருமையைச் சிறிதும் உணராத அடியேன் செய்த தவற்றினைப் பொறுத்தருளுதல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

கச்சியப்ப சிவாசாரியர் அப் புலவரைப் பார்த்து, 'புலவரே! தாங்கள் செய்த தடையால் அன்றோ திருவருட் சிறப்பு எல்லோருக்கும் நன்கு புலனாயிற்று. இவ்வுதவிக்கு யான் யாது கைம்மாறு செய்யப்போகிறேன்' என்று அவருக்கு இன்மொழிகள் பல கூறியருளினர்.

அவையோர் சிவாசாரியரைப் பணிந்து புராணத்தை அரங்கேற்றியருளுமாறு வேண்டிக்கொண்டனர். அரங்கேற்றுதல் இனிது நிகழ்ந்தது. அக்காலைப் புராணங் கேட்டற்கு வந்தோர் அனைவருக்கும் உணவளித்தல் முதலிய உதவிகளெல்லாம் அந்நகரத்துச் செங்குந்தத் தலைவர்களாலும், தொண்டைநாட்டின்கண் வாழ்ந்திருந்த வேளாளர்களாலும் நடத்தப்பெற்றன. எல்லோரும் வழக்கமாக

வந்து அரங்கேற்றுதலை உண்மையன்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஓராண்டு முடிவிலே அரங்கேற்றுதல் முடிவுபெற்றது. சிவாசாரியர் அப்புராணத் திருமுறையை முறைப்படிப் பூசித்து வணங்கினர். செங்குந்தத் தலைவர்கள் கச்சியப்ப சிவாசாரியரை நகர்வலஞ் செய்வித்துப் பரிசிலளித்துப் பெருமைப்படுத்தினார்கள்.

கச்சியப்ப சிவாசாரியருடைய பெருமை கந்தபுராண அரங்கேற்றத்திற்குப் பிறகு குன்றின்மேலிட்ட விளக்கெனத் தமிழ்நாடு முழுவதும் விளங்கியது. பலரும் அப் புராணத்தைப் போற்றிப் படித்து முருகன் திருவருட் செல்வப் பேறுபெற்றார்கள். கச்சியப்ப சிவாசாரியர் நெடுங் காலம் குமரகோட்டத் தறுமுகப்பெருமானை வழிபட்டுக் கொண்டிருந்து இறுதியில் அப்பெருமானுடைய திருவடிப் பேற்றையடைந்தார்.

"உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி யோங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்தபு ராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும்வெண் டாமரை மேவுமின்னும்
இச்செவி நாவினுக் கின்பா மமுது மெழுந்தனவே."

# உ. குகனேரியப்ப நாவலர்

'தொண்டைநாடு சான்றோருடைத்' தென ஆன்றோர்களால் விதந்தோதப்பெற்றது. அத் தொண்டை நாட்டில் மிகவும் சிறப்புற்று விளங்குவது காஞ்சிபுரம். அக் காஞ்சிபுரத்திலே இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரத்து இருநூறு யாண்டுகட்குமுன்னே சிவாநந்த முதலியார் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவருடைய குலம் செங்குந்தர்மரபு.

அவருக்கு நெடுநாட்கள் வரை மக்கட்பேறு அமைய வில்லை. அதனால் மனம் வருந்திய அவர் தம்முடைய மனைவியாகிய அமுதாம்பிகையோடு பலவகையான நோன்பு களை நோற்றுவந்தார். காஞ்சிபுரத்தில் எழுந்தருளிய இறைவனாகிய ஏகாம்பரநாதர் கட்டளைப்படி, முருகக் கடவுளுக்கு ஒரு திருக்கோயில் அமைத்துக், குகனேரி என்று ஒரு தடாகமும் உண்டாக்கிப் பூசை திருவிழா முதலியன நடத்திக்கொண்டிருந்தார்.

முருகக்கடவுளுடைய திருவருளினாலே அவருக்கு ஓர் ஆண்மகவு தோன்றிற்று. அக்குழந்தைக்குக் குகனேரி யப்பன் என்று பெயரிட்டு அருமையுடன் வளர்த்துவந்தார். ஐந்தாம் ஆண்டிலே கல்விப்பயிற்சி செய்வித்தார். குகனேரியப்பரும் எல்லா நூல்களையும் தம்முடைய குல ஆசிரியரும், குமரகோட்டத்துப் பூசகரும், தெய்வத் திருவருள் கைவரப்பெற்றவரும் பெரும் புலவருமாகிய கச்சியப்ப சிவாச்சாரியரிடத்திலே ஐயமறக் கற்றறிந்தார். சமய தீக்கையும் பெற்றுக்கொண்டார். வடமொழியையும் அம்மொழியிலுள்ள நூல்களையும் கற்றறிந்தார்.

சிவபூசை முறையை ஒழுங்காகக் கடைப்பிடித்துச் செய்துவந்ததுடன், முருகக்கடவுளுக்கும் நித்திய பூசை

திருவிழா முதலியவைகளைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருந்தார். ஒரு திருவிழாக்காலத்தில் முருகக்கடவுள் திருவீதியில் எழுந்தருளும்போது பெருமழை பிடித்துக் கொண்டது. கூடியிருந்தமக்கள் சிதறி ஓடத்தொடங்கினார்கள். அப்போது குகனேரியப்பர் திருவுலாத் தடையாகிறதே என்று வருந்தி,

"கார்க்கு மழைக்குங் கவலேங் கடுஞ்சிறையால்
சூர்க்குடைந்த பின்னைச் சுகத்திருத்தி—ஊர்க்குள்விடும்
கந்தன் விழாவைக் கருதாது பெய்வித்தல்
அந்தமோ [1]ஆகண்டலா."

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். உடனே மழை நின்றது. திருவுலாக் காட்சியும் சிறப்பாக நடந்தேறியது. கூடியிருந்த மக்களுங் களிப்படைந்தனர்.

கச்சியப்ப சிவாச்சாரியர் கந்தபுராணம் பாடிய காலத்தில் குகனேரியப்பர் அவருக்குப் பெருந்துணையாக அமைந்து நின்றார். கச்சியப்பசிவாச்சாரியர் கந்தபுராணம் முழுவதையும் முடிக்கவில்லை. சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ககாண்டம் என்னும் ஆறு காண்டங்களையும் பாடிமுடித்து, எஞ்சிய உபதேச காண்டத்தைப் பாடி முடிக்குமாறு தம்முடைய மாணவராகிய இவருக்குக் கட்டளையிட்டார்.

ஆசிரியர் கட்டளையைத் தலைமேற்கொண்ட குகனேரியப்பர் முருகக்கடவுளின் திருமுன்பையடைந்து, 'இறைவனே! எம்முடைய ஆசிரியருக்கு அடியெடுத்துக் கொடுத்தாற்போல் அடியேனுக்கும் திருவருள் செய்தால், ஆசிரி

1. ஆகண்டலன்—தேவர் தலைவனாகிய இந்திரன்.

யர் கட்டளைப்படி உபதேச காண்டத்தைப் பாடி முடிப்பேன்' என்று வேண்டிக்கொண்டார். அப்போது திருமுருகப்பெருமான் திருவருளால், 'குழவி வெண்பிறை' என்றோர் உருவற்ற (அசரீரி) வாக்கு உண்டாயிற்று. குகனேரியப்பர், 'குழவி வெண்பிறை' என்பதையே முதலாகக்கொண்டு, உபதேசகாண்டத்தைச் சொற்சுவை பொருட்சுவை நிரம்ப நாலாயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டுச் செய்யுட்களால் பாடி முடித்தார்.

பிறகு குமரகோட்டத்துள்ள முருகக்கடவுள் திருமுன்பு அவ்வுபதேசகாண்டம், குகனேரியப்பருடைய ஆசிரியராகிய கச்சியப்ப சிவாச்சாரியர் முதலான அறிஞர்கள் கேட்க அரங்கேற்றஞ் செய்யப்பெற்றது. அப்போது கச்சியப்ப சிவாச்சாரிய அடிகள் மிகுந்த பேருவகையுற்று,

[1]" அன்றூழி நின்றுதித்த ஆரமுதை யொப்பிடுவர்
பொன்றாமைக் கேதுவாம் புத்திகளைந்—தொன்ற
உகுநேரில் தாருவெனல் ஒக்குமலால் வேறென்
குகனேரி நாவலனூற் கு"

என்று வாழ்த்துரை வழங்கியருளினார்.

ஒருபோது முருகக்கடவுளை வழிபடும் பொருட்டுக் குகனேரியப்பர் திருத்தணிகைக்குச் சென்றார். அங்குள்ளார் சிலர், அம்பிறை என்றமொழி மூன்று இடங்களில் அடுக்கிவரும்படியும் முருகப்பெருமான் பெயரும் வள்ளி நாயகியார் சிறப்பும் அமையவும், பாங்கி தலைவற்குணர்த்துந் துறையில் பின்முடுகு வெண்பாவாக ஒரு செய்யுள் செய்தருளுதல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அவ்வளவில் கேட்டோர் வியக்குமாறு,

---

1. பொன்றாமை—இறவாமை. நேரில்—நிகரில்லாத.

"அம்பிறைக்கும் ஐந்துமலர் அம்பிறைக்கும் நொந்துமிக
அம்பிறைக்குங் கண்ணுட் கருள்புரிவாய்—நம்புரணி
லகக்கிரிக்கு ஞற்றசித்ர கச்சுடைத்த னக்குறத்தி
யைக்களித்த ணைத்தவத்த னே."[1]

என்னும் செய்யுளைப் பாடியருளினர். சமயத்திற்குத் தக்க படியாகவும் விரைவாகவும் பாடுவதில் இவர் மிகவும் ஆற்றல்படைத்தவர். திருச்செந்தூருக்குச் சென்றபோது அங்கும் ஒருமுறை கந்தபுராணச் சுருக்கத்தை அரங்கேற்றியருளினர். கச்சியப்பசிவாச்சாரியரைப் போன்றே முருகன் திருவருள்பெற்ற இவர் இறுதியில் இறைவன் திருவடி நிழலையடைந்தார்.

---

## ௩. சம்பந்த சரணலயர்

பல ஆண்டுகளுக்குமுன் தருமபுர ஆதீனத்திலே ஞானசம்பந்த தேசிகர் என்னும் பெரியார் மெய்யறிவாசிரியராக விளங்கியிருந்தார். அவர் கல்வி கேள்விகளில் மிகவும் வல்லவர். அவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் நுண்மாணுழைபுலம் மிக்காராகவும் ஆசிரியரிடத்திலே மெய்யன்பு நிறைந்தவராகவுந் திகழ்ந்தார். அவர் தம்முடைய ஆசிரியரின் திருவடிகளையே தமக்குப் பெரும் பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகினமையின், 'சம்பந்த சரணலயர்' என்னும் காரணப் பெயரைப் பெற்றார்.

அந்நாளில் மைசூர்நாட்டினை அரசுபுரிந்த அரசர் கன்னடம், தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளிலே மிகவுந் தேர்ச்சி யுடையவராகவிருந்தார். அவர் முருகக்கடவுளிடத்திலே பேரன்புடையவர். அவருக்குப் பல நூல்க

---

1. அம்பிறை - அழகிய திங்கள், மலர் அம்பு இறை - காமன். அம்பிறைக்கும் - தண்ணீரை வெளிப்படுத்தும். கச்சு - இரவிக்கை.

ளிலே ஐயத்திற்கிடமான பகுதிகள் சில இருந்தன. அவ் வரசர் அவ்வையங்களைப் போக்கிக்கொள்ள எண்ணினர். பேரறிஞர்களை அனுப்புமாறு பலநாடுகளிலுமுள்ள அரசர் கட்கும் ஆதீனத் தலைவர்கட்கும் முடங்கல் அனுப்பினர். அவ்வரசரால் விடப்பெற்ற முடங்கல்களில் ஒன்று, தரும புர ஆதீனத்திற்கும் சென்றது.

அரசரின் முடங்கலைக் கண்ட ஆதீனத்தலைவர், சம்பந்த சரணலயரை மைசூருக்கு அனுப்பலாம் என்று முடிவு செய்தார். அவர் சப்பந்தசரணலயரை நோக்கி, 'நீ இந்த முடங்கலின் பொருட்டு மைசூருக்குச் சென்றுவருவா யாக' என்று கட்டளையிட்டார். ஆசிரியர் கட்டளையைப் பெற்ற சம்பந்தசரணலயர் மைசூரை யடைந்தார். அங்கு மற்றும் பல புலவர்பெருமக்கள் திரண்டு வந்திருந்தனர்.

அரசர் வந்திருந்தோர் அனைவரையும் நன்முகப் பார்த் தார். மற்றைப் புலவர்களின் நிறம் நடையுடை முதலிய வைகளைப் பார்க்கினும், சம்பந்த சரணலயருடைய தோற்றம் நடையுடை முதலியன வேறுபட்டு விளங்கின. மிகக் கரிய நிறமாக விளங்கிய சம்பந்த சரணலயரைப் பார்த்த அரசர், [1]'இவர் அண்டங் காக்கைக்குப் பிறந்த வரோ' என்று சிறிது இகழ்ச்சியாகக் கூறினர். அரசர் கூறியது சம்பந்த சரணலயரின் காதுகளிலும் விழுந்தது. அவர் அரசரை அண்மி, 'அரசே! அண்டங் காக்கைக்குப் பிறந்தது நான் அல்லன்; அண்டங் காக்கைக்குப் பிறந் தவர் தாங்களே யாவீர்' என்று கூறினர்.

சம்பந்த சரணலயர் கூறியதைக் கேட்ட அரசருக்குப் பெருஞ்சினம் உண்டாகியது. அவர் சம்பந்த சரணலய

1. அதிவீரராம பாண்டியன் நிரம்பவழகிய தேசிகரைப்பார்த்து இவ்வாறு கூறியதாகவும் வழங்குகிறது.

ரைச் சினந்து நோக்கினார். சம்பந்த சரணாலயர் அரசனை நோக்கி, 'அரசே! நான் கூறியதை வேறுபாடாக நினைத்துக்கொள்ளவேண்டாம். அண்டத்தைக் காவல் செய்யும் ஆற்றல் அரசராகிய தங்களுக்கே உள்ளதன்றித், துறவியாகிய எமக்கேது? அதனால்தான் அவ்வாறு கூறினேன்' என்றார்.

அரசருடைய சினம் அடியோடு அகன்றது. சம்பந்த சரணாலயருடைய சுவைமிக்க நட்பமொழி மிகுந்த இன்பத்தை யுண்டாக்கியது. அவர் மிகவும் மனம் மகிழ்ந்தார். சம்பந்த சரணாலய அடிகட்குத் தம் அரியணைக்கருகே தக்க இருக்கையளித்து அதில் அமரச் செய்தார்.

பின்னர் அரசர் அங்கு வந்திருந்த பல புலவர்களையும் நோக்கித் தம் ஐயப்பாடுகளையெல்லாம் கூறி அவைகளுக்குத் தக்கவாறு விளக்கங் கூறுமாறு வேண்டினார். ஒவ்வொருவருந் தத்தமக்குத் தோன்றியவாறு பதிலளித்தனர். அவைகள் அரசருக்கு மனநிறைவை உண்டாக்கவில்லை. சம்பந்த சரணாலய அடிகள் கூறிய விடை அரசருக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றியது. அரசர், புலவர்கள் தகுதிக்கேற்றவாறு நன்கொடையளித்து அனுப்பினார். சம்பந்த சரணாலய அடிகளை மட்டும் அனுப்ப மனமற்றவராய் அவ்விடமே தங்கியிருக்கச் செய்தார்.

அடிகளார் அவ்விடமே அமர்ந்திருந்தும் அரசருடைய பொருளை அணுவும் பயன்படுத்தவில்லை. ஐயமேற்று உணவுகொண்டு தம்மையடைந்த அன்பர்கட்குக் கல்வி யறிவொழுக்கங்களையும் சமய நூல்களையுங் கற்பித்துக்கொண்டிருந்தார். தம் பொருளை அடிகளார் சிறிதும் பயன்படுத்தவில்லையென்னுஞ் செய்தி அரசருக்குத் தெரிந்தது. எவ்வாறேனும் தமது உணவினை அடிகளார் உண்ணு

மாறு செய்தல் வேண்டுமென்று அரசர் எண்ணினர். அடிகளார் ஐயமேற்கும் வீடுகள்தோறும் தமது உணவுப் பொருள்களை அனுப்பினர். அத்தகைய அரிய முயற்சியால்தான் சம்பந்த சரணலயர் தம் உணவினை உண்ணுமாறு செய்யவேண்டியதாயிற்று.

ஒருநாள் அரசர் அடிகளாரைப் பார்த்துக், 'கச்சியப்ப சிவாசாரிய அடிகள் திருவாய் மலர்ந்தருளிய கந்தபுராணம் கடல்போற் பரந்துகிடக்கிறது. அதனைக் கற்றுணர்தல் எல்லோருக்கும் இயலாததாக இருக்கின்றது. அனைவரும் எளிதில் உணர்ந்து நற்பயனடையும்படி அப்புராணத்தைச் சுருக்கமாகச் செய்தளித்தல் வேண்டும்' என்று மிக்க உருக்கமாக வேண்டிக்கொண்டார்.

அடிகளாரும் அரசர் கருத்திற்கு இணங்கினர். ஒரு நன்னளிலே பாடத் தொடங்கினர். ஒன்பது வகை இன் சுவைகளும் ஒருங்கு அமையுமாறு ஆயிரத்துநாற்பத்தெட்டுச் செய்யுள்களாகப் பாடிமுடித்தார்.

பின்பு அரசர், ஆறுபடை வீடுகளுள் ஒன்முகிய திருச் செந்தூரையடைந்து, முருகப்பெருமான் திருமுன்னர் அக் கந்தபுராணச் சுருக்கத்தினை அரங்கேற்றுமாறு செய்தார். அரங்கேற்றுதலும் பெருஞ்சிறப்புடன் இனிது முடிவுபெற்றது. அரசர் மிகவுங் களிப்படைந்தார். ஒரு பொன் தட்டிலே ஒன்பதுவகை மணிகளையும் வைத்து அடிகளாருக்குப் பரிசிலாக வழங்கினர்.

அரசர் வழங்கிய பரிசிலையேற்ற அடிகளார், 'இஃது ஆசிரியருக்கு உரியதாகுக' என்று அப்பால் வைத்தார். வழங்கிய பொருளை ஆசிரியருக்கு உரியதாக்கிவிட்டதைக் கண்ட அரசர், மேலும் ஒரு தட்டில் அவ்வாறே வழங்கினர். அதனையேற்ற அடிகளார், 'இஃது இறைவனுக்கு உரிய

தாகுக' என்று வைத்தார். அரசரோ மற்றும் ஒருமுறை அவ்வாறே கொடுக்க, அதனையேற்ற அடிகளார், "இஃது அடியார்களுக்கு உரியதாகுக' என்று வைத்தார்.

மும்முறை கொடுத்தும், அடிகளார் தமக்கென்று வைத்துக்கொள்ளாமல் இவ்வாறு செய்துவிட்டாரே என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். அடிகளாரின் போக்கினை யுணர்ந்த சிலர், 'இதுவரை அடிகளார் தமக்கென்று யாதேனும் ஒரு பொருளை உரிமையாக வைத்துக்கொண்ட துண்டா? இல்லையன்றோ? ஆகலின் அடிகளாரின் செய்கை யில் வியப்பொன்றும் இல்லை' என்றனர்.

பிறகு அரசர் சப்பந்த சரணாலய அடிகளை நகர் வலஞ் செய்து போற்ற எண்ணினர். தமது கருத்தை அடிக ளாருக்குத் தெரியப்படுத்தினர். அடிகளாரோ தருமபுர ஆதீனத்தில் எழுந்தருளியிருக்கும் தம்முடைய ஆசிரியரின் கட்டளையின்றி நகர்வலத்திற்கு இணங்க முடியாதென்று கூறிவிட்டார் அரசர் தமது கருத்தைத் தருமபுரத்தி லெழுந்தருளியுள்ள ஆதீனத்தலைவருக்குத் தெரிவித்து, அவருடைய உடன்பாடுபெற்று அடிகளாரை நகர்வலஞ் செய்வித்தார்.

ஒருநாள் அரசர் அடிகளாரைப் பார்த்துத், 'தங்கள் ஆதீனத்தில் உள்ள அடியார்களின் தொழில் யாது?' என்று கேட்டார். அதற்கு அடிகளார்,

[1]"ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவாநந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே."

---

1. இப்பாட்டுப் பிறர் ஒருவர் பாடியதாகவும் சிலவிடங்களில் வழங்குகின்றது.

என்னும் கட்டளைக் கலித்துறையால் விடையருளினர். அடிகளாரின் பதிலைக்கேட்ட அரசர் அவ்வாதீனப் பெருமையை இனிதுணர்ந்து வியப்படைந்தார். முன்பு அடிகளார் வாங்கிவைத்த பொருள்களை யெல்லாம் ஆதீனத்திற்கே அனுப்பினர்.

மேலும் அவ்வாதீனத்திற்குக் கற்று அனுப்புதல் முதலிய நல் வழக்கத்தையும் மேற்கொண்டு நீண்டநாள் அவ்வாதீனத் தொடர்புடையவராக விருந்தார். கற்று அனுப்பும் வழக்கம் நீண்டகாலம் வரை நிகழ்ந்துவந்தது.

சம்பந்த சரணலய அடிகள் பல சிவப்பதிகளையும் போற்றி வழிபட்டுக்கொண்டு தருமபுரத்தை யடைந்தார். இறுதிவரை அவ்விடத்தைவிட்டு நீங்காது முக்காலமும் ஆசிரியரைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். இறுதியில் இறை சிவன் திருவடி நிழலை யெய்தினர்.

சம்பந்த சரணலய அடிகள் தருமபுரத்தை யடைந்து, ஆங்கு விளங்கிய காலந்தொட்டு அவருடைய வரலாறுகள் ஒருவாறு தெரிகின்றதேயன்றிப் பிள்ளைப்பெயர், தாய் தந்தையர், ஊர், காலம் முதலியன விளக்கமாகத் தெரியவில்லை.

## ௪. நம்பியாண்டார் நம்பி

திருமிகுந்த சோழ வளநாட்டிலே, திருநாரையூர் என்னும் ஊரிலே முன்னாளில் ஆதிசைவர் ஒருவர் இருந்தார். அவர் அப்பதியிலெழுந்தருளிய பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசனை புரிபவர். அவருக்கொரு புதல்வர் தோன்றினர். அவர் அவ்வக் காலத்திற்குரிய சடங்குகளெல்லாஞ் செய்யப்பெற்றுக் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அப்புதல்வருடைய தந்தையார் ஓர் ஊருக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது அவர் தம்முடைய அருமைத் திருமகனைப் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யுமாறு சொல்லிவிட்டுச் சென்றார். அப் புதல்வரும் தந்தையாருடைய கட்டளைப்படி பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யத் தொடங்கினர். நீராட்டல் முதலியவைகளையெல்லாம் செய்து முடித்தார்; பின்னர் உணவினை அப்பிள்ளையார் திருமுன்பு வைத்துத், 'திருவமுது செய்தருளும்' என்று வேண்டிக்கொண்டார். பொல்லா (பொள்ளா)ப் பிள்ளையாரோ பொல்லாப் பிள்ளையாராக இருந்தார்.

தாம் படைத்துள்ள உணவினை, அப்பிள்ளையார் தமது கையினலே யெடுத்து உண்டு விழுங்கிவிடுவார் என்பது சிறுவராகிய புதல்வருடைய எண்ணம். எவ்வளவோ வேண்டிக்கொண்டும் பிள்ளையார் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. அதனல் அவருக்கு மிகுந்த வருத்த முண்டாயிற்று. 'பிள்ளையாரே யான் தங்கட்கு ஏதேனும் தவறு செய்ததுண்டா? அடியேன் படைத்தவைகளை யுண்ணுமலிருக்கக் காரணம் யாது? உடனே அமுது செய்யாவிட்டால் யான் என்னுடைய தலையைக் கல்லிலே

மோதி உடைத்துக்கொள்வேன்' என்று கூறினார். அப்போதும் பிள்ளையார் அசையாமலிருக்கவே தம்முடைய தலையைக் கல்லிலே அடித்து உடைத்துக்கொள்ளப் புகுந்தார்.

அவ்வளவில் பொல்லாப் பிள்ளையார், "நம்பி! பொறு!!' என்று தடுத்து அங்குப் படைக்கப்பட்டிருந்தவைகளை யெல்லாம் தமது துதிக்கையை நீட்டி யெடுத்து உட்கொண்டருளினார். அந் நிகழ்ச்சியைக் கண்ட புதல்வருக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்று. இன்பக் கூத்தாடினார். பிறகு காலித்தட்டை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று தாயார் முன் போட்டார். காலித்தட்டைக் கண்ட அம்மையார், 'பிள்ளையாருக்குப் படைக்கப்பட்ட உணவுச் சோறு எங்கே' என்று கேட்டார். நம்பியாண்டார், பிள்ளையார் சாப்பிட்டுவிட்டதாகக் கூறினார். அவ்வம்மையார் மகன் கூறியதை நம்பவில்லை. யாருக்கோ கொடுத்துவிட்டு மகன் பொய் கூறுவதாக எண்ணினார். சினந்து சுடுமொழிகள் பல கூறி விரட்டினார்.

பள்ளிக்குச் செல்லப் பொழுது கடந்துவிட்டது. பொழுதானபிறகு சென்றால் கணக்காயர் கடிந்துரைத்துத் தண்டிப்பார். ஆகவே, பள்ளிக்குச் செல்ல அஞ்சிய நம்பியாண்டார் தம்மை ஆட்கொண்ட பிள்ளையாரிடமே சென்று கல்வி கற்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். பிள்ளையாரும் நம்பியாண்டார்க்கு அவ்விதமே கற்பித்தருளினார்.

நம்பியாண்டாருடைய தந்தையார் ஊரிலிருந்து திரும்பிவந்தார். பல வியத்தகு நிகழ்ச்சிகளால் தம்முடைய மகன் பொல்லாப்பிள்ளையாருடைய திருவருட் பேற்றையெய்தியிருப்பதை அறிந்து மகிழ்ந்தார். நாட்கள் பல சென்றன. கல்வியில் தேர்ச்சிபெற்ற நம்பியாண்டார்,

பொல்லாப்பிள்ளையார் மீது இரட்டைமணிமாலை பாடியருளினர்.

அக்காலத்தில், சோழவள நாட்டிலே பிறக்க வீடுபேறு அளிக்குந் திருப்பதியாகிய திருவாரூரிலே, அபய குலசேகர சோழமன்னன், சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கச் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தான். அவ்வரசன் தன்னுடைய அவைக்களத்துக்கு வரும் சிவனடியார்கள் சிலர் தேவாரப்பதிகங்களைப் பாடுதலைக்கேட்டுப் பேரின்பமடைவான். அத் தேவாரப்பாக்கள் அம் மன்னனுக்கு அளவுகடந்த மகிழ்ச்சியையும் இறையன்பையும் உண்டாக்கின. அவ்வரசன் தேவாரப்பாக்கள் எல்லாவற்றையுங் கேட்டு மகிழவேண்டுமென்று எண்ணினன். தேவாரப் பாக்களின் பொருட்டு எல்லாவிடங்களையுந் தேடிப்பார்த்தான்; எங்கும் அகப்படவில்லை. அதனல் மிகவும் மனம் வருந்தியிருந்தான்.

நம்பியாண்டார் நம்பியினுடைய செய்திகளெல்லாம் அபய குலசேகர சோழமன்னனுக்குத் தெரிந்தன. அவன் மிகுந்த வியப்படைந்தான். பொல்லாப்பிள்ளையாருக்குப் படைக்கும் பொருட்டுப் பலவகைப் பழங்கள், அவல், தேன், எள்ளுருண்டை முதலியவைகளெல்லாம் எடுத்துக் கொண்டு நால்வகைப் படையும் புடைசூழத் திருநாரையூரையடைந்தான். நம்பியாண்டாரைக் கண்டு வணங்கினன். தான் கொண்டுவந்துள்ளவைகளைப் பிள்ளையாருக்குப் படைக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அவரும் அவைகளைத் தூய்மைப்படுத்திப் பிள்ளையாருக்குப் படைத்தருளினர்.

அரசன் நம்பியாண்டாரைப் பணிந்து, ‘ சமய குரவர்கள் பாடியருளிய தேவாரத் திருமுறையை முற்றிலும்

கேட்டு மகிழ விரும்புகிறேன். அவைகள் உள்ள இடத்தைத் தாங்கள் கண்டுபிடித்துச் சொல்லியருளுதல் வேண்டு'மென்று வேண்டிக்கொண்டான்.

நம்பியாண்டார் பிள்ளையாரைத் தொழுது, தேவாரத் திருமுறைகள் இருக்குமிடத்தைத் தெரியப்படுத்தியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். பொல்லாப் பிள்ளையார், தமிழ்மறையாகிய தேவாரங்கள் திருத்தில்லைப் பதியிலே, பொன்னம்பலத்திற்குப் புறக்கடையிலே சமய குரவர்களுடைய கையடையாளங்களுள்ள அறையினுள் இருப்பதாக உணர்த்தியருளியதுடன், திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையும் நம்பியாண்டார் நம்பிக்கு நன்கு விளக்கியருளினார்.

நம்பியாண்டார்நம்பி, சோழமன்னனிடம் தேவாரத் திருமுறைகள் இருக்குமிடத்தைக் கூறினார். சோழமன்னன் நம்பியாண்டார் நம்பியையும் அழைத்துக்கொண்டு தில்லையை அடைந்தான். சிவகங்கையிலே நீராடினான். சிவபூசை முதலிய தினக்கடன்களை முடித்தான். பொன்னம்பலத்தையடைந்தான். அம்பலவாணனைக் கண்டு உள்ளங்களித்தான். பலவகையாகப் பாடிப்பணிந்தான். அப்போது நம்பியாண்டார் நம்பி கூத்தப்பிரான்மீது கோயில் திருப்பண்ணியர் விருத்தம் பாடியருளினார்.

சோழமன்னன் பிறகு தில்லைவாழந்தணர்களைப் பார்த்துப், "பொன்னம்பலத்திற்குப் புறக்கடையில் சமய குரவர்கள் கையடையாள மிடப்பட்ட அறையினுள், தேவாரத்திருமுறைகள் இருப்பதாகப் பொல்லாப்பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவைகளை எடுத்தல்வேண்டும்" என்றார்.

அதற்குத் தில்லைவாழந்தணர்கள், 'திருமுறைகளை வைத்தருளிய சமயகுரவர்கள் எழுந்தருளிவந்தால்தான் அறைதிறக்கும்' என்றார்கள். சோழமன்னன் கூத்தப்பிரானுக்கும் சமயகுரவர்களுக்கும் சிறப்பான பூசைகள் செய்து, சமயகுரவர்களைத் திருவீதியிலே திருவுலா வரச் செய்து பின்னர்க் குறிப்பிடப்பட்ட அறைக்குமுன் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டு, 'சமயகுரவர்கள் எழுந்தருளிவந்துவிட்டார்களே இனி அறை திறக்கலாமே' என்று கூறினான்.

தில்லைவாழந்தணர்கள் அரசனுடைய அறிவுக்கு வியந்து அறையைத் திறப்பதற்கு உடன்பட்டார்கள். அறையைத் திறந்துபார்க்குங்கால் திருமுறைகளைப் புற்று மூடியிருந்தது. வெளியில் சுவடிகளை யெடுத்து மண்ணைத் தள்ளிவிட்டுப் பார்க்குங்கால் கணக்கற்ற ஏடுகள் அழிந்து போயிருந்தன. அதனால் அரசன் மிகவும் உள்ளம் வருந்தினான். செல்லுகள் நனையும்படி எண்ணெயைச் சொரிந்தான். அப்போது, 'தேவாரப் பதிகங்களிலே இக்காலத்திற்கு வேண்டியவைகளை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவைகளைப் புற்றுமூடச் செய்தோம்' என்று உருவில்லா வாக்கு உண்டாயிற்று. அதனைக் கேட்டு அரசன் முதலாயினோர் உள்ளந் தெளிந்தனர்.

சோழமன்னன் நம்பியாண்டார் நம்பியைப் பார்த்துத் 'தேவாரம் முதலிய திருவருட்பாக்களை யெல்லாம் திருமுறைகளாக வகுத்தருளுதல் வேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். நம்பியாண்டாரும் அதற்கு உடன்பட்டார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரசர் பதிகங்களை, நான்கு ஐந்து ஆறு என்னும்

மூன்று திருமுறைகளாக வகுத்தார். சுந்தரமூர்த்திநாயனாருடைய பதிகங்களை ஏழாவதுதிருமுறையாக வகுத்தார். தேவாரப்பதிகங்களை ஏழுதிருமுறைகளாக வகுத்த பின்னர்த் திருவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டையும் எட்டாந் திருமுறையாக வகுத்தார். திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பிகாடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பதுபேர்கள் திருவாய் மலர்ந்தருளியவைகளை ஒன்பதாந்திருமுறையாக வகுத்தார். திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாக வகுத்தார். திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலிய நாற்பதுநூல்களைப் பதினோராந்திருமுறையாக வகுத்தார்.

பின்னர் நம்பியாண்டார் நம்பி, தமக்குப் பொல்லாப் பிள்ளையார் உணர்த்தியருளியபடியே, திருத்தொண்டத் தொகையை முதல்நூலாகக் கொண்டு, நாயன்மார்களுடைய வரலாறுகளைக் கலித்துறையந்தாதியாகப் பாடியருளினார். திருஞானசம்பந்தப்பெருமான்மீது, திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறுநூல்களைப் பாடியருளினார். திருநாவுக்கரசுநாயனார் மீது திருவேகாதசமாலை பாடினார். தாம் பாடியருளிய பத்துநூல்களையும், சோழமன்னனுடைய வேண்டுகோளின்படி பதினொன்றாந்திருமுறையிலே சேர்த்தருளினார். தில்லையில்தானே தேவாரப்பதிகங்களுக்குப் பண்ணடைவும் வகுக்கப்பெற்றது.

சோழமன்னன் பின்னர்த் திருவாரூரை யடைந்தான். நம்பியாண்டார்நம்பி திருநாரையூரை யடைந்தார். தேவா

ரத் திருமுறைகளும் திருத்தொண்டர்புராணமும் உலகிலே விளங்குவதற்கு முதற்காரணமாகவிருந்த நம்பியாண்டார் நம்பி, நீண்டகாலம் பொல்லாப்பிள்ளையாருக்கு நல்ல பிள்ளையாக இருந்து இறுதியில் அப்பெருமானுடைய அடித்தாமரையை அடைந்தார்.

---

## ரு. சேக்கிழார்

தொண்டைநாட்டில் குன்றத்தூர் என்னும் ஓர் ஊர் உள்ளது. அவ்வூரில் வேளாள குலத்திலே சேக்கிழார் மரபில் சேக்கிழார் தோன்றினர். அவர் தோன்றி விளங்கியது பன்னிரண்டாம் நூற்றாண்டிலே என்று ஆராய்ச்சியாளர்கள் துணிகின்றனர்.

சேக்கிழாருடைய பிள்ளைப்பெயர் இன்னதுதான் என்று ஐயமறத் தெரியவில்லை. அருள்மொழித்தேவர் என்றொரு பெயர் இறைவன் திருவருட்குரியவரான பின்னர் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சேக்கிழார் என்னுங் குடிப்பெயரே அவருக்குச் சிறந்து விளங்குவதாயிற்று. சேக்கிழாருடன் பிறந்த அவருடைய இளவலின் பெயர் பாலறுவாயர். சேக்கிழார் இளமைக் காலத்தில்தானே கல்விகேள்விகளில் தேர்ச்சிபெற்று விளங்கினர். அவருடைய சீர்த்தி தமிழ்நாடு முழுவதும் தழைத்தோங்கிற்று.

அப்போது சோழமண்டலத்தை அநபாய சோழ மன்னன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவனுடைய காதுகளுக்கும் சேக்கிழாருடைய சீர்த்தி எட்டியது. அவன் அவரையழைத்துத் தன்னுடைய தலைமை அமைச்சராக ஏற்படுத்தினன். “உத்தம சோழப்பல்லவர்” என்னும் சிறப்புப்பெயருங்கொடுத்தான். சேக்கிழார் தம்

முடைய பிறப்பிடமான குன்றத்தூரிலும் சோழநாட்டிலும் இருந்துகொண்டு அமைச்சர்க்குரிய அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சோழநாட்டிலுள்ள திருநாகேசுரம் என்னும் சிவத் திருப்பதியினிடத்திலே சேக்கிழாருக்கு அளவுகடந்த அன்புண்டாயிற்று. ஆகவே, அவர் தம்முடைய குன்றத்தூரிலே ஒரு திருக்கோயில் அமைத்து அதற்குத், 'திருநாகேசுரம்' என்று பெயரிட்டார்.

அந்நாளிலே மக்கள் பலரும் சீவகசிந்தாமணியைப் பெரிதும் பாராட்டிப் படித்துக்கொண்டிருந்தார்கள். அநபாயசோழ மன்னனும் அச்சீவகசிந்தாமணிக் கதையைப் பெரிதும் விரும்பிக் கேட்டுக்கொண்டிருந்தான். சைவ சமயியான சோழமன்னன் சீவகசிந்தாமணிக்கதையைக் கேட்பது அமைச்சராகிய சேக்கிழாருக்குப் பிடிக்கவில்லை. அவர் சைவசமயத் தொடர்புள்ள உண்மை வரலாறுகளை அரசன் கேட்குமாறு செய்யவேண்டுமென்று எண்ணினார். அடிக்கடி அரசனிடம் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் அதைப்பற்றிக் கூறிவந்தார்.

அநபாயசோழ மன்னன், 'சைவசமயத்திலே இறைவனருள்பெற்ற அடியார்களுடைய வரலாறுகள் இருப்பின், அவற்றைக் கூறியருளும்; கேட்கிறேன்' என்றான். சேக்கிழார், திருநாரையூர் நம்பியாண்டார்நம்பி பொல்லாப் பிள்ளையார் திருவருளினாலே பாடியருளிய திருவந்தாதியைப் படித்துப் பொருள் விரித்துரைத்தார். அதனைக் கேட்ட சோழமன்னன் திருத்தொண்டர்களுடைய அடிமைத் திறத்தையும், இறைவனது திருவருட்டிறத்தையும் நினைந்து பெரிதும் உருகினான். திருத்தொண்டர்களுடைய வரலாறுகளை யாவரும் நன்கறியும்படி விரித்துப் பெரிய

நூலாகப் பாடியருளுதல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டான்.

அரசகாரியங்களுக்கிடையே நூல் செய்யும் வேலையையும் மேற்கொண்டால், நூல் நன்கமையாதென்றும் தனியேயிருந்து செய்தல்வேண்டுமென்றும் சேக்கிழார் அரசனிடந் தெரியப்படுத்தினார். அரசனும் அவ்வாறே செய்யும்படி கட்டளையிட்டான்.

தனியே அமர்ந்து அடியார்வரலாற்றை இனிது பாடுவதற்குத் தக்கவிடம் யாதென்று எண்ணமிட்டார். பொன்னம்பலவாணன் இன்பக்கூத்தியற்றும் திருத்தில்லையே அதற்குச் சிறந்தவிடமென்று முடிவுசெய்தார். அரசனிடம் திருத்தில்லைக்குச் சென்று பாடி முடிக்கிறேன் என்று கூறி, வேண்டிய பொருளைப் பெற்றுக்கொண்டு தில்லைப்பதியை அடைந்தார். சிவகங்கையிலே நீராடினார். கூத்தப்பிரானைப் போற்றி வணங்கினார். 'திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையெல்லாம் இனிது பாடி முடிக்குமாறு திருவருள்புரிதல் வேண்டும்' என்று வேண்டினார். அம்பலவாணன் அருளினாலே, "உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்" என்ற உருவற்ற வாக்கு உண்டாயிற்று.

சேக்கிழார் ஆயிரக்கால் மண்டபத்தை யடைந்து அங்கு அமர்ந்து திருத்தொண்டர் புராணத்தைப் பாடத் தொடங்கினார்.

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

என்பது முதற்பாட்டாக அமைந்தது. சில திங்களில் புராணம் முற்றுப்பெற்றது.

சேக்கிழார் தில்லைமா நகரையடைந்து புராணம் பாடத் தொடங்கியது முதல், அநபாயமன்னன் எவ்வளவு வரை பாடப்பெற்றுள்ளன என்று கேட்டு ஆளனுப்பிக்கொண்டே இருந்தான். புராணம் முடிவுபெற்ற செய்தி அவனுக்குப் பெரு மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. முடிவு மொழிந்தவர்களுக்குப் பெரும்பொருள் வழங்கினன். புராணத்தைக் கேட்டு மகிழ விரும்பினன். படைகள் புடைசூழத் தில்லையை அடைந்தான். சேக்கிழார் அரசன் வரவையறிந்து எதிர்கொண்டார். அரசன் அமைச்சருடைய சிவத்தொண்டுக் கோலத்தைக் கண்டு மனமகிழ்ந்தான். சேக்கிழார் அடிகளிலே விழுந்து வணங்கினன். பின்னர்க் கூத்தப் பிரானையும் வணங்கி மகிழ்ந்தான். அவ்விடமே திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றஞ்செய்விக்க எண்ணினன். புராண அரங்கேற்றங் குறித்துத் தமிழ்நாடெங்கும் திருமுகம் அனுப்பினன். எல்லாவிடங்களிலுமிருந்த சிவனடியார்களும் சைவசித்தாந்தச் செல்வர்களும் மற்றுமுள்ள அன்பர்களும் தமது தொல்லையைத் தொலைக்க நல்ல வாய்ப்புக் கிடைத்ததென்று தில்லையை வந்து சேர்ந்தார்கள்.

தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர், சேக்கிழார் பாடியருளிய திருத்தொண்டர்புராணத்தை முறைப்படி பூசித்துப் போற்றினர். மன்னனும் மற்றுமுள்ளவர்களும் சேக்கிழாரை வணங்கிப் புராணத்தைப் படித்துப் பொருள் விரித்தருளுதல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். சேக்கிழாரும் அவ்வாறே படித்துப் பொருள் விரிக்கலானர். புராணச்சொற்பொழிவு ஓராண்டுவரை தொடர்ந்து நடந்து, ஆண்டின் இறுதியிலே முடிந்தது. புராணங் கேட்டற்கு வந்திருந்தோர் அனைவர்க்கும் உணவு

உறைவிடம் முதலிய உதவிகளெல்லாம் அநபாய மன்ன னுடைய பொருட்செலவினால் செய்யப்பெற்றன.

அரங்கேற்றம் முடிந்த பின்னர் அப்புராணத்தையும் சேக்கிழாரையும் அரசன் யானையின்மேல் அமர்த்தி நகர் வலஞ் செய்வித்தான். நகர்வலம் வந்தபொழுது தானே வெண்சாமரையும் வீசினான். அவ்வாறு செய்தற்குத் தனக்குக்கிடைத்த பேற்றை எண்ணியெண்ணி அரசன் மிகவும் மனம் மகிழ்ந்தான். நகர்வலம் முடிந்து அனை வரும் அம்பலவாணன் திருமுன்பை அடைந்து போற்றி வணங்கினார்கள். அப்போது மன்னன், சேக்கிழாருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்று சிறப்புப்பெயர் வழங்கினான்.

திருத்தொண்டர் புராணத்தை, முன் நம்பியாண்டார் நம்பி வகுத்துள்ள பதினொருதிருமுறைகளுடனே சேர்த் தருளுமாறு அரசன் சேக்கிழாரை வேண்டிக்கொண்டான். அவரும் அவ்வாறே திருத்தொண்டர் புராணத்தைப் பன் னிரண்டாந் திருமுறையாகச் சேர்த்தருளினார். பின்பு சேக்கிழாருக்கு அமைச்சர் தொழிலாகிய அரசகாரியங் களிலே உள்ளஞ் செல்லவில்லை. மேலுஞ் சிவப்பணிகளிலே காலங்கழிக்க விரும்பினார். தம்முடைய எண்ணத்தை அரசனுக்கு அறிவித்தார். அரசனும் அதற்கு உடன்பட்டு விடையளித்தான்.

பின்னர் அரசன், சேக்கிழாருடைய இளவலாகிய பாலறாவாயரை யழைத்து அமைச்சுத்தொழிலிலே அமர்த் தினான். அவருக்குத் 'தொண்டைமான்' என்னுஞ் சிறப்புப் பெயர் கொடுத்தான்.

சேக்கிழார் தில்லைமாநகரில்தானே அமர்ந்திருந்து, இன்பக்கூத்தனை முக்காலமும் வழிபட்டுக்கொண்டிருந்

தார். பின்னர் அவர் இறைவன் திருவடிநீழலை யெய்தி னார். சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் சிவனடியார்கள் பலருடைய வரலாறுகளையுங் கூறுதலா னும், சொன்னயம் பொருணயம் முதலியன சிறந்து திகழ் தலானும் அனைவராலும் "பெரிய புராணம்" என்று பாராட் டப்பெற்றுச் செந்தமிழ் உலகிலே சிறந்து விளங்குகின்றது.

---

## கூ. உமாபதி சிவாச்சாரியர்

உமாபதி சிவாச்சாரியர் என்னும் பெரியார், சிதம் பரம் என்று வழங்கப்பெறுந் திருத்தில்லையின்கண்ணே தில்லைவாழ் அந்தணர் குலத்தில் தோன்றினார். இளமைக் காலத்தில் கற்கவேண்டிய நூல்களையெல்லாம் முறைமை யாகக் கற்றுத் தெளிந்தார். கூத்தப்பிரான் இடத்திலே பேரன்புகொண்டு வழிபாடு செய்துகொண்டிருந்தார். வட மொழி நூல்களையே யன்றித் தென்மொழிக்கண்ணுள்ள இலக்கண இலக்கியங்களையும் இனிது கற்றுணர்ந்தார்.

அக்காலத்தில் தில்லையில் மறைஞானசம்பந்தர் என் னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சைவசித்தாந்த நூல்களைக் கற்றுணர்ந்து சிவ அறிவு கைவரப்பெற்றவர். மெய்யறிவின் முதிர்ச்சியினாலே வேறுபாடுகளையெல்லாம் விலக்கியவர். உயர்வையுந் தாழ்வையும் நன்மையையும் தீமையையும் ஒன்றாகக் காண்பவர். அச் சைவசித்தாந்தப் பெரியாரின் பெருமையை நன்குணர்ந்த உமாபதி சிவாச் சாரியர், அவருக்கு மாணவராக அமைந்து நின்று சைவ சித்தாந்த மெய்யறிவுநூல்களைக் கற்றதுடன், அவருடைய உண்மை மாணவராகவும் நின்று வழிபாடு செய்தார்.

குல வேறுபாடு கருதாத மறைஞானசம்பந்தர், ஒரு நாள் செங்குந்தர் அளித்த கூழினை அருந்திக்கொண்டிருந்தார். அப்பொழுது கூழானது மறைஞானசம்பந்தரின் கையிலிருந்து வழிந்து நிலத்தில் ஒழுகியது. உமாபதி சிவாச்சாரியர் அப்பொழுது தம்முடைய ஆசிரியருக்கருகில் இருந்தார். கூழ் கீழே ஒழுகுதலை அவர் பார்த்ததும், கிடைத்தற்கரிய குருவின் சேடப்பொருள் வீணாகப் போகின்றதே என்னும் எண்ணம் அவருக்குண்டாயிற்று. கீழே ஒழுகுவதைத் தம்முடைய கையிலே வாங்கித் தாம் அருந்தினார்.

உமாபதி சிவாச்சாரியர், செங்குந்தர்கள் சமைத்த கூழை உண்டார் என்னுஞ் செய்தி தில்லை முழுவதும் ஒல்லையிற் பரவியது. தில்லைவாழ் அந்தணர்கள் ஒருங்கு கூடினர். உமாபதி சிவாச்சாரியரின் பெருமையைச் சிறிதும் உணராமல் அவருடைய செய்கையைக் கண்டித்தனர். அவரைக் குலத்தில் நின்றும் தள்ளிவைத்ததுடன், தம்முடன் தில்லையில் இருத்தல் கூடாதென்றும் தடுத்தனர்.

உமாபதி சிவாச்சாரியர் கூத்தப்பிரானின் திருவருள் கைவரப்பெற்றவராதலின், தில்லைவாழ் அந்தணர்களின் செய்கை குறித்துச் சிறிதும் வருந்தவில்லை. தில்லைக்கடுத்துள்ள கொற்றவன்குடி என்னும் இடத்திற்குச் சென்று, ஆங்கு ஓர் இருப்பிடம் அமைத்துக்கொண்டு தங்கியிருந்தார். அப்போது, வடமொழியிலிருந்த பௌட்கராகமத்திற்கு ஒரு விரிவுரை (வியாக்கியானம்) செய்தார். தமிழ் மொழியிலே,

க. சிவப்பிரகாசம்

உ. திருவருட்பயன்

ங. வினா வெண்பா

௪. போற்றிப்பஃறொடை
௫. கொடிக்கவி
௬. நெஞ்சுவிடு தூது
௭. உண்மைநெறி விளக்கம்
௮. சங்கற்ப நிராகரணம்

என்னும் எட்டுச் சைவசித்தாந்த நூல்களையும்,

௧. கோயிற் புராணம்
௨. திருத்தொண்டர் புராண சாரம்
௩. திருமுறைகண்ட புராணம்
௪. சேக்கிழார் நாயனார் புராணம்
௫. சிவத்தலச் சிவநாமக் கலிவெண்பா
௬. திருப்பதிக் கோவை
௭. திருப்பதிகக் கோவை

என்னும் பிற நூல்களையும் செய்தருளினார்.

உமாபதி சிவாச்சாரியர், மேற்கூறியவாறு நூல்கள் செய்துகொண்டு கொற்றவன்குடியிலே எழுந்தருளியிருக்கும்போது கூத்தப்பிரானுடைய திருவிழா வந்தது. அதில் உமாபதி சிவத்தின் கொடியேற்றும் முறையில், தில்லைவாழந்தணர்கள் வேறொருவரைக்கொண்டு கொடியை ஏற்றுவதற்கு முயன்றனர். எவ்வளவோ முயன்றும் கொடியேறவில்லை. யாவருந் திகைத்திருந்தனர். அப்பொழுது உருவற்ற வாக்கு, "நாம் உமாபதியினுடைய பூசைப் பேழையில் இருக்கின்றோம், அவன் வந்தாலொழிய இக் கொடி ஏறாது," என்று எழுந்தது.

தில்லைவாழந்தணர்கள் உமாபதி சிவத்திற்குத் தாங்கள் இழைத்த தவற்றினையெண்ணி வருந்தினர். பிறகு அனைவருங் கொற்றவன்குடியை அடைந்து உமாபதி சிவத்தைக் கண்டு வணங்கினர். தாங்கள் செய்த பிழையைப்

பொறுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, இறைவனது கட்டளையை இயம்பினர். உமாபதி சிவாச்சாரியருந் தில்லைக்கெழுந்தருளிக் கொடியை ஏற்றுவித்தார். பிறகு மீண்டுங் கொற்றவன்குடிக்கே எழுந்தருளி ஆங்கு அமர்ந்திருந்தார்.

அந்நாளிலே, பெத்தான்சாம்பான் என்னும் பெயரையுடையவனும், இழிகுலத்திற் பிறந்தவனுமாகிய ஒருவன், தனக்கு வீடுபேற்றை அளிக்கவேண்டுமென்று நெடுங்காலமாகக் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தான். ஒருநாள் இரவிலே கூத்தப்பிரான் அந்தப் பெத்தான் சாம்பானுடைய கனவிலே தோன்றி, ஒரு சீட்டை அவன்முன் போட்டு, 'இந்தச் சீட்டைக் கொண்டுபோய்க் கொற்றவன்குடியிலிருக்கும் உமாபதி சிவாச்சாரியாரிடம் கொடுப்பாயாக' என்று கூறி மறைந்தருளினர்.

பெத்தான் சாம்பான் விழித்துக்கொண்டு அம்பலவாணனுடைய அருட்டிறத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். சீட்டையெடுத்துக்கொண்டு கொற்றவன்குடிக்குச் சென்றான். உமாபதிசிவத்தைக் கண்டு பணிந்து போற்றினன். இறைவனுடைய சீட்டை அவருடைய கையிலே கொடுத்தான். உமாபதிசிவாச்சாரியர் சீட்டைப்பெற்றுப் படித்துப் பார்த்தார். அந்தச் சீட்டிலே,

> "அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
> குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசை
> பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
> முத்தி கொடுக்க முறை,"

என்று எழுதப்பெற்றிருந்தது. அளவற்ற மகிழ்ச்சி உண்டாகிவிட்டது உமாபதிசிவத்திற்கு. அவர் பெத்தான் சாம்பானுக்கு நிருவாண தீக்கை செய்து, உடனே அந்தச்

சாம்பான் தன்னுடைய உடல்நீங்கி வீடுபேற்றையடையுமாறு செய்தருளினர்.

பெத்தான்சாம்பான் அவ்வாறு வீடுபேறடைந்ததைக் குறித்து அவன் மனைவிக்கு ஐயமுண்டாயிற்று. பில்லியோ சூனியமோ வைத்துத் தன் கணவனை அப்பெரியார் கொன்றுவிட்டதாக எண்ணினள். அரசனுக்குந் தெரியப்படுத்தினள். அரசன் முதலாயினோரும் பெத்தான் சாம்பானின் வீடுபேற்றைக் குறித்து ஐயமுற்றனர். அதைக் குறித்து உமாபதிசிவத்தையுங் கேட்டனர். உமாபதிசிவம், தீக்கையினாலே சாம்பான் வீடுபேற்றை யெய்தியதாகக் கூறினர்.

அரசன் தெளிவடையாமல், அதற்குத் தக்க ஆதாரங் காட்டவேண்டு மென்றான். உமாபதிசிவத்தின் பூசை முழுக்கு நீரால் ஒரு முள்ளிச்செடி வளர்ந்து நல்வினையுடையதாகத் திகழ்ந்தது. உமாபதிசிவம், அரசன் முதலிய அனைவருங் காணும்படி அம் முள்ளிச்செடிக்குத் தீக்கைசெய்து வீடுபேற்றை அளித்தார். அச்செடி உடனே பட்டுப்போயிற்று. அரசன் முதலாயினோர் கொண்ட ஐயமும் அகன்றது. அவர்கள் உமாபதிசிவத்தைப் போற்றி வழிபட்டுச் சென்றனர்.

உமாபதிசிவத்தால் செய்யப்பட்ட சைவசித்தாந்த நூல்கள் மெய்கண்ட நூல்கள் பதினான்கு என்னும் பெயருடன் விளங்குகின்றன. கோயிற் புராணம் வடமொழிச் சிதம்பர மான்மியத்தின்படி இயற்றப்பெற்றது. அது நீண்டகாலம் அரங்கேற்றப்படாமலிருந்து, பிறகு கூத்தப்பிரான் கட்டளையால் கூத்தப்பிரான் முன்பு அரங்கேற்றஞ் செய்யப்பெற்றது.

---

## எ. தத்துவப்பிரகாசர்

### தோற்றம்

தத்துவப்பிரகாசர் என்னும் பெயருடையவர்கள் சிலர் வாழ்ந்திருந்ததாக வரலாறுகளால் தெரிகின்றது. இங்குக் கூறப்பெறும் தத்துவப்பிரகாசர் என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தவர். தஞ்சைமாவட்டத்தில் கும்பகோணம் கூற்றத்தில் சிவபுரம் என்னுஞ் சிற்றூரில் தோன்றியவர். இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் மறைந்துவிட்டது. தத்துவப்பிரகாசம் என்னுஞ் சீரிய நூலினைச் செய்தமையின் தத்துவப்பிரகாசர் என்னும் பெயரினைப் பெற்றார்.

### கல்வி கேள்வி

பிள்ளைமைக்காலத்தில் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கிய இவர் தகுந்த பருவத்தை யடைந்தபோது மெய்யறிவு நூல்களைக் கற்று இறைவன் திருவருட் செல்வத்தையும் வீடு பேற்றையும் பெறுதற்கு விழைந்தார். அந்நாளில் சீகாழிப்பதியிலே சிற்றம்பல நாடிகள் என்னும் பெரியார் பெற்றியிற் சிறந்தவராகப் பிறங்கி நின்றார். தத்துவப்பிரகாசர் சிற்றம்பலநாடிகள்பால் மெய்யறிவுரையை முறைமையாகப் பெற்றதுடன், சைவநூல்கள் பலவற்றையும் வழுவற ஓதியுணர்ந்தார். இலக்கண இலக்கியங்களினும் நிரம்பிய புலமையுடையவராக ஆனார். திருவாரூரில் எழுந்தருளிய தியாகப்பெருமான்மீது தத்துவப்பிரகாசர் இயற்கையாகவே பேரன்பு கொண்டிருந்தமையின் அப்பதியை அடைந்து ஆண்டுதானே உறைந்திருக்கலானார்.

### கோயில் மேற்பார்வை

அந்நாளில் திருவாரூர்த் திருக்கோயிலின் ஆட்சிமுறை விசயநகர வேந்தரான கிருட்டிண தேவராயரிடம்

இருந்தது. வடமலையார் என்பவர் அரசருக்குப் பதிலாக நின்று அரச காரியங்களையும் கோயிற்காரியங்களையும் பார்த்துக்கொண்டிருந்தார். அவ்வடமலையார் தத்துவப் பிரகாசருடைய அறிவாற்றலையும் நல்லொழுக்கத்தையுங் கண்டு களிப்படைந்தார். கோயில்பூசனை முதலியவைகளை மேற்பார்வையிட்டு வருமாறு ஏற்பாடு செய்திருந்தார். நாளடைவில் கிருட்டிணராயருக்கும் தத்துவப்பிரகாசருக்கும் பழக்கமும் தொடர்பும் ஏற்பட்டன. தத்துவப்பிர காசர் உண்மைச் சைவராகவும் சிவபெருமான் மாட்டுப் பேரன்புடையவராகவும் விளங்கியமையின் திருக்கோயில் வழிபாட்டு முறைகளிலே ஏற்படும் சிறிய தவற்றினைத் தானும் பொறாராயினர்.

### கோயில் வழிபாட்டாளர்கள்

திருவீழிமிழலைப்பட்டர்கள் அந்நாளில் கோயிற்பூசை களைச் செய்துகொண்டு வந்தார்கள். நாளடைவில் அவர் கள் பூசனை திருவிழாக்கள் முதலியவற்றை ஒழுங்கு முறை யாகச் செய்யாமல் கடனுக்குச்செய்து தொலைத்தனர். பட்டர்களின் போக்குத் தத்துவப்பிரகாசருக்கு மன வருத் தத்தை உண்டாக்கிற்று. முறைகேட்டைத் தடுப்பதற்குத் தத்துவப்பிரகாசர் முயன்றார். பன்முறையும் அறிவுரை கூறினர். அவைகள் யாதும் பட்டர்கள் காதுகளில் விழ வில்லை. இந்தப்பண்டாரம் நம்மை யாது செய்துவிடப் போகிறான்; இவனுடைய கூக்குரலை யார் கேட்கப்போகி றார்கள் என்று தம்பாட்டிற்குக் காரியத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

### கொடியிறக்காமல் தடுத்தல்

ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழா வந்தது. அத் திருவிழாவிற் செய்யப்பெறவேண்டியவைகளும் குறைவறச்

செய்யப்பெறவில்லை. அதிலும் பல குறைபாடுகள் நிகழ்ந்தன. இனிமேற் பொறுப்பது பயனில்லையென்று தத்துவப்பிரகாசர் முடிவு செய்தார். பட்டர்களைப் பார்த்து,

"மருவுபுகழ்க் கிட்ண மகாராய ராணை
அரிய வடமலையான் ஆணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதந் திருவாணை
தியாகக் கொடியறுக்கா தே."

என்னும் செய்யுளைப்பாடித் திருவிழாவின் இறுதியில் கொடியை இறக்காமல் தடுத்தார். பூசை ஒழுங்காக நடைபெறுதலைக் கிருட்டிணராயருக்கு அறிவிப்பாராய்,

"ஊழித் துலுக்கல்ல ஒட்டியான் தானுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டு—வாழி
சிறந்ததிரு வாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிருட்டிணரா யா."

என்னுஞ் செய்யுளை எழுதி அனுப்பிவைத்தார். கிருட்டிணராயர் தமிழ்நாட்டு ஆட்சியையும் மேற்கொண்டிருந்தமையின் தமிழ்மொழியிலும் அறிவாற்றலிற் சிறந்தவராக விளங்கினர். தத்துவராயர் விடுத்த செய்தியை உணர்ந்த அவர் உடனே அதுபற்றி உசாவுதற்கு ஏற்பாடு செய்தார். தவறிழைத்தவர்களை வேலையிலிருந்து விலக்கினர். இச்செயல் தத்துவப் பிரகாசருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ஆகவே அவர்,

"உண்ட வயிற்றில் உமிக்காந்தல் இட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்பம் அவலெள் அதிரசமுந் தோசைகளும்
கப்புவதும் போச்சே கனிந்து."

என்னும் பாட்டைப்பாடி மகிழ்ச்சியடைந்தார். பூசை முறைகளை ஒழுங்காகச் செய்யாமல் இழிதகவுடன் இயற்றினமையின் இச்செய்யுள்களில் பட்டர்களை வீழித்துலுக்

கர்கள் என்று குறிப்பிட்டார். கப்புவது என்றால் மெல்லுவதற்குக்கூட நேரமற்று ஒரேயடியாக விழுங்குதல்.

விடுதியின் அழகு

ஒருமுறை தத்துவப்பிரகாசர் சாளுவ நாயக்கர் என்பவரைக் காணச்சென்றார். அச்சாளுவ நாயக்கரும் கிருட்டிணராயருடைய அலுவல் பார்ப்பவராய் இருந்தமையின் அவரிடம் ஏதோ ஓர் அலுவலை முன்னிட்டுச் செல்லவேண்டியதாக நேரிட்டது. சாளுவநாயக்கர் தம் ஏவலாளர்களைப் பார்த்துத் தத்துவப்பிரகாசருக்கு ஒரு விடுதியைத் தோது செய்து கொடுக்குமாறு கூறினார். ஏவலாளர்கள் பெரியாரின் பெருமையைச் சிறிதும் உணராத சிறியார்களாதலின் தம் தலைவனின் கட்டளையை நிறைவேற்றுவாராய் ஒரு பாழடைந்த வீட்டைக் காட்டினர். அவ்வீட்டில் மூட்டைப் பூச்சிகள் நிறைந்திருந்தன. புழுதியோ மிகுதியாக இருந்தது. அதில் நீண்டகாலமாக யாருந் தங்காமலிருந்தமையின் பாழடைந்ததாகவுங் காணப்பட்டது. படுப்பதற்கு என்று காட்டிவிட்ட பாயோ பீற்றல். தலையணையோ வைக்கோலால் ஆகியதாக இருந்தது. அதனைப்பார்த்த தத்துவப்பிரகாசருக்கு ஒருபுறம் நகைப்பும் ஒருபுறம் வருத்தமும் உண்டாகியது; உடனே அவர்,

> "மூட்டை கலம்புழுதி முக்கலம் சுத்தப்பாழ்
> வீட்டை விடுதியாய் விட்டாயே—போட்ட
> தடுக்கெல்லாம் பீறல் தலையணையேல் வைக்கோல்
> படுக்கலா மோசொல்லப் பா."

என்னுஞ் செய்யுளை எழுதித், தம்முடன் வந்திருந்த மாணவராகிய திருத்தோணியப்பர் என்பவர் இடங் கொடுத்து அதனைக் கொண்டுபோய்ச் சாளுவநாயக்கரிடம் கொடுத்துவருமாறு பணித்தார். திருத்தோணியப்பராகிய மாணவரும் கல்வி கேள்விகளில் வல்லவர். செய்யுள் பாடுங்

திறமுடையவர். தம் ஆசிரியருக்குக் கொடுக்கப்பட்ட விடுதியைக் குறித்து அவருக்கும் மிகுந்த மனவருத்தம் உண்டாகியது. அவர் தம் ஆசிரியருடைய பாட்டைக் கொண்டுபோய் சாளுவநாயக்கரிடம் கொடுத்தவுடன் அமையாமல், "என்ன பெரியார்க்கு இப்படியா விடுதி கொடுக்கச் செய்வது? எம் ஆசிரியப் பெருந்தகையாரைத் தாங்கள் மிகவும் எளியவராகவா எண்ணிவிட்டீர்கள்? உலகில் ஆயிரக்கணக்கான புலவர்கள் இருப்பார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் புதிய நூல்களை இயற்றக்கூடிய ஆற்றலமைந்தவர்களாக இருக்கமாட்டார்கள். அந்த ஆயிரவரில் ஒருவன்தான் நூலியற்றும் சால்புடையவனாக அமைந்திருப்பான். நூலியற்றும் சால்புடைய ஆயிரம் புலவர்களுக்குள் ஒருவன்தான் அந்தாதி, தூது, உலா, பரணி, கோவை முதலிய சிறந்த நூல்களைச் செய்யக்கூடிய உயர்ந்தவனாக இருத்தல் கூடும். இத்தகைய உயர் அறிஞர்கள் ஆயிரம்பேர்களுக்குள் ஒருவன்தான் நாடகநூலியற்றும் நல்லியல்புடையவனாவான். நாடகப்புலவர்கள் ஆயிரம்பேர்களுக்குள் ஒருவன்தான் பெருங் காப்பியஞ் செய்யக்கூடிய பீடுடையவனாக விளங்குவான். பெருங் காப்பியஞ் செய்யக்கூடிய புலவர்கள் ஆயிரம்பேர்க்குள் ஒருவன்தான் ஐந்திலக்கணஞ் செய்யக்கூடிய மைந்தவனாக இருப்பான். ஐந்திலக்கணப் புலவர்கள் ஆயிரம் பேர்களுக்குள் ஒருவன்தான் பிறர் மதத்தை ஒழித்துக் கட்டக்கூடிய தருக்கநூற் புலவனாக (சொற்போர் நூல் அறிஞனாக) இருப்பான். இத்தகைய தருக்கநூற் புலவர்கள் ஆயிரம்பேர்களுக்குள் ஒருவன்தான் மெய்யறிவைப் போதிக்கும் நல்லாசிரியனாக அமைந்திருப்பான். இத்தகைய நல்லாசிரியர்கள் ஆயிரம்பேர்களுள் ஒருவன்தான் சிவ பரம்பொருளைப் போற்றும் தவம்பெறு தத்துவஞானி

யாக விளங்குவான். எம்முடைய ஆசிரியப் பெருந்தகை இத்தகைய மெய்யறிவாளராவார்" என்னும் பொருளை அமைத்து,

"ஆயிரம் புலவோரில் ஒருவன் பிரபந்தகவி
அவரா யிரர்க்குள் ஒருவன்—
அந்தாதி தூதுலாப் பரணிகோ வைக்கமகன்
அவரா யிரர்க்குள் ஒருவன்,
போயிடம் பெறுநாட கபுரா ணிகனவன்
போலா யிரர்க்குள் ஒருவன்—
பொருட்பெரும் காப்பியம் புகல்வாக்கி மற்றவன்
போலா யிரக்குள் ஒருவன்,
பாயிரந் தருபஞ்ச லட்சண விதானியப்
படியா யிரர்க்குள் ஒருவன்—
பரசமய தருக்கநூல் பகர்வாதி மற்றுமப்
படியா யிரர்க்குள் ஒருவன்,
தேயமெண் டிசைபரவு தேசிகோத் தமனத்
திறத்தா யிரர்க்குள் ஒருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுந்
தெய்வச் சிவக்கி யானியே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர். இதனல் சாளுவ நாயக்கர் தத்துவப்பிரகாசரின் பெருமையை நன்கு உணர்ந்து கொண்டதுடன் முற்பாட்டால் ஏவலாளர்கள் தம் கடன் கழிப்பாராய் ஏதோ ஓர் மாட்டுக் கொட்டகையைத் தத்துவப்பிரகாசருக்கு விடுதியாகக் காட்டியிருக்கிறார்கள் என்றும் உணர்ந்து வேறு நல்ல இடங் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார். ஆசிரியரும் மாணவரும் சென்ற அலுவலை முடித்துக்கொண்டு தமது இருப்பிடந் திரும்பினர்.

போலி ஒட்டக்கூத்தப் புலவர்

ஒருநாள் தத்துவப்பிரகாசர் இடத்திற்கு ஒரு போலிப் புலவர்வந்தார். தாம்பாடியதாகச் சில மட்டமான பாட்டுக்

களைக் கூறினார். அப்பாட்டுக்கள் மிக வெள்ளையாகவும் தவறுகள் நிறைந்தனவாகவும் காணப்பட்டன. தத்துவப் பிரகாசர் அந்தப் போலிப் புலவரைப் பார்த்து, "நம்மு டைய பெயர் யாது?" என்று கேட்டார். அந்தப் புலவர், 'ஒட்டக்கூத்தர்' என்று பதில் உரைத்தார். அவ்வளவில் தத்துவப்பிரகாசருக்கு நகைப்பும் சினமும் உண்டாயின. அந்தப் போலிப் புலவரைப் பார்த்து, 'சிறிதும் அஞ்சாமல் ஒட்டக்கூத்தர் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கின் றீரே, உம்முடைய பாட்டுக்களோ சுவையற்றனவாகவும் கீழ்த்தரமானவைகளாகவும் இருக்கின்றனவே, நீர் இவ் வாறு பெயர்வைத்துக்கொண்டிருந்தால் அறிஞர்கள் உம் முடைய வாய்ப்பற்களைப் பிடுங்கிவிடமாட்டார்களா? முது கெலும்பை முறித்துவிடமாட்டார்களா? உம்முடைய பாட்டுக்கள் இவ்வளவு கீழானவைகளாக இருக்கும்போது ஒரு மட்டமான பெயர் போதாதா? பெரும்புலவரான ஒட்டக்கூத்தருடைய பெயரா வேண்டும்? என்று செய் யுள் மூலமாக இடித்துரைத்தார்.

"பறியாரோ நின்வாயிற் பல்லதனைப் பாரோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச்—சிறியவொரு
மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே யானக்கால்
ஒட்டக்கூத் தன்தான் உனக்கு."

இதனைக் கேட்ட புலவர் நாணிச் சென்றார்.

பரிசில் பெற்ற பட்டாடை

தத்துவப்பிரகாசர் காலத்தில், சீநக்கர் என்னும் பெயருடைய சிற்றரசர் ஒருவர் வெற்றியிற் சிறந்தவராய்ப் பெற்றியிற் பொலிந்து விளங்கினார். தத்துவப்பிரகாசர் அச் சீநக்கருடைய பண்புகளை ஒரு செய்யுளில் அமைத்து அருமையான செய்யுள் ஒன்றைப் பாடினார். பாட்டின்

சிறப்பையுணர்ந்த சீநக்கர் விலையேறப்பெற்ற அரிய பட்டாடை ஒன்றை நன்கொடையாக வழங்கினார். அப்பட்டாடை நீண்ட காலத்திற்குமுன் வாங்கி வைக்கப்பட்டிருந்தது. தத்துவப்பிரகாசர் அதனைப் பிரித்துப் பார்த்தார். அப்பட்டாடை முழுதும் பூச்சியால் நன்கு துளைக்கப் பட்டுப் பல கண்களுடையதாக விளங்கியது. ஆடையின் நிலைமையைக்கண்ட தத்துவப்பிரகாசர் அதனை அப்பால் வைத்துவிட்டு,

"வெற்றிப் பாடுங் குணப்பாடும் வீரப் பாடும் ஒருகவியில்
தெற்றிப் பாட அதுகண்டு சீநக் கரசர் துகிலீந்தார்
பற்றிப் பார்க்க அதனூடே பலதே வேசர் வீற்றிருந்தார்
சுற்றிப் பார்க்கப் பயப்பட்டுத் தூர வைத்துத் தொழுதோமே"

என்னுஞ் செய்யுளைப் பாடினார். பல ஓட்டைகள் இருந்தமையின் ஆயிரங் கண்களையுடைய இந்திரன் என்று பொருள் வருமாறு பலதேவேசர் என்று குறிப்பிட்டார்.

### பிறரைப் போற்றும் பண்பு

தத்துவப்பிரகாசர் நல்ல பேரறிஞராதலின் தவறு கண்ட இடத்தில் கண்டித்து இடித்துரைக்கவும் மேன்மை கண்ட இடத்தில் போற்றிப் புகழவும் பின்வாங்கினாரல்லர். ஒருமுறை இவர் கிருட்டினதேவராயருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அந்நாளில் இருந்த கூத்தனூரப்பன் வாலகோகிலம் என்னும் இரு புலவர்கள் கிருட்டிணதேவ ராயர் மீது சில செய்யுட்கள் செய்து கொண்டுவந்திருந்தனர். அச் செய்யுட்கள் எவ்வாறுள்ளனவென்று இராயர் பிரகாசரை வினவினார். அச் செய்யுட்களோ சிறந்தவைகளாக விளங்கின. அப்பாடல்களின் மேன்மையையும் இனிமையையுங் கண்ட இவர், கூத்தனூரப்பன் பாடல் பால் போன்றது. வாலகோகிலத்தின் பாடல் பாலுக்குப் போடுஞ் சர்க்கரையைப் போன்றது. எங்களுடைய பாடல்

களோ உப்பையும் பெருங்காயத்தையும் போன்றது என்னும் பொருளமைத்து,

“மன்கவி தாவும் பொழிற்கூத்த னூரப்பன் வாய்த்தலைமன்
தன்கவி தெள்ளிய பால்வால கோகிலந் தானுரைத்த
நன்கவி பாலுக் கிடுசர்க் கரைக்கவி நாங்கள்சொல்லும்
புன்கவி உப்பொடு காயமென் றேசொல்லிப் போற்றுவரே”

என்னுங் கட்டளைக் கலித்துறையைப் பாடினர். இதனைக் கேட்ட ராயர் தத்துவப்பிரகாசரின் உயர்குணத்தைப் பெரிதும் பாராட்டினர்.

### தீயரை அடக்க முடியாமை

இவர் காலத்தில் ஆரூரில் தீயர்கள் சிலர் தம் மனம் போனவாறு தீமையைத் தினமும் செய்து பலருக்கும் அல்லல் விளைத்து நின்றனர். அவர்தம் அல்லலைப் பொறுதார் சிலர் தத்துவப் பிரகாசரைக்கண்டு, ‘பெரியீராகிய தாங்கள் இந்தச் சிறியோர்களை அடக்கி ஒடுக்கி நல்வழிக்குக் கொண்டுவருதல் கூடாதா? அவ்வாறு செய்தால் எல்லோருக்கும் பேருதவியாக இருக்குமே என்று வேண்டிக்கொண்டனர். தத்துவப்பிரகாசர், முற்கூறியவாறு கூறியவர்களைப் பார்த்து, “நீங்கள் கீழ்மக்களின் தன்மையை அறியாமற் பேசுகிறீர்கள். கீழ்மக்கள் பொதுவான தன்மையுடையவரல்லர். அவர்கள் மிகவுங் கொடியர். ஒரு குரங்கு நண்டாற் பிடிக்கப்பெற்று, தேளால் கொட்டப்பெற்று, கள்ளைக்குடித்துப், பேயால் பிடிக்கப்பட்டுக், காஞ்சொறியின் பொடியும் தூவப்பெற்று இஞ்சியைத் தின்று, கொள்ளிக்கட்டையைக் கையிற்பிடித்து எழுந்தால் எவ்வளவு ஆட்டங்களைப்போட்டுத் தொல்லைகளைச் செய்யுமோ அவ்வளவையும் ஒரு காரணமும் இல்லாமலே செய்யக்கூடியவர்கள். இத்தகையோர்க்குச் சிறிது பொருள்

உண்டாகி அற்ப வாழ்வும் உண்டாகிவிட்டால் அவர்கள் கூத்துச் சொல்லுந்தரத்ததன்று. பலவாறு தம்மைப் பெருமைப்படுத்த எண்ணிப் பல்லக்கிலேறியும் யானையிலேறியும் திரிவர். இத்தகையோரை வழிக்குக் கொண்டுவருவதென்பது எவராலும் இயலாது. யாமும் எம்போலியரும், பாம்பு கடித்தால் அதன் நஞ்சைப் போக்கவல்லோம்; பேயறைந்தால் நீறுபோட்டு அக்குற்றத்தையும் கெடுக்க வல்லோம்; வேம்பினது கசப்பொழியுமாறு அதனைக் கறியாக்கவுஞ் செய்வோம்; யானையினது மிகுந்த மதத்தையும் கெடுப்போம்; இறக்கும்பொழுது கூடத் திடமாகப் பேசுவோம்; நாங்கள் இந்த உலகத்தில் கல்லாத கலை ஒன்றுமே இல்லை. ஆனால் தீயவர்களை நல்லவர்களாக்கி அவர்கட்கு நற்குணத்தை உண்டாக்கும் திறத்தைமட்டும் அறியமுடியாமல் திகைத்துக்கொண்டிருக்கின்றோம்" என்னும் பொருளை அமைத்து,

"குரங்குமாய் நண்டுகட்டித் தேளுங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்தே பேயு மேறி,
இரங்கவருங் காஞ்சொறியின் பொடியுந் தூவி
இஞ்சிதின்று கொள்ளிபிடித் தெழுந்தாற் போலத்
தருங்கருணை இல்லாத புல்லர் வாழ்வில்
தண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவி லேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்.

பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தால் நீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியும் ஆக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேசவல்லோம்
தரணியின்மேல் கல்லாத தொன்றும் இல்லை
தீம்பரைநல் லவராக்கிக் குணமுண் டாக்கத்
திறமதறி யாமல்நின்று திகைக்கின் றோமே."

என்னும் இரண்டு செய்யுட்களைப் பாடினார். இதனைக் கேட்டோர், தீயோர்களின் தன்மையை ஒருவாறு உணர்ந்துகொண்டதல்லாமல் அவர்களை எத்தகையோராலும் நல்வழிக்குக் கொண்டுவர முடியாதென்பதையும் உணர்ந்து சென்றார்கள்.

சிற்றுணர்வோர் சிலர்

ஒருமுறை சிற்றுணர்வோர் சிலர் தத்துவப்பிரகாசரைப்பற்றி உரையாடத் தொடங்கினர். அவ்விடத்தில் தத்துவப் பிரகாசருடைய அன்பர்கள் சிலரும் இருந்தனர். அவர்கள் நன்னூல் சின்னூல் முதலிய இலக்கண நூல்கள் சிலவற்றை பொட்டை நெட்டுருவாக்கிப் பாடங் கேட்டிருந்தனர். ஆயினும் இலக்கணத்தை இலக்கியத்தொடு அமைத்துப் பயன்படுத்தும் ஆற்றலுடையவர்கள் அல்லர். எனினும் வாய்க்கொழுப்பு மிகுதியும் உடையவர்கள், 'சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர், முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே' என்பது பெரியார் வாக்கன்றோ? அச் சிற்றுணர்வோர் தத்துவப்பிரகாசரின் அன்பராயினரைப் பார்த்து, "தத்துவப்பிரகாசர் சைவசித்தாந்தத்தைத் தான் அறிவாரேயல்லாமல் அவருக்கு இலக்கணம் தெரியுமோ" என்று செருக்குடன் வினவினர். தத்துவப் பிரகாசரின் அன்பர்கள் இச்செய்தியைத் தத்துவப்பிரகாசரிடம் உரைத்தனர். அந்தச் சிற்றுணர்வோரின் தன்மையை நன்கு உணர்ந்திருந்த தத்துவப்பிரகாசர் ;

"கவடிகளா கத்திரியும் கள்ளர்காள் நன்னூல்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர்—குவலயத்து
காட்டுக் கெரித்தநிலாக் கண்ணிரண்டும் இல்லாதான்
வீட்டுக் கெரித்த விளக்கு."

என்னுஞ் செய்யுளைப்பாடி அத் தீயோரின் தன்மையைப் பலரும் நன்கு உணர்ந்துகொள்ளுமாறு செய்தனர்.

இவர்செய்த நூல்

தத்துவப்பிரகாசர் செய்த நூல்கள் பலவற்றுள் இப்பொழுது உள்ளது தத்துவப்பிரகாசம் என்னும் நூல் ஒன்றுமட்டுமே. இந்நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனையும் நன்கு விளக்குவது. அந்நூலின் சந்தானகுரவர் வணக்கச் செய்யுள் பின்வருவதாகும்.

"நந்திசனற் குமரன்சத் தியஞானி, யடிசேர்
நாதனும் பரஞ்சோதி மெய்கண்ட தேவன்
மூந்துசண் பையர்தலைவன் கொற்றவன் குடியே
முதுபதியாம் உமாபதியாம் முறைமையிலே யாண்ட
செந்திருவின் பயன்சிற்றம் பலநாடி ஞன்மெய்ச்
சிவஞான வடிவான திருமேனி அடைவாய்த்
தந்தவிவர் சந்தான குரவரிவர் மலர்த்தாள்
தப்பாம லேமனத்தில் ஒப்பாக வைப்பாம்."

## அ. கமலை ஞானப்பிரகாசர்

பிறப்பும் கல்விப் பயிற்சியும்

ஞானப்பிரகாசர் என்னும் பெரியார், பிறந்தார்க்கு வீடுபேறளிக்கும் அரும்பெரும் பதியாகிய திருவாரூரிலே இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறுண்டுகட்குமுன்பு தோன்றினர். தக்ககாலத்திலே கல்விப்பயிற்சி செய்விக்கப்பட்டார். ஆகமநூற் கல்வியும் சமயநூற் கல்வியும் கற்றார். இவருடைய பிள்ளைப்பெயர் மாசிலாமணி என்றும், மெய்யறிவுச் செல்வத்தைப் பெற்றபிறகு ஞானப்பிரகாசர் என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர். கமலை என்பது திருவாரூரைக் குறிக்கும். இவர் திருமணஞ் செய்து கொள்ளத்தக்க செவ்வியை அடைந்தபோது ஒத்தகுலமும் ஒத்தகுணமும் ஒத்த அழகும் உடைய ஓர் ஒண்டொடி

யைத் திருமணஞ் செய்துகொண்டார். தம் மனைவியோடு இல்லறத்தை இனிது நடத்திவந்தார். குலமுறைக்கேற்ப ஆசிரியமுழுக்குச் செய்விக்கப்பெற்றார். நாட் கடன்கள் சிறிதும் வழுவாது முறைப்படி செய்துகொண்டு வந்தார். பிறருக்குச் செய்யவேண்டிய தீக்கை முதலியவைகளையும் முறைப்படி செய்து வைத்தார். முப்பதாம் ஆண்டளவில் மெய்யறிவினை வழங்கத்தக்க ஆசிரியரை நாடி நின்றார். ஆரூர்த் தியாகப்பெருமானே குருமூர்த்தியாகத் தோன்றித் திருவருள் புரிந்தார்.

### பிரகாசரின் வியத்தகு செயல்கள்

ஞானப்பிரகாசர் இறைவன் திருவருளை யடைந்த பிறகு சிவபூசை அடியார்கட்குத் தீக்கை செய்தல் முதலியவைகளை மிகுதியாகச் செய்துகொண்டிருந்தார். திருவாரூர்த் தியாகப்பெருமானது கோயிற்கட்டளைக் காரியங்களையும் உசாவல் புரிந்துகொண்டு வந்தார்.

### ஒடிந்த துண்டு சரியாதல்

ஒருநாள் ஞானப்பிரகாசர் அடியார்கள் சூழத் திருக்கோயிலுக்குச் சென்றார். அன்று பக்தக்காட்சி என்னும் விழா நடந்தது. அப்பொழுது தியாகர் திருவுலாப்போந்து திருக்கூத்தாடினார். அப்பொழுது தண்டு முறிந்து விழத் தொடங்கியது. ஆண்டிருந்த ஞானப்பிரகாசர் முறிந்த தண்டு கூடி ஒழுங்காகுமாறு :

"அண்டமுழு தும்ஆழ்ந்து போகாமல் என்றும்போல்
பண்டை நிலைநிறுத்தும் பாதனே—துண்டுபட்ட
அசயா நிருத்தம் அசையும் படுதண்(டு)
இசையும் வகையருள்வாய் இன்று:"

என்னும் வெண்பாவைப் பாடினார். அவ்வளவில் அனைவரும் வியப்படையுமாறு முறிந்த தண்டு ஒழுங்காகியது.

குட்டநோய் தீர்த்தல்

திருமறைக்காட்டிலே ஒரு பார்ப்பனன் இருந்தான். அவன் மிகுந்த செல்வம் உடையவன். பழவினைப் பயனால் அவனுக்குக் குட்டம் என்னும் குறைநோய் உண்டாயிற்று. அதனாலே மிகவும் வருந்தினான். யாது செய்தும் நோய் தீரவில்லை. குறை நோயானது குறையாமற் பெருகித் துன்புறுத்தியது. அப்பார்ப்பனன் அல்லல் உறுவதைப் பெரியார் ஒருவர் கண்டார். 'ஆரூர் சென்று ஞானப்பிர காசரைக் கண்டு அவருடைய அருளைப் பெற்றால் நோய் தீர்ந்து நலம் அடையலாம். அப்பெரியார் எத்தகைய கொடிய பிணிகளையுந் தீர்க்கக்கூடியவர். பிறவிப் பிணியையே போக்கக்கூடிய அவருக்கு இந்நோயைப் போக்குதல் ஒரு பெரிய காரியம் அன்று. ஆதலால், நீ ஆரூர் சென்று அப்பெரியாரைக் கண்டு குறையிரப்பாயாக' என்று கூறினார். பெரியார் மொழிகளைக் கேட்ட குறை நோய்ப் பார்ப்பான் உடனே புறப்பட்டுத் திருவாரூரை யடைந்தான். ஞானப்பிரகாசரைக் கண்டு குறையிரந்து நின்றான். ஞானப்பிரகாசர் உள்ளம் இரங்கினார். தியாகப் பெருமானைக் குறித்து:

"வேத வனமறையோன் மெய்யுறுதீக் குட்டமதின்
வாதனையை நீக்கி மகிழுறவே—ஏதமிலாச்
செய்யசடை யானே பெருமானே யேவர்க்கும்
ஐயமிலா திப்போ தருள்."

என்னும் வெண்பாவைப் பாடினார். அவ்வளவில் பார்ப்பனனுடைய குறைநோய் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிச் சின்னாளில் முழுதுங் குணமாகியது. ஞானப்பிரகாசர் அப் பார்ப்பனனைப் பார்த்து 'நீ மறைக்காடு சென்று இறைவனை வழிபட்டிருப்பாயாக' என்று கட்டளையிட்டார். அவனும் அவ்வாறே சென்றான்.

அழகன் மெய்யறிவு பெறுதல்

வல்லம் என்னும் ஊரிலே அழகன் என்னும் பெயருடைய ஒரு வணிகன் இருந்தான். அவன் மிகுந்த செல்வம் உடையவன். கல்வி கேள்விகளிலும் மேம்பட்டு விளங்கினன். அவனுக்குப் புறப்பற்று நீங்கியும் மெய்யறிவு உண்டாகவில்லை. திருவாரூரில் உள்ள ஞானப்பிரகாசருடைய பெருமைகளை அவன் உணர்ந்தான். அவரிடஞ் சென்றால் தன் ஐயப்பாடுகள் முற்றும் அகலும் என்று எண்ணினன். புறப்பட்டுத் திருவாரூரை நோக்கி வந்தான். அவன் திருவாரூரை அடைதற்குள் ஞானப்பிரகாசர் அத்துவிதசாரம் என்னும் ஓர் அரிய நூலை இயற்றினர். தம் மாணவர்களிடங் கொடுத்து 'அழகர் என்னும் பெயருடையார் ஒருவர் இங்கு வருவார்; அவரிடம் கொடுங்கள்' என்று கட்டளையிட்டருளினர். அழகர் வந்தவுடனே மாணவர்கள் அந்நூலை அவரிடங் கொடுத்தனர். அவர் அதனைப் படித்துப் பார்த்தார். அவருடைய ஐயந்திரிபுகள் எல்லாம் அறவே நீங்கின. அறிவுரை வழங்கலின்மையால் மெய்யறிவு கைவரப் பெற்றார் அல்லர். ஞானப்பிரகாசரை நேரிற் காணவேண்டும் என்னும் அவா உண்டாகியது. அவருடைய வீட்டையடைந்து ஞானப்பிரகாசரைக் கண்டு வணங்கினர். மெய்யறிவைப் போதித்தருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். பிரகாசர் அவருக்கு மெய்யறிவு வழங்கியருளினர். அருளுரை பெற்ற அழகர் ஆசிரியரை வணங்கிப் போற்றித் தமது ஊரையடைந்தார்.

தனபதி அருள் பெறுதல்

பாண்டிநாட்டில் உள்ள சீவில்லிபுத்தூரிலே குருபாலன் என்னும் பெயருடைய ஒரு வணிகன் இருந்தான்.

அவனுக்குத் தனபதி என்னும் பெயருடைய ஆண் மகவு ஒன்று தோன்றிற்று. அம்மகவு வளர்ந்து சிறந்த அறிவைப் பெற்றுத் திகழ்ந்தது. அவனுக்குப் பதினாறு ஆண்டு நிரம்பியபோது அவன் ஆசிரியனைத் தேடி அலையத் தொடங்கினான். மதுரையம்பதியை அடைந்து மதியணியழகன் மலரடியைப் போற்றினான். தன் குறையைத் தீர்த்தருளுமாறு இறைவனை வேண்டிக்கொண்டான். அவன் உறங்கும்போது சொக்கேசர் கனவில் தோன்றினார். 'நம்முடைய வழிமுறையிலே வந்த ஒருவன் ஞானப்பிரகாசன் என்னும் பெயருடன் திருவாரூரில் இருக்கிறான்; அவனிடஞ் சென்று அருளுரை பெறுவாயாக' என்று கூறி மறைந்தார். திருவாரூரில் ஞானப்பிரகாசரிடமுந் தோன்றினார். 'மதுரையில் இருந்து ஒரன்பன் நாளைக்கு வருவான் அவனுக்குத் தீக்கை செய்து அறிவுரை வழங்குவாயாக!' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். ஞானப்பிரகாசரும் இறைவன் திருவருளை எண்ணி மகிழ்ந்திருந்தார். தனபதி மறுநாள் மதுரையை விட்டுப் புறப்பட்டான். இடையில் உள்ள திருப்பதிகளையெல்லாம் வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்தான். ஞானப்பிரகாசரைக் கண்டு வணங்கினான்.

"கண்டேன் இப் பாசம் கழிந்தேன் அமுதமுகந்
துண்டேன் சிவானந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலை செங்கமலப் பொற்பாதன்
ஞானப்ர காசனையே நான்."

என்று போற்றிப் புகழ்ந்தான். ஞானப்பிரகாசர் மாணவரது நிலைமையை ஆராய்ந்து ப்ார்க்க எண்ணினார். இருக்குமாறு பணித்தார். தம் காரியங்களை முடித்துக்கொண்டு வழக்கம்போல் மாணவர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்றார். இறைவழிபாடு செய்துகொண்டு இல்லந்திரும்பி

ஞர். இல்லினுட் புகுமுன் தம் அடியவர்களைப் பார்த் 'நில்லுங்கள்'' என்று கட்டளையிட்டுத் தாம் இல்லத்திற்குட் புகுந்தார்.

### வெளியில் நிற்றல்

அடியவர்கள் எல்லோரும் விடைபெற்றுக்கொண்டோம் என்று தத்தம் இல்லங்கட்குச் சென்றுவிட்டார்கள். தனபதிமட்டும் ஆசிரியருடைய ஆணையைக் கடப்பதற்கு அஞ்சி நின்ற இடத்திலேயே நின்றார். அன்று இரவிற் பெருமழை பெய்தது. ஆயினும் மழைத்துளி தனபதிமீது விழவேயில்லை. அவரைவிட்டுச் சுற்றிலும் பெய்து சென்றது. மறுநாட்காலையில் மற்றை மாணவர்கள் இப் புதுமையைக் கண்டனர். ஆசிரியர் இடத்திற்சென்று அறிவித்தனர். மாணவருடைய பக்குவநிலையைக் கண்ட ஞானப்பிரகாசர் அவருக்குத் திருநோக்கால் அறிவுத் தீக்கை செய்தார். ஞானசம்பந்தர் என்று தீக்கைப்பெயர் வழங்கினர். சொக்கலிங்கப் பெருமானை ஞானபூசனையாக எழுந்தருள்வித்துக் கொடுத்தார். மேற்கூறியவாறு அருள்பெற்ற ஞானசம்பந்தர், சிவப்பதிகள்தோறுஞ் சென்று திரும்பினர். தருமபுரத்தில் தங்கி மாணவர்கட்கு அருள்புரிந்துகொண்டிருந்தார்.

### கண்ணொளி வழங்கல்

ஞானப்பிரகாசர் தென்னாட்டில் உள்ள சிவப்பதிகட்குச் சென்று சிவ வழிபாடு செய்ய எண்ணினர். புறப்பட்டுப் பல பதிகளை வழிபட்டுக்கொண்டு மதுரையை அடைந்தார். பொற்றாமரையில் நீராடினர்; அங்கயற்கண் அம்மையைப் பங்கிலுடைய சொக்கலிங்கப் பெருமானைப் போற்றி வழிபட்டார். சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். அந்நா

ளில் சொக்கலிங்கப்பெருமானைப் பூசித்துக்கொண்டிருந்த ஒரு மறையவன் பழவினைப் பயனால் தன்இரு கண்ணொளி யையும் இழந்து மிகுந்த துன்பமடைந்தான். அம்மறைய வன் ஞானப்பிரகாசருடைய பெருமையைக் கேள்விப்பட் டான். அவருடைய இருப்பிடத்தை யடைந்து தன் னுடைய குறையைக் கூறி வேண்டிக்கொண்டான். அரு ளுடையாராகிய ஞானப்பிரகாசர் இறைவனை வேண்டிக் கொண்டார். கூடற்பெருமான் திருவுளம் இரங்கினார். மறைந்த பார்வை மீண்டும் மறையவனுக்கு உண்டாயிற்று.

கானப்பேரில் மழைவருவித்தல்

ஞானப்பிரகாசர் சிலநாள் அங்கிருந்து பின் மது ரையைவிட்டுத் திருக்கானப்பேர் என்னுங் காளையார் கோயிலை நோக்கிச்சென்றார். அக்காலத்தில் அவ்வூரிற் சமணர்கள் மிகுந்திருந்தனர். ஞானப்பிரகாசரின் வரு கையை உணர்ந்த சைவர்கள் சிறப்புடன் வரவேற்கத் தொடங்கினர். சமணர்கள் பிரகாசரின் வரவைக்கண்டு உள்ளம் புழுங்கினார்கள். பிரகாசரைச் சிவிகையுடன் இவ் வூருக்குள் நுழையவிடமாட்டோம் என்றார்கள். 'பிரகாசர் மெய்யறிவு கைவரப்பெற்றவராயின், இவர் வணங்குங் கட வுளாகிய சிவன் உண்மைக் கடவுளாயின் இப்பொழுது இவ்வூரிலே மழைபெய்யுமாறு செய்வித்தல் வேண்டும்; அவ்வாறு செய்விப்பாராயின் இவர் உண்மைப் பெரியார் என்று ஒப்புக்கொள்வோம், சிவிகையோடு ஊருக்குள் நுழையவும் உடன்படுவோம்' என்று கூறித் தடுத்தார்கள். ஞானப்பிரகாசர் மாணவர்களால் இதனை உணர்ந்தார். கானப்பேர்க் கடவுளைத் திருவுள்ளத்தில் எண்ணிப் போற் றினார். ஊர்வாழும் மக்கள் உவகைப் பெருக்கையடையு மாறு பெருமழை பொழியத் தொடங்கியது. அந்நாட்டில் மழைபெய்து நீண்டநாட்கள் ஆயிருந்தமையின் அம்மழை

யால் நாட்டிற்கு மிகுந்த நன்மையுண்டாயிற்று. பிரகாசரின் பெருமையைச் சமணர்களும் சைவர்களும் பெரிதும் புகழ்ந்து போற்றினார்கள். மிகுந்த சிறப்புடன் அவரைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். ஞானப் பிரகாசர் இறைவனை வணங்கிப் போற்றினார். நின்று போன பூசை முதலியவைகளைக் குறைவற நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்.

அந்நாட்டுத் தலைவன் பெரியாரை வணங்கித் தனக்கு மக்கட்பேறு உண்டாகுமாறு திருவருள் செய்தல்வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். பிரகாசர் அவனுக்கு அருள் புரிந்து பலபதிகளையும் வழிபட்டுக்கொண்டு பிறகு வடநாட்டுக்குச் சென்றார்.

காசியம்பதியில்

கச்சி, திருக்காளத்தி முதலிய திருப்பதிகளைப் போற்றி வழிபட்டுக்கொண்டு இறுதியில் காசியை அடைந்தார். உலகநாதப்பெருமானைப் போற்றிக்கொண்டும் கங்கையில் நீராடிக்கொண்டும் அங்கு சிலநாள் தங்கியிருந்தார். காசிராசன் மகனை ஒருநாள் பாம்பு கடித்துவிட்டது. அதனைப் போக்குவதற்கு அவன் பலவகையான மருத்துவங்களைச் செய்துபார்த்தான். எதனாலும் நஞ்சு இறங்கவில்லை. என் மகனைக் காப்பாற்றத் தக்கார் எவரும் இலரோ என்று கதறினான். உறவினரால் ஞானப்பிரகாசரது பெருமையை உணர்ந்தான். அவர்பால் வந்து வேண்டிக்கொண்டான். பிரகாசர் அரசனது துன்பத்தைக் கண்டு உள்ளம் இரங்கினார். சிவபெருமானை எண்ணித் திருநீறு சாத்தினார். அவ்வளவில் நஞ்சு இறங்கிச் சிறுவன் பிழைத்தான். மழைவளம் அற்றிருந்த அந்நாட்டில் மழை பெய்யவும் செய்வித்தார். அதனால் பல நன்மைகள் உண்

டாயின. பிறகு அரசன்பால் உடன்பாடு பெற்றுக்கொண்டு தென்னாட்டை நோக்கிப் புறப்பட்டார்.

காஞ்சியம்பதியில்

காஞ்சிமாநகரை அடைந்து இறைவனை வணங்கிக் கொண்டு ஒரு திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். அக் காலை கச்சியிலிருந்த அரசன் பிரகாசரின் பெருமையை உணர்ந்தான். அவரையடைந்து போற்றினான். தனக்கு வீடுபேற்றினை அருளுமாறு வேண்டிக்கொண்டான். அரசன் துறவுபூணின் நாடு கெட்டுவிடும் என்பதை அவனுக்கு எடுத்துக்காட்டினார். அவன் எண்ணத்தை மாற்றினார். பிறகு அங்கிருந்து புறப்பட்டார். தில்லை, சீகாழி முதலிய திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்தார்.

ஞானப்பிரகாசர் இயற்றிய நூல்கள்

**அநுட்டானவிதி** :—சைவர்கள் செய்யவேண்டிய அநுட்டான முறைகளைத் தொகுத்து அநுட்டான விதி என்னும் அகவல் நூலைச் செய்தார்.

**புட்பவிதி** :—கடவுள் வழிபாட்டிற்குரிய பலவகை மலர்கள்; அவைகளை எடுக்கவேண்டிய காலம்; அவற்றைக் கொண்டு இன்னின்ன கடவுளர்களை வழிபடவேண்டும் என்பவைகளைப்பற்றிய புட்பவிதி என்னும் நூலைச் செய்தார்.

**பூமாலை** :—மலர்களால் தொடுக்கப்பெறும் பலவகை மாலைகளின் தன்மையைக் கூறும் சிறு நூல்.

**சிவபூசை அகவல்** :—சிவபூசை செய்யவேண்டிய முறைகள் முதலியன இந்நூலில் இயம்பப்பெறும்.

பிரசாதமாலை:—உடலிலே ஆன்மா நிற்கும் இடம், நிலை நிறுத்தவேண்டிய வழி, அதிதேவதை ஆகிய செய்திகளைப்பற்றி இந்நூல் இயம்பும்.

ஞானப்பள்ளு:—திருவாரூர்ப்பள்ளு என்னும் இந்நூலில், சதாசிவமூர்த்தி ஆண்டையாகவும், ஈசுவரன் பள்ளராகவும் நந்திதேவர் கணக்கராகவும், பிறகடவுளர்கள் பிறபாத்திரங்களாகவும் சொல்லப்பட்டுள்ளனர்.

மற்றும் இப்பெரியாரால், சிவாநந்தபோதம், அத்துவாக்கட்டளை, ஆயிரப்பாடல், திருமழுவாடிப் புராணம், அண்ணாமலைக்கோவை என்னும் வேறு பல நூல்களும் இயற்றப்பெற்றுள்ளன.

---

## கூ. பரஞ்சோதி முனிவர்

'சோழவள நாடு சோறுடைத்து' என்னும் பெருமை பொருந்திய சோழவளநாட்டிலே திருமறைக்காடு என்னும் சிவப்பதி சிறந்து விளங்குகின்றது. அப்பதி மறைகளால் வழிபாடு செய்யப்பெற்ற மாட்சியுடையது. சைவ சமயாச்சாரியர்களாலும் அருணகிரிநாதராலும் தேவாரமுந் திருப்புகழும் பாடப்பெற்றது.

அப்பதியிலே எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் பரஞ்சோதி முனிவர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சைவ வேளாள மரபில் தோன்றியவர். சிவநேசம் மிகுந்தவர். இலக்கண இலக்கிய நூல்களையெல்லாம் இளமைக் காலத்தில் தானே நன்கு கற்றுத்தேர்ந்து இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்தார். அவருடைய நோக்கம் இல்லற வழியிலே செல்லாமல் நல்லறவழியாகிய துறவறத்திலே சென்றது. பல சிவப்பதிகளையுங் கண்டு வழிபட்டுப் பின்

னர்த் திருவாலவாய் என்னும் மதுரையை அடைந்தார். அப்பதியினிடத்திலே அவருக்கு அளவுகடந்த அன்பு தோன்றியபடியினால், அங்கயற்கண் அம்மையையும் சோம சுந்தரப் பெருமானையும் போற்றி வழிபட்டுக்கொண்டு அவ் விடமே தங்கியிருந்தார்.

ஒருநாள் அங்கயற்கண் அம்மையார், பரஞ்சோதி முனிவருடைய கனவிலே தோன்றி, 'ஓ குழந்தாய்! நீ நம் பெருமானது திருவிளையாடலை இனிய செய்யுட்களால் பாடுவாயாக' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தரு ளினார்.

அக்காலத்தில் வழங்கியது வேம்பத்தூராருடைய திருவிளையாடற் புராணமாகும். அஃது ஓசைநயமின்றி யும் இறையன்பை நன்கு ஊட்டாததாகவும் இருந்ததுடன் வடமொழிக்கண் உள்ள திருவிளையாடலுக்கு மாறுபட்ட தாகவும் இருந்தது. அப்பதியில் இருந்த பெரியோர்களும் திருவிளையாடலைப் புதிதாகப் பாடவேண்டுமென்று வேண் டிக்கொண்டனர். ஆகவே பரஞ்சோதி முனிவர் வட மொழியில் இருந்த திருவிளையாடலை நன்கு ஆராய்ந்து பாடத் தொடங்கினார்.

அங்கயற்கண் அம்மையார் கனவில் தோன்றித் திரு வருள் செய்தமையின், திருவருட் சத்தியையே முன்னர் அமைத்துப் பாடுதல் வேண்டும் என்னும் முடிவுடன், 'சத்தியாய்' என்று தொடங்கி மூவாயிரத்துமுந்நூற்று அறுபத்துமூன்று செய்யுட்களால் இனிது பாடி முடித் தருளினார். பின்னர் அவ்வழகிய புராணத்தை,

" அறுகாற்பீ டத்துயர்மா லாழிகடைந்
தமுதையரங் கேற்றுமா போல்
அறுகாற்பே டிசைபாடுங் கூடன்மான்
மியத்தையருந் தமிழாற் பாடி

அறுகாற்பீ டுயர்முடியார் சொக்கேசர்
சந்நிதியில் அமரர் சூழும்
அறுகாற்பீ டத்திருந்து பரஞ்சோதி
முனிவனரங் கேற்றி னானே.''

என்னும் செய்யுட்கேற்ப அரங்கேற்றஞ் செய்து முடித்தருளினார். சிவனடியார்களும் பேரன்பர்களும் ஒன்று கூடி அவ்வரங்கேற்றவமுதை இனிது நுகர்ந்து மகிழ்ந்தார்கள்.

மேலும் பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையுஞ் செய்து அரங்கேற்றஞ் செய்தருளினார்.

திருவாலவாய்ப் பதியினர் பரஞ்சோதி முனிவரையும் அவருடைய திருவிளையாடற் புராணத்தையும் போற்றிப் பெருமைப்படுத்தினார்கள். பரஞ்சோதி முனிவர் பின்னர் அப்பதியிலே தங்கி, அடியார்கள் பலருக்குக் கல்வி புகட்டல், மெய்யறிவு கொளுத்தல் ஆகிய தண்ணளி மிக்க காரியங்கள் பலவற்றைப் புரிந்துகொண்டிருந்து, இறுதியில் பிறவாப் பேரின்பப் பேற்றைப் பெற்றார்.

## ௬0. திருக்குருகைப் பெருமாள் கவிராயர்

திக்கெலாம் புகழும் தென்பாண்டித் திருநாட்டிலே, ஆழ்வார் திருநகரி என்னும் ஊரிலே, வேளாளர் மரபிலே திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்னும் சீரிய அறிஞர் தோன்றினர். அவர் தோன்றிய காலம் ஏறக்குறைய முந்நூற்றுஐம்பது யாண்டுகட்கு முன்னர் என்பர். கவிராயர் பிறந்த குடும்பம் திருமாலிடத்திலே பெருமால் கொண்டதாகும். பொருட் செல்வத்தோடு அருட்செல்வமும் நன்கு அமையப்பெற்றதாகும். கவிராயருடைய பிள்ளைப் பெயர் 'சடையன்' என்பர். இவர்தம் வழிமுறையினர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்னும் பெயருடன் திருக்கோயிற் புலவர்களாகத் திகழ்ந்துநின்றனர்.

### கல்விப் பயிற்சி

சடையர் இலக்கண இலக்கியங்களையும் பிற நூல்களையும் தம் தந்தையாரிடம் இனிது கற்றுத் தெளிந்தனர். தகுந்த அகவையை அடைந்தபோது ஸ்ரீநிவாச ஜீயர் என்னும் பெரியாரிடம் மறைமொழி, மெய்யறிவுரை முதலியவைகளைத் தெளிவாகக் கேட்டறிந்துகொண்டார். வைணவசமயச் சார்பான நூல்களிலும் வல்லவரானர்.

### திருக்கோயிற் புலவர்

பெருமாள் கவிராயர் தம் தந்தையார்க்குப் பிறகு திருக்குருகைப் பெருமான் திருக்கோயிற் புலவரானர். திருக்கோயிற் புலவராகும்போது புலவராகுவோரை, இயற்பெயரை மறைத்துத் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்றே அழைப்பர். அவ்வாறே சடையரும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்று அழைக்கப்பட்டார்.

பிற செய்திகள்

பெருமாள் கவிராயர் கல்வியாற்றலிலே தலைசிறந்து பெரும்புலவராக விளங்கினர். அறிவுமாட்சியில் சங்கப் புலவர்கட்குக் குறைந்தவர் அல்லர். இவருக்கு எண்ணிறந்த மாணவர்கள் இருந்தனர். கவிராயர் அம்மாணவர்கட்குப் பாடஞ் சொல்லியும் நூல் எழுதியும் பொழுது போக்கிவந்தார். கிடைத்தற்கரிய பழைய நூல்களைத் தேடித் தொகுத்து அவைகளைப் பாதுகாத்துவந்தார். கவிராயருடைய நுண்ணறிவையும் செய்யுளியற்றும் ஆற்றலையும் ஆதிநாத பட்டர் என்பவர் அறிந்தார். திருக்குருகை மான்மியம் என்னும் வடமொழிநூலைச் செந்தமிழ்ப் பாவில் செய்தருளவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பெருமாள் கவிராயரும் அவ்வாறே செய்து முடித்தார். இந்நூல் தமிழிலும் திருக்குருகை மான்மியம் என்றே வழங்கப்பெறும். இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி. பி. 1548-ஆம் ஆண்டாகும்.

இவர் செய்த நூல்கள்

இவர் செய்தனவாக உலகில் வழங்கிவரும் நூல்கள் மாறனலங்காரம், குருகாமான்மியம், மாறனகப்பொருள், திருப்பதிக்கோவை, நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் கிளவி மணிமாலை, மாறன் பாப்பாவினம் முதலியவைகளாகும்.

மாறனலங்காரம்

இந்நூல் செய்யுட்களின் அணிகளைக் கூறுவதாகும். பாயிரம், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்னும் பிரிவுகளையுடையது. இதற்கு இரத்தினக் கவிராயர் என்பவர் உரை செய்துள்ளார். இந்நூல் வடமொழியைப் பின்பற்றிச் செய்யப்பட்டதாகும்.

இந்நூலின் அருமைபெருமைகளை நன்குணர்ந்து, இதனைப் புலவர்தேர்வுகட்குப் பாடநூலாக அமைத்துள்ளனர் அறிஞர்கள்.

குருகா மான்மியம்

திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில் திருக்கோயில் கொண்டிருக்கும் திருமாலுடைய பெருமையைக் கூறுவது இந்நூல். பதிகம், நாடு, வாழ்த்துச் சருக்கம், புறநகர் வாழ்த்துச் சருக்கம், அகநகர் வாழ்த்துச் சருக்கம், கோயில் வருணனைச் சருக்கம், கெந்தமாதன வருணனைச் சருக்கம், பரமபத வருணனைச் சருக்கம், அண்டவுற்பத்திச் சருக்கம், மார்க்கண்டேயன் தோத்திரச் சருக்கம், பிரமன் அருந்தவச் சருக்கம், பிரமன் தோத்திரச் சருக்கம், தானங்காட்டு சருக்கம், திருவாராதனைச் சருக்கம், வேட வருணனைச் சருக்கம், வேழ வருணனைச் சருக்கம், துணைப் படை வதைப்படு சருக்கம், வேடனும் வேழமும் வதைப் படு சருக்கம், தாந்தன் முத்திபெற்ற சருக்கம், சந்தன் முத்திபெற்ற சருக்கம், மாடத் திருக்குருகூர்ச் சருக்கம், திருமுடி யடைவுச் சருக்கம், பெண்பேசு சருக்கம், எழுச்சிச் சருக்கம், திருமணச் சருக்கம், மீட்சிச் சருக்கம், இல்வாழ்க்கைச் சருக்கம், வரம்பெறு சருக்கம், மாவன் திருவவதாரச் சருக்கம், மவுனம் நீங்கு சருக்கம் ஆகிய முப்பது சருக்கம் கொண்டது. மூவாயிரத்து முந்நூற்றுமுப்பது பாடல்களையுடையது.

மாறனகப்பொருள்

இஃது அகப்பொருளைப் பற்றிக் கூறும் நூல். காரி மாறன் என்னும் குருகைப்பிரான் பேரை வைத்து இயற்றப்பெற்றது. தொல்காப்பியம் முதலிய நூல்களில் பல இயல்களிலும் விரிந்து பரந்து அமைந்துள்ள அகப்

பொருள் இலக்கணங்களையெல்லாம் வரிசைமுறையாகத் தக்கமுறையில் விளக்குவது.

மாறன் பாப்பாவினம்

பாக்களையும் பாவினங்களையும் புதிதாக இயற்றுதற்குத் துணையாக அவற்றின் இலக்கணங்களை எடுத்துக் கூறச் செய்யப்பட்டது இந்நூல்.

திருப்பதிக் கோவை

திருப்பதிக் கோவை, நம்பெருமாள் மும்மணிக் கோவை, மாறன் கிளவி மணிமாலை என்பன திருமாலின் புகழ் நூல்களாகச் செய்யப்பெற்றவை. "திருப்பதிக் கோவை மாறன் பாப்பாவினம், ஆகிய நூல்கள் திருக்குருகைப் பெருமாள் கவிராயரால் இயற்றப்பட்டவைக ளல்ல; இவைகளை இயற்றினர் வேறு பெயர்களாவர். இவை பெருமாள் கவிராயரின் திருவாக்காகத் தெரியவில்லை," என்று கூறுவாரும் உளர்.

---

## கக. கவிராச பண்டிதர்

தோற்றமும் அருளும்

பாண்டிநாட்டில் வேம்பத்தூர் என்னும் ஊர் ஒன்றுள்ளது. அவ்வூரிலே சற்றேறக்குறைய நானூற்றைம்பது யாண்டுகட்குமுன் கவிராசபண்டிதர் என்னும் காரணப்பெயர் பெற்றார் ஒருவர் தோன்றினர். காரணப் பெயர் தோன்றியபிறகு அவருடைய இயற்பெயர் இன்னதென்று உணரமுடியாமல் மறைந்துவிட்டது. கவிராச பண்டிதருடைய குலம் பார்ப்பனர் குலம். கவிராசபண்டிதர் இளம்பருவத்தில் கற்கவேண்டிய கலைகளையெல்லாம் இனிது கற்றுணர்ந்தார்.

பெரியார் ஒருவர் தேவியின் திருவருள் மறையைச் சிறுவராக இருந்த கவிராச பண்டிதருக்கு உரைத்து அதனை உருவேற்றுமாறு உரைத்துச் சென்றார். கவிராச பண்டிதரும் அவ்வாறே செய்தார். உரு நாறாயிரம் என்னும் அளவுக்குமேல் ஆகியது. கவிராச பண்டிதர்மேல் தேவியின் கடைக்கண் அருள் வீழ்ந்தது. வடமொழி தென்மொழி முதலிய கலைகளில் வல்லவரானார். சின்னாளில் திருமணம் நிகழ்ந்தது. பெண்மகவு ஒன்று தோன்றியது. மனைவி மரித்தாள். மேலும் கவிராசர் இறைவியை வழிபட்டுக்கொண்டிருந்தார். திருவருட் பெருக்கால் சிறந்து விளங்கினார்.

## நூல்கள் இயற்றல்

வடமொழியில் சங்கராச்சாரியரால் இயற்றப்பெற்ற சௌந்தரியலகரி என்னும் ஒரு நூல் உண்டு. கவிராச பண்டிதர் அந் நூலைத் தமிழிலே மொழிபெயர்த்துப் பாடினார். எல்லா உறுப்புக்களின் இயல்புகளையும் உரைத்ததுபோல் இடக்கரடக்கல் உறுப்பு நலனையும் சிறப்பாகப் பாடினார். அப்போது உமை ஒரு பெண்ணுருக்கொண்டு தோன்றினாள். "நீ ஆணுடன் பெண்ணுடன் பிறக்கவில்லையா? இவ்வாறு எல்லா உறுப்புக்களையும் பாடலாமா?" என்று சினங்கொண்டவள்போல் பேசினாள். வாக்கில் வந்ததைப் பாடினேன் என்றார் கவிராசர். கவிராசருடைய நா மறைந்துவிடுமாறு உமாதேவி வசவுரை வழங்கினாள். நா மறைந்தது. கவிராசர் தம் பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று வணங்கித் தம் நாவினை மீண்டும் பெற்றார்.

## இறைவிக்கு இறைவன் கட்டளை

அன்பன் ஒறுக்கப்பட்டதை இறைவன் அறிந்தார். உமாதேவியை நோக்கி, "அன்பனை இவ்வாறு வருத்த

லாமா? இக்குற்றம் தீருமாறு நின்கையால் ஆறு திங்கள் அவனுக்கு உணவு படைக்கக்கடவாய்" என்று கட்டளையிட்டார். இறைவன் கட்டளையைக்கேட்டு இறைவி மிகுந்த நாணமடைந்தாள். இதனை,

"ஆறு திங்கள்உ ணாது செங்கையி னால்நல் உண்டிசெய் தீதலே
வீறு றும்பரி சாகும் அன்றிவெ வேறு சிந்தைசெ யேலெனு
நீறு றுந்திரு மேனி அம்பரன் நேர்வி ளம்பினன் ஆதலால்
நாறு பங்கய மாதர் தொண்டுகொள் நாரி நெஞ்சக நாணினள்"

என்று புலவர் புராணம் ஆசிரியர் பாடியுள்ளார்.

கவிராசர் காசிக்குச் செல்லல்

இறைவன் கட்டளையைப்பெற்ற இறைவி மாறு கோலத்துடன் கவிராசர் மனைக்குச்சென்று உணவு சமைத்துப் படைத்திருந்தனள். கவிராசர் காசிக்குச் செல்ல எண்ணினர். தம் மகளைத் தம் தங்கையிடம் ஒப்புவித்தார். தாம் வரும்வரையில் அவளை நன்கு பாதுகாக்குமாறு கூறிவிட்டுப் புறப்பட்டார். நண்பகலில் ஓரிடத்தில் வெய்யிலின் கொடுமைக்காகத் தங்கியிருந்தார். அப்பொழுது இறைவி கவிராசருடைய மகளின் வடிவத்தைத் தான் தாங்கினள். ஒரு தவலை, சமையலுக்கு வேண்டிய பொருள்கள் முதலியவற்றுடன் கவிராசர் தங்கியிருந்த மரத்தடியை அடைந்தாள். கவிராசபண்டிதர் தம் மகளுருத் தாங்கிவந்த இறைவியைத் தம்மகள் என்றே நம்பினர். அவளால் நடக்கமுடியாதென்றும் வீட்டிற்குத் திரும்பிவிடுமாறுங் கூறினர். மகளாகவந்த மலைமகள் தன்னால் நடந்து உடன் வரமுடியும் என்றும் ஆகையால் தடுக்கவேண்டாமென்றும் கூறினள்.

மகளின் பிடிவாதத்தைக்கண்ட அறிஞர் அவளையும் உடனழைத்துக்கொண்டு சென்றார். மகளாக வந்த மலை

மகள் வேளைக்குவேளை உணவுசமைத்துப் படைத்துக் கொண்டு சென்றாள். இருவருங் காசியை அடைந்தனர், கங்கையில் நீராடினர். கடவுளைத் தொழுது ஆண்டுச் சின்னாள் தங்கியிருந்தனர். ஒருநாள் இருவரும் கடைத் தெருக்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தனர். வளையல் கடை ஒன்றைப் பார்த்தபோது மலைமகள் வளையல் இட்டுக் கொள்ளவேண்டும் என்று ஒட்டாரங் காட்டி நின்றாள். கவிராசரிடமோ காசு இல்லை. அவர் யாது செய்யலாம்! மகளின் அவாவை நிறைவேற்ற வேண்டுமே என்று வருந்தி நின்றார். அப்பொழுது தமிழ்நாட்டான் ஒருவன் கடைத் தெருவில் எதிர்ப்பட்டான். இருவருந் தமிழில் உரையாடி மகிழ்ந்தனர். கவிராசர் தம் மகளின் வளையல் அவாவையும், தாம் அதனை நிறைவேற்ற முடியாதிருத்தலையும் கூறி வருந்தினர். அத்தமிழன், மகளாகவந்த மலைமகளின் அவாவை நிறைவேற்றிப் பல உதவிகளையும் புரிந்து சென்றான். அவ்வாறு வந்தவனைக் குறித்துப் புலவர் புராணம் ஆசிரியர்,

"அவன்எவன்கொ லோசிவன்கொல் ஆழியங்கை மால்கொலோ
தவளமங்கை கேள்வனோச கத்திலுள்ள மனிதனோ
இவனுடன்க லந்துபேசி எண்ணமுற்ற வுஞ்செய்திட்(டு)
எவளவோச காயமும்செய் தேகினன்எ னச்சொல்வார்"

என்று கூறுகிறார்.

ஊருக்குத் திரும்புதல்

காசியில் சில திங்கள் தங்கினர். ஊரைவிட்டுப் புறப்பட்டு ஆறு திங்கள்களாயின. கவிராசர் ஊருக்குத் திரும்பினர். முன்னர் மலைமகள்மகளாக வந்த இடத்தை அடைந்தனர். கவிராசர் சிறிது கண்ணயரத் தொடங்கினர். மகளாக வந்த மலைமகள் கவிராசரை நோக்கி, 'நான் முன்னால் வீட்டிற்குச் செல்லுகிறேன். தாங்கள்

மெதுவாக வாருங்கள்' என்று கூறி மறைந்தாள். நூருட்டைப்பிராயத்தினளாய் கவிராசர் மனையை அடைந்தாள். கவிராசர் திரும்பிவருஞ் செய்தியைக் கூறித் தான் திருவுருக்கரந்தாள்.

உண்மை யுணர்தல்

கவிராசபண்டிதர் இல்லத்தை எய்தினர். கவிராசர் சென்ற நாள்முதல் அவருடைய மகள் நோயும் பாயுமாக இருந்தாள். அவள் தன் தந்தை வரும் செய்தியை உணர்ந்து சிந்தை மகிழ்ந்தாள். அவளுடைய நோயெல்லாம் பறந்தன. கவிராச பண்டிதர் வீட்டை யடைந்தார். தந்தையைக்கண்ட மகள் சிந்தை மகிழ்ந்தாள். காசிப் பயணத்தில் நிகழ்ந்த புதுமைகளை யெல்லாம் உசாவினள். தம் மகள் கேட்ட கேள்விகளில் இருந்து கவிராசர் உண்மையை உணர்ந்துகொண்டார். தம்முடன் வந்தவள் மலையரையன் பெற்ற மகள்தான் என்பதை மலைவற உணர்ந்தார். அந்தோ இறைவியின் பணிகளையும் ஏற்றோமே என்று நெஞ்சங் கலங்கினர். ஒருவாறு தெளிவடைந்தார்.

இவர் செய்த நூல்கள்

கவிராச பண்டிதர் செய்த நூல்கள், சௌந்தரியலகரி, வராகிமாலை, ஆனந்தமாலை முதலியனவாகும். சௌந்தரியலகரி என்பது முதலாவது சங்கராச்சாரியரால் இயற்றப் பெற்றது. இறைவியின் பெருமையையும் உறுப்புநலன்களையும் எடுத்துரைப்பது. நூற்றுமூன்று பாடல்களைக் கொண்டது. சுவைபொருந்த அமைந்தது. சிறந்த உரையுடன் இப்பொழுது விளங்குகின்றது. உரையினை இயற்றியவர் உண்ணாமுலை எல்லப்ப நயினர் என்பர்.

# கஉ. அமிர்த கவிராயர்

ஊர்

அமிர்த கவிராயருடைய ஊர் பொன்னுங்கால். இப் பொன்னுங்கால், மதுரை மாவட்டம் சிவகங்கைக் கூற்றத்தைச் சேர்ந்தது.

குலமும் சமயமும்

இவருடைய குலம் வேளாண் குலம்; சமயம் சைவம்.

காலம்

இவர், கி. பி. 1646 முதல் 1672 வரை சேதுநாட்டை யரசாண்ட திருமலை சேதுபதி காலத்தினர்.

வாழ்க்கை வரலாறு

இவர் இளமைப் பருவத்தில்தானே தக்க ஆசிரியரை யடுத்துக் கல்வியைத் தெளிவமையக் கற்றார். தகுந்த சமயத்தில், இராமநாதபுரம் நாட்டை யரசாண்ட இரகு நாத சேதுபதியின் வாயிற் புலவரானார்.

கோவை பாடுதல்

திருமலை சேதுபதி பல புலவர்களை ஆதரித்தவர். அரசனும் அறிஞர்களும் ஒருநாள் மாலைப்பொழுதில் பூம் பொழிலில் அமர்ந்திருந்தனர். பாவாணர்கள் புதுமைப் பாக்கள் பலவற்றைப் பாடி மன்னனைக் களிப்பித்துக் கொண்டிருந்தனர். சிலர் அகப்பொருளைப் பற்றிப் பாடல் கள் பாடினர். அரசன் அங்கிருந்த புலவர்களைப் பார்த்து, 'அகப்பொருள் துறையில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றிப் பல பாடல்களை உங்களில் யாரேனும் பாட முடியுமா?' என்று கேட்டான். சிலர் ஒரு துறையி லேயே பத்துப் பாடமுடியும் என்றனர். சிலர் இருபது பாடமுடியும் என்றனர். சிலர் முப்பது பாடமுடியும்

என்றனர். அமிர்த கவிராயர், 'நான் நூறு பாடல்கள் செய்வேன்' என்றார். மற்றைப் புலவர்கள் அரசனைப் பார்த்து, 'அமிர்த கவிராயர் நானூறு பாடல் (400) பாடுவதாகச் சொல்லுகிறார்' என்று கூறினார்கள். அமிர்த கவிராயர் சிறிதும் பின்வாங்காமல், 'இதற்கேன் இவ்வளவு ஆரவாரம்? நான் ஒரு துறையிலேயே நானூறு பாடல்கள் செய்து காட்டுகிறேன்' என்று ஒப்புக்கொண்டார். ஒரு காலமும் குறிப்பிடப்பட்டது. குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் ஒரு துறையில் நானூறு பாடல்களைப் பாடி முடிக்கவேண்டும்.

பாடலும் பரிசும்

நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒரு துறையை எடுத்துக்கொண்டு நானூறு பாடல்களை மிக விரைவில் செய்துமுடித்தார். ஒவ்வொரு செய்யுளிலும் முதல் இரண்டடிகளில் அரசனுடைய பெருமையும் சிறப்புங் கூறிப் பின்னிரண்டடிகளிலும் அகப்பொருளும் புறப் பொருளுந் தோன்ற அமைத்தார். பாடல் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. புலவர் பெருமக்களும் அரசனும் பாட்டினுடைய அருமை பெருமையை நன்கு உணர்ந்து புலவர் பெருமானைப் பெரிதுங் கொண்டாடினர். அரசன் புலவருடைய ஊராகிய பொன்னங்காலையே அவருக்கு இறையிலியாக வழங்கினான். அக்கோவையின் நயங்களைப் பற்றி ஈண்டெடுத்துப் புகழ்தல் எமக்கு இயல்வதொன்றன்று.

## கரு. பாலசுப்பிரமணியக் கவிராயர்

**ஊர் குலம் முதலியன**

அறுமுகப்பெருமான் துறவுக்கோலத்துடன் விளங்கும் பழநிமாநகரின்கண் முந்நூறு ஆண்டுகட்குமுன் பாலசுப்பிரமணியக் கவிராயர் பிறந்தார். நால்வகைக் கவிஞர்களுள் இவர் ஆசு கவியாவர். இவருடைய குலம் துளுவவேளாளர் குலம், சமயம், சைவசமயம். தந்தையின் பெயர் பெரியவன் கவிராயர் என்பர். பெரியவன் கவிராயர் திருமுருகப்பெருமானுக்குப் பூமாலை கட்டுதல், பாமாலை கட்டுதல் முதலிய திருத்தொண்டுகளிலே ஈடுபட்டு நின்றார். அவருக்கு நெடுநாள் மகப்பேறு இல்லாதிருந்தது. இறுதியில் பழநியாண்டவன் திருவருளால் பாலசுப்பிரமணியக் கவிராயர் தோன்றினார்.

**ஊறுவந்து மாறுதல்**

பாலசுப்பிரமணியன் என்பது இரு முதுகுரவரும் இட்ட பெயர். அவர்கள் குழவியைக் களிப்புடன் வளர்த்தனர். நாளடைவிற் குழந்தைக்குக் குருட்டுத் தன்மையுஞ் செவிட்டுத் தன்மையும் தோன்றி மிகுந்து வந்தது. இதனைத் தெரிந்து தாய் தந்தையர் உளந் தளர்ந்தனர். அவர்கட்கு அளப்பருந் துன்பம் உண்டாயிற்று. அவர்கள் ஆண்டவனை வேண்டிக்கொண்டனர். ஒருநாள் முருகவேள் இரு முதுகுரவரின் கனவில் தோன்றினார். தாய் தந்தை இருவரிடமுந் தனித்தனியே தோன்றிக் கடப்ப மலர் ஒன்றைக் கொடுத்தார். "இதனைக் குழந்தையின் கண்ணில் தடவிக் காதிற் செருகுங்கள் நலம் உண்டாகும்" என்று கூறி மறைந்தருளினார். பெற்றோர்கள் விழித்தெழுந்தனர். கையிற் கடப்ப மலரைக் கண்டனர்; ஐயன் அருள்புரிந்தது மெய்யே என்று ஐயமற அறிந்து மகிழ்ந்

தனர். பெருமான் கட்டளைப்படியே செய்தனர். ஊறு மாறிக் குழந்தை நலம் அடைந்தது.

கல்வி

பாலசுப்பிரமணியன் தந்தையாரிடமே கல்வியை நன்கு கற்றார். வடமொழிவாணர்களிடம் அம்மொழியையும் திடமுறப் பயின்றார். சமய முடிவுகளில் வேதாந்தம் மிகச் சிறந்தது என்பதை அறிந்து அதனை நன்கு பயின்று வேதாந்தியாகி விளங்கினார். அப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகி இலங்கிநின்ற சுப்பிரமணிய தேசிகர் பழநிக்கு எழுந்தருளினார். பாலசுப்பிரமணியக் கவிராயர் வேதாந்தியாயிருந்தும் தாயுமானவரைப் போல் வேதாந்த சித்தாந்தப் பொதுநோக்குடையவராயிருந்தமையின் அத்தேசிகரைச் சென்று கண்டார். அத்தேசிகர் கவிராயரின் அறிவாற்றலைக் கண்டு களித்தார். சைவசித்தாந்தத்தையுங் கற்கவேண்டும் என்று கூறிக் கற்பித்தார். அத் தேசிகரிடமே சிலகாலத்தில் அதனையுங் கற்றுணர்ந்தார்.

இவர் செய்த நூல்கள்

இவர் கவிராயர் என்னும் சிறப்புப்பெயரைப் பெற்றது, அந்நாளில் தஞ்சைநகரை ஆண்டிருந்த அரசர்பால் என்பர். இவர் மலையாளநாட்டிற்குச் சென்றார். மலையாள மன்னனது அவையிலே பிள்ளை லோகாசாரியரோடு சொற்போர்செய்து வெற்றிகொண்டார். அப்பொழுது திராவிடவேத நிர்ணயம் என்னும் நூலைச் செய்தார். மேலும், பாஞ்சராத்திரமத சபேடிகை என்னும் நூலையும் எழுதினார். அக்கதீபிகை, சைவசித்தாந்த தரிசனம், வேதாந்த சித்தாந்த சமரசதீபம், மாயாவாத தூகசிரதூடணி, குகோத்கர்ஷம், கூவிள நீப மகாத்மியம் என்னும் நூல்களையும் இயற்றினார்.

பழநிப் புராணம்

இவருடைய கல்வியாற்றலைக் கண்ட அன்பர்கள், பழநிப்பதியின் பெருமைகளைக் கூறும் பழநிப் புராணத்தைத் தமிழில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இருபத்துமூன்று சருக்கங்களையும் தொளாயிரத்து எண்பத்தேழு பாடல்களையுங்கொண்ட அப்புராணத்தைக் கவிராயர் மூன்றே நாட்களிற் செய்துமுடித்தார். இச்செய்தி,

"கொங்கார் பழநிக் குடியார் முதுக்குறைவோர்
எங்கார் மயிற்கடவு ளின்பழநி—மங்காத
நற்புகழைச் செய்யெனமூன் றும்நாளில் நல்கிட்டான்
சிற்புகழான் மெய்ப்புலவன் தேர்"

என்னும் வெண்பாவால் பெறப்படும்.

"மலர்தலை உலகந் தாங்கு மணிமுடிச் சகம தென்று
நிலைபெற நிறுத்த மூவைஞ் ஞூற்றின்மேல் திகழும் ஐம்பான்
தலைசெறி பருவந் தன்னில் தனிநெடுங் கதிர்வேல் அண்ணல்
நலனுறு பழநி மூதூர்ப் பெருமையை நவில லுற்றேன்"

என்னும் செய்யுளால் கவிராயர் இப்புராணத்தை கி. பி. 1628-ல் பாடினர் என்பது பெறப்படும்.

## கசுஅ. நிரம்பவழகிய தேசிகர்

பிறப்பிடம் முதலியன

நிரம்பவழகிய தேசிகர் என்னும் பெரியார் இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்தார். அவர் பிறப்பிடம் வேதாரணியம் என்னும் திருமறைக்காடாகும். பின்னளிலே பாண்டியநாட்டில் உள்ள துழாயூரில் நிலைக்குடியாக வாழ்ந்திருந்தார் என்பர். திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதிமுனிவர் பிறப்பிடமும் திருமறைக்காடேயாகும். இரு பெரியார்களும் ஒரு சாலை மாணவர் என்பர்'

நிரம்பவழகியார் தென்மொழி வடமொழி எனும் இருமொழியிலும் நிரம்பிய புலமையுடையவர். சைவசித்தாந்த நூல்களை ஐயந்திரிபற நன்கு பயின்றிருந்தார். சிவஞான சித்தியார், திருவருட் பயன் முதலிய நூல்கட்கு அரிய உரை எழுதினர். சொன்னயம் பொருணயம் கற்பனைநயம் முதலியன அமையுமாறு செய்யுள் செய்வதில் தேர்ச்சிபெற்றவர். மதுரையம்பதிக்குச் சென்றவர், அப்பதியின் அருமை பெருமையை உள்ளவாறுணர்ந்து அப்பதியிலே தங்கி மாணவர் பலருக்குச் சைவசித்தாந்த நூல்களைப் போதித்துக்கொண்டிருந்தார். இவருடைய கல்வியாற்றல் பலவிடங்களிலும் பரவியது. சேதுபதி மன்னரும் நிரம்பவழகியாரின் அறிவுமாட்சியை உணர்ந்து அவருடன் நட்புக்கொண்டிருந்தார். நிரம்ப வழகியாரின் பெரும்புலமையை நன்குணர்ந்த சேதுபதிமன்னர் சேதுபுராணத்தைச் செந்தமிழ்ச்செய்யுட்களாகப் பாடுதல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இந்நூல் இராமேசுரத்தில் எழுந்தருளிய இறைவனது பெருமையைக்

கூறுவதாகும். நிரம்பவழகியார் சேதுபுராணத்தை 3438 பாடல்களாகச் சொற்சுவை பொருட்சுவை சிறந்து விளங்குமாறு பாடிமுடித்தார். இந்நூலில் கணக்கற்ற இலக்கியச் சொற்கள் செறிந்திருத்தலால் இந்நூல் ஒன்றினைக் கற்பவர்கள் பன்னூற் பயிற்சியையும் ஒருங்கே அடைவார்கள். சேதுபுராணத்திற்கு நிரம்ப வழகியாரே ஆசிரியர் என்பதை,

"விரிதருபைங் கடலுலகம் புரந்ததனி
வேந்தரெலாம் வியந்து போற்ற
அரியமறை முனிவர்தமிழ்ப் பாவாணர்
செவிநுகர்பேர் அமுத மாகத்
தெரிதரமுத் தமிழ்வழக்கு முனிநிரம்ப
வழகியதே சிகனுஞ் செம்மல்
வரிசைபெறு வடமொழியின் சேதுமாக்
கதைதமிழால் வகுத்திட் டானே"

என்னும் சிறப்புப்பாயிரப் பாடலினால் உணரலாம்.

நிரம்பவழகியார் மிகக் கருநிறம் உடையவராம். அத்துடன் நுணுக்காய்க்கிரந்தி என்னும் நோயினால் உடல் முழுவதும் நுணுக்காய் போன்ற தடிப்புகள் இருந்தனவாம். இவரது விகார வடிவத்தை உற்று நோக்கிய ஒருவர், "நிரம்பவழகாகத்தான் இருக்கின்றார்" என்று இகழ்ச்சிக்குறிப்புத் தோன்ற இயம்பினராம். அதுமுதல் அவருடைய இயற்பெயர் மறைந்து இப்பெயரே நிலை பெற்றுவிட்டதாம். இவர் சைவவேளாளர்கட்குக் குருமாராயிருக்கின்ற அபிடேகத்தார் மரபிலே தோன்றியவர் என்பர். இவருடைய கருநிறத்தைப்பற்றி நிகழ்ந்ததாகச் சொல்லப்பெறும் ஒரு செய்தி வேறு புலவர் ஒருவர் வரலாற்றோடும் இயைபுடையதா யிருத்தலின் அதனை ஈண்டுக் கூறவில்லை.

இவர் இயற்றிய நூல்கள் முதலியன

சேதுபுராணம் என்னும் நூலையன்றித், திருப்பரங் குன்றப் புராணம், திருவையாற்றுப் புராணம், குருஞான சம்பந்தர் மாலை என்னும் நூல்கள் இவர் இயற்றியதே என்று கூறுவர். இவர் உரைஇயற்றிய நூல்கள், சிவ ஞானசித்தியார், திருவருட்பயன் என்பன. சித்தியாருக்கு உரை யெழுதியவர்களுள் நிரம்பவழகியாரே எல்லோருக் கும் முற்பட்டவர் என்பர்.

திருவாரூர்ப் புராணம் பாடிய அளகை சம்பந்த முனிவர், செப்பேசப் புராணம் இயற்றிய ஞானக்கூத்தர் என்பவர் ஆகியோர் நிரம்பவழகியாருடைய மாணவர் என்பர்.

"......................................................
நிர்க்குணன் நின்மலன் சிற்குணன் சின்மயன்
காரண காவலன் பூரண புண்ணியன்
ஆரணன் ஆகமன் ஆரண நாயகன்
அத்தன் அநாகுலன் நித்தன் நிராமயன்
சேவுடைச் சேவகன் ஆவுடை நாயகன்
அற்புதன் ஆதியன் கற்பக நகர்சால்
உரம்பதி ஞானத் தொளிபோன்
நிரம்ப அழகனென் நெஞ்சகத் தோனே"

என்பது, நிரம்பவழகியாரின் மாணவர் ஒருவரால் புகழ்ந்து பாடப்பெற்றதாகும்.

"அறியும் பொருளுக் கறிவா வனவும் அருந்தவத்தோர்
நெறியும் நெறிக்கு நிலையா வனவும் நினைப்பரிதாம்
குறியுங் குறிக்கக் குணமா வனவும் குவளைவயல்
செறியுந் திருத்தில்லை அம்பல வாணன் திருவடியே"

என்பது, நிரம்பவழகியாரால் சிவஞான சித்தியார் உரைக் காப்பிற்காக உரைக்கப்பட்ட பாடலாகும்.

## ௯௫. வெள்ளியம்பலவாணத் தம்பிரான்

**ஊர் முதலியன**

திருமுருகப்பெருமானுடைய திருவருளைப் பெற்று வியத்தகு புதுமைகளைச் செய்த ஒரு பெரியார் இடத்திலே கல்வியைக் கற்றதுடன், கவிச்சக்கரவர்த்தியாக விளங்கிய ஒருவர்க்கு ஆசிரியராகவும் அமைந்தார் ஒருவர் எனின், அத்தகையாருடைய பெருமையை நாம் எடுத்துரைக்கப் புகுதல் வீணாகும். அத்தகைய மேன்மைசால் பெருமை அமையப்பெற்றவர் ஒள்ளிய புகழ்சேர் வெள்ளியம்பல வாணத் தம்பிரான். இத் தம்பிரான் தோன்றிய நாடு பாண்டிய நாடு. குலம் சைவவேளாளர் குலம். காலம் இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர்.

வெள்ளியம்பலவாணர் 'ளமைப் பருவத்திலேயே தருமபுர ஆதீனத்தை அடைந்தார். ஆண்டு, நான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த மாசிலாமணி தேசிகரிடம் தீட்சையும் பதிப்பயணத் துறவாடையும் பெற்றார். காசிமாநகர்க்குச் சென்றார் ஆங்கு அக்கால் எழுந்தருளி யிருந்த குமரகுருபர அடிகளிடத்திலே கல்விகற்றார். தென்மொழியோடு வடமொழியிலும் வல்லவரானார். தெள்ளிய பேரறிவு பெற்ற வெள்ளியம்பலவாணரின் ஒள்ளிய சீர்த்தியைக் கண்டு மாணவர்பலர் சேர்ந்தனர். அவர்கள் அனைவருக்கும் கல்வியை நன்கு போதித்தார். இராமாயணம் பெரியபுராணம் முதலிய நூல்களை மாணவர் கட்குப் போதிக்குங்கால் செய்தியை நன்குவிளக்குதற் குப்போதிய அளவினதாகச் செய்யுட்கள் இல்லையென்று எண்ணிய இடங்களிலெல்லாம் தாமே புதிய பாடல்கள் பலவற்றைச் செய்து இடையிடையே செருகிவைத்தார். அப்பாடல்கள் பிற்காலத்திலே வெள்ளிப்பாடல்கள் எனப் பெயர் பெறலாயின.

சிவப்பிரகாச அடிகள்

வெள்ளியம்பலவாணர் திருநெல்வேலியில் உள்ள சிந்துபூந்துறை ஆதீனமடத்தில் அமர்ந்து மாணவர் பலர்க்குக் கல்விகற்பித்துக்கொண்டிருந்தார். அவருடைய சீர்த்தி நாற்றிசையிலும் பரவிநின்றது. அந்நாளில் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளாரும், அவர் தம் உடன்பிறந்தார்களாகிய கருணைப்பிரகாசர், வேலையர் ஆகியவர்களும் இலக்கியப்பயிற்சியில் சிறந்தவர்களாக விளங்கியிருந்தார்கள். ஆயினும் அவர்கட்கு இலக்கணப்பயிற்சி போதிய அளவு இல்லாமலிருந்தது. அவர்கள் இலக்கணத்தை நன்கு கற்றுக்கொள்ள எண்ணினார்கள். தம் தகுதிக்கேற்ற ஆசிரியரை நாடியிருந்தார்கள். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சிறந்த இலக்கணஅறிஞர் என்னுஞ் செய்தி அவர்கட்கு எட்டியது. புறப்பட்டுச் சிந்துபூந்துறைக்கு வந்து சேர்ந்தனர். வெள்ளியம்பலவாணத் தம்பிரானைக் காணவேண்டிய முறைப்படி கண்டு வணங்கினர். தாம் வந்த நோக்கத்தைக் கூறினர்; வெள்ளியம்பலவாணர் சிவப்பிரகாசர் முதலியோருடைய இலக்கியப்பயிற்சியை ஆராய்ந்தார். ஐந்திலக்கணங்களையும் பதினைந்துநாட்களில் மூவருக்கும் பாடஞ்சொல்லி முடித்தார். சிவப்பிரகாச அடிகள் மகிழ்ச்சியடைந்து அண்ணமலை ரெட்டியார் வழிச்செலவிற்குக் கொடுத்திருந்த பொருளை வெள்ளியம்பலவாணருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். சிவப்பிரகாச அடிகள் தந்த வெள்ளிக் காசுகளை வெள்ளியம்பலவாணர் ஏற்றுக்கொள்ளவில்லை. "எமக்கு இக்காசுகள் வேண்டா. செந்தின்மாநகரிலே எம்மை இகழ்வதையே தம் தொழிலாகக்கொண்ட புலவர் ஒருவர் உள்ளார். சொற்போரில் அவரை வென்று எம்பாற் கொணர்ந்து எம்மடிபணியச் செய்தலே எமக்குக்

காணிக்கையாகும்" என்றார். சிவப்பிரகாச அடிகளும் திருச்செந்தில் சென்று அப்புலவரைத் தோல்வியடையச் செய்தார். சிந்துபூந்துறைக்கு அழைத்துவந்து வெள்ளி யம்பலவாணரை வணங்கச் செய்தார். பின்னர் ஆசிரிய ரிடம் விடைபெற்றுக்கொண்டு மூவரும் தம் இருப் பிடத்தை அடைந்தனர்.

இவர் செய்த நூல்கள்

பல நூல்களிலும் தம் பாடல்களை இடைச் செருக லாகச் செருகியதுடன், ஞானசம்பந்ததேசிகர் சமூக மாலை, தாலாட்டு, திருப்பள்ளி எழுச்சி என்னும் ஆசிரிய வணக்க நூல்களும், முத்திநிச்சயச் சிற்றுரை, பேருரை முதலிய உரைகளும் இவர் செய்துள்ளார்.

---

## கக. கூழங்கைத் தம்பிரான்

நம்நாட்டுப் புலவர்பெருமக்களினுடைய பெயர்களிற் பல, காரணப்பெயர்களாகவே வழங்குகின்றன. யாதானும் ஒரு காரணத்தால் ஒரு புலவரின் இடுகுறிப்பெயர் மறைந்து காரணப்பெயர் வழங்கத்தொடங்கி விட்டால் பிறகு அந்தப் புலவரின் இடுகுறிப்பெயர் அடியோடு மறைந்தொழிய வேண்டியதுதான். கூழங்கைத்தம்பிரான் பிறந்த ஊர் காஞ்சிபுரம். குலம் வேளாளர் குலம். கூழங்கைத்தம்பி ரானை முதலிற் குறிப்பிட்டுநின்ற பெயர் யாதோ தெரிய வில்லை. கூழங்கைத்தம்பிரான் என்றுபெயர் உண்டான காரணம் மேலே விளங்கும்.

கூழங்கைத்தம்பிரான் சிறுபருவத்திலேயே நன்கு கல்வியைக் கற்றார். செய்யுள் செய்யும் ஆற்றல் தம்பிரா னுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. கல்வி கேள்வி

களிற் சிறந்து விளங்கிய தம்பிரான் அறிவுநூல்களைக் கற்றுணர எண்ணினர். தஞ்சைமாவட்டம் திருவத்தூர் மடத்தையடைந்தார். தம்பிரான்களைக் கண்டு தமது எண்ணத்தைக் கூறினர். தம்பிரான்கள் கூழங்கைத்தம்பிரானுடைய அறிவாற்றலைக் கண்டு உள்ளம் மகிழ்ந்தார்கள். சமயநூல்களைக் கற்பித்தார்கள். கூழங்கைத்தம்பிரானைத் தம்பிரான் ஆக்கினர்கள். அவ்விடமே தங்கி மற்றையோர்க்குப் பாடஞ்சொல்லுதற்கும் ஏற்பாடு செய்தார்கள். வந்தவர் இருந்தவர் சொற்படி பாடஞ்சொல்லுந் துறையில் அமர்ந்தார். நாள்கள் சென்றுகொண்டிருந்தன. பாடஞ்சொல்லியவரின் திறன், கேட்டவர்கட்கு மிகுந்த களிப்பையளித்தது. பிற தம்பிரான்களைவிட இவரிடம் யாவரும் பேரன்பு செலுத்தினர்கள். அறிவாற்றலையும் சொல்லாற்றலையும் உலகம் கண்டால் அங்கு பற்றுக்கொள்வது இயற்கையன்றோ? ஆயினும், அழுக்காறென்னும் தீவினையாளன் தம்பிரான்களுடைய உள்ளத்திலே குடிபுகுந்தான். அழுக்காறெனும் பாவி திருச்செற்றுத் தீயுழி உய்க்குங் கொடியன் அன்றோ? அவன் தம்பிரான்களையும் அத்துறையிற் செலுத்தலானன்.

பாடஞ்சொல்லும் அறிஞர்மீது அழுக்காறு கொண்ட மடத்தம்பிரான்கள் அவர்மீது குற்றங்கள் சிலவற்றைச் சுமத்தி மடத்தைவிட்டு விரட்டுதற்கு எண்ணினர். எண்ணினோர் தீவினை சூழாமல் விரட்டியிருப்பின், நனிநாகரிகமான செயலாக அமைந்திருக்கும்.

குற்றஞ்சுமத்தத் துணிந்த தம்பிரான்கள் கூழங்கையார்மீது பல குற்றங்களைக் கற்பித்தனர். "இக்குற்றங்களை நீ செய்ததில்லையாயின் பழுக்கக் காய்ந்த கருந்தாதை நீ கையிலே ஏந்தி நினது குற்றமற்ற தன்மையை விளக்குவா

யாக'' என்றனர். தம்மிடம் குற்றமின்மையை நன்கு உணர்ந்திருந்த இவர், "நாமோ குற்றம் இயற்றவில்லை. அவ்வாருகத் தீ நம்மைச் சுடுமா?'' என்று உள்ளத்தில் எண்ணினர். பழுக்கக் காய்ந்து செந்தீச் சுடரைப்போல் விளங்கிய இரும்பை வலது கையால் தூக்கினர். அவ்வளவில் அக் கை எரிந்து தீய்ந்து கூழைக் கையாகிவிட்டது. இந்நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அவருக்குக் கூழங்கைத் தம்பிரான் என்னும் பெயர் உண்டாயிற்று. அவர் அம் மடத்தைவிட்டு வெளிப்பட்டார். பல இடங்களினும் சுற்றித் திரிந்தார். ஓர் இடத்திலும் நிலையாக அமரவில்லை. விரும்பியவர்கட்குப் பாடஞ்சொல்லுதல் மேற்கொண்டார். கூழங்கைத் தம்பிரானுடைய அறிவாற்றல் எங்கும் பரவியது.

ஈழ நாட்டிற்குச் சென்று சுற்றிப் பார்த்துவர எண்ணினர். புறப்பட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்ருர். யாழ்ப்பாணமும் இவருடைய சீரிய பேரறிவைக் கண்டு வியந்தது. வண்ணர்பண்ணையில் வைத்தியலிங்கச் செட்டியார் என்பவருடைய ஆதரவிலே தங்கியிருந்தார். அந்தச் செட்டியாருக்கும் அவருடைய மக்களுக்கும் கல்விகற்பித்தார். மிகு விரைவில் இவருடைய புகழ், இலங்கை எங்கும் பரவியது. கொழும்பில் இருந்த சிலர் தம்பிரானை அழைத்துப் பாடங் கேட்டனர். பாதிரிமார் பலரும் தம்பிரான் உதவியால் தமிழ்கற்றுத் தேறினர்கள். தம்பிரானைப் பெருமைப்படுத்திக் கொண்டாடினர்கள். தீத் தம்மைச் சுட்டு வருத்திய பிறகு தம்பிரான் சமயக்கொள்கைகளில் பொது நோக்குடையவராக விளங்கினர். யோசேப்புப் புராணம் என்னும் கிறித்துவ நூலை கய௨௫ பாடல்களாகப் பாடினர். அதனைத் தம் நண்பராகிய மெல்லோப் பாதிரியாருக்கு உரிமையாக்கினர். இலக்கணத்தில் மிகவும் வல்லவராகை

யால் நன்னூலுக்கு விரிவுரை ஒன்று எழுதினர். நல்லைக் கலிவெண்பா, கூழங்கையர் வண்ணம் என்னும் நூல்களும் இவரால் செய்யப்பெற்றன.

தம்பிரான் வைத்தியலிங்கச் செட்டியாரால் கட்டப் பெற்ற திருக்கோயிலுக்குச் சென்றார். பூசகர் தம்பிரானுக்குத் திருநீறு வழங்கினர். திருநீற்றைக் கையில் வாங்கிய தம்பிரான் "சாதி சாதியோடே" என்று கூறி, அத் திருநீற்றினைத் தம் செருப்பின்மீது போட்டுவிட்டாராம். தீத் தம்மைச் சுட்டதால் நேர்ந்த சினத்தைக்கொண்டே தம்பிரான் இவ்வாறு செய்தார்போலும்.

இவர் இலங்கைக்குச் சென்றபிறகு உலாந்தா, போர்த்துகீஸ் முதலிய மொழிகளைக் கற்றுணர்ந்தார். அந் நாளில் கோவிந்த முதலியார் என்பவர் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக இருந்தார். அவர் பெருமிதம் உடையவர். எவரையும் ஒரு பொருட்படுத்தாமல் செருக்குடன் நடந்துகொள்வார். அவருடைய போக்குக் கூழங்கைத்தம்பிரானுக்குப் பிடிக்கவில்லை. அந்தக் கோவிந்த முதலியாருடன் அடிக்கடி எச்செயலை முன்னிட்டேனும் போரிட்டுக்கொண்டிருப்பார். ஒரு சமயம் ஒரு பசுவை முன்னிட்டுக் கோவிந்த முதலியாருக்கும் கூழங்கைத்தம்பிரானுக்கும் மாறுபாடு உண்டாயிற்று. "கோவிந்த முதலியாரோடு பகைத்துக்கோடல் நல்லதன்று" என்று பலரும் கூழங்கைத் தம்பிரானுக்கு அறிவுரை கூறினர்கள். துறவியாக விளங்கிய தம்பிரானே எவரையும் ஒரு பொருட்படுத்தினரல்லர். அவருடைய கதை, "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதாகவே முடிந்துவிட்டது.

மாறுபாட்டிற்குக் காரணமாக இருந்த பசுவைக் கூழங்கைத்தம்பிரான் ஓட்டிக்கொண்டு கோவிந்த முதலியார் வீட்டிற்கு அவர் வீட்டில் இருக்கிற சமயம்பார்த்துச் சென்றார். வீட்டுவாசலிலே நின்றுகொண்டு, 'கோவிந்தா! கோவிந்தா!' என்று கூப்பிட்டார். உள்ளிருந்து சிலர் வெளியே வந்து, "முதலியாரை இவ்வாறு பெயர் சொல்லி அழைக்கலாமா? தவறாகவும் தொல்லையாகவும் முடியுமே" என்று கூறினார்கள். தம்பிரான், அவர்களைப் பார்த்து, "கோ - பசு, இந்தா - பெற்றுக்கொள், என்றுதானே கூறினேன். இதில் தவறு என்ன இருக்கிறது?" என்று பதில் உரைத்தார். அதன்பிறகு அந்த முதலியாருக்கும் தம்பிரானுக்கும் இணக்கம் உண்டாயிற்று.

ஒருநாள் தம்பிரான் நீதிமன்றத்திற்கு ஏதோ ஓர் அலுவலை முன்னிட்டுச் சென்றார். அவர் உட்காருவதற்கு நாற்காலி அகப்படவில்லை. நீதிமன்றத்திற்கு வெளியே சென்றார். "கோவிந்த முதலியாரைத் தேடிக்கொண்டு ஓராள் வந்திருக்கிறது என்று கோவிந்த முதலியாரிடம் சொல்வாயாக" என்று கூறி, ஓராளைக் கோவிந்த முதலியாரிடத்திற்கு அனுப்பினார். அதனைக் கேள்வியுற்ற முதலியார் விரைந்து வெளியே வந்தார். அந்தச் சமயத்தில் தம்பிரான் வேறொரு வழியாக உள்ளே சென்று முதலியாருடைய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். திரும்பி உள்ளே வந்த முதலியார் தம் நாற்காலியில் தம்பிரான் உட்கார்ந்திருத்தலைக் கண்டு வெட்கமடைந்தார். அப்பால் உலாவிக்கொண்டு நின்றார். நீதிமன்றத் தலைவர் இருவருடைய செயலைப் பார்த்தார். அவர் ஒரு வெள்ளையர். அந்நாட்டு மொழியறியாமையின் கோவிந்த முதலியாரைத் துணைகொண்டு நீதி வழங்கிக்கொண்டிருந்தார். அவர் கோவிந்த முதலியாரைப் பார்த்து, "இந்தக் கருங்குரங்கு

உள்ளே வந்து ஏன் உம்முடைய மரத்தில் (நாற்காலி) ஏறி உட்கார்ந்தது?" என்று உசாவினார். தம்பிரான் சிறிது கருநிறமுடையவராக இருந்ததைச் சுட்டியே நீதிமன்றத் தலைவர் இவ்வாறு கேட்டார்.

நீதிமன்றத்தலைவர் கூறியது தம்பிரானுக்குச்சினத்தை உண்டாக்கியது. "வெள்ளை நாயைக் கண்டமையால் குரங்கு மரத்திலே ஏறிக்கொண்டது" என்று பதிலுரைத்தார். செல்வாக்கிற் சிறந்து விளங்கிய தம்பிரானை நீதிமன்றத் தலைவரால் யாதும் செய்யமுடியவில்லை.

தம்பிரான் எவருடைய கொள்கைகளையும் பேச்சுக் களையும் ஒருபொருளாக மதிக்கமாட்டார். எச்செயலையும் தம்முடைய விருப்பப்படியேதான் செய்துமுடிப்பார். அவர் யாருக்கும் அஞ்சி எச்செயலையுஞ் செய்தவரல்லர். பரந்த பேரறிவாளராக விளங்கிய அவர் நீண்டநாள் உயிர்வாழ்ந் திருந்தார். ஈழநாட்டிற்குச் சென்ற அவர் இந்த நாட்டிற் குத் திரும்பி வரவில்லை. கஎகூ௬-ஆம் ஆண்டில் அவ் விடமே காலமானார்.

---

## கஎ. கடிகை முத்துப்புலவர்

### ஊர் முதலியன

கடிகை முத்துப்புலவர் பாண்டிநாட்டில் உள்ள எட்டையபுரத்தில் தோன்றியவர். அவருடைய குலம் கம்மாளர் குலம். கடிகை என்பது குடிப்பெயர். இவ ருடைய காலம் ஏறக்குறைய இருநூறு யாண்டுகட்கு முன்னர் என்ப. பலரிடத்திலும் கல்வி கற்றுக் கல்வியில் தேர்ச்சியடைந்தார். சமயத்திற்கேற்றவாறு பேசுவதிலும் பாக்கள் பாடுவதிலும் மிகவும் வல்லவர். இவருடைய பாடல்கள் முற்றும் சிற்றின்பச்சுவை அமைந்தனவாகவே

விளங்கும். இவர் எட்டையபுர அரசராயிருந்த சகவீரராம வேங்கடேசுர எட்டமநாயக்கரது வாசற்புலவராக அமைந்து நின்று அவர்மீது பல தனிச்செய்யுட்களும் நூலும் பாடியுள்ளார்.

பேச்சுத் திறம்

இவருடைய பாடல்களேயன்றிப் பேச்சும் இரு பொருள் கொண்டும் கேட்டார்க்குக் களிப்புண்டாக்கும் வகையிலும் அமைந்திருக்கும். இவர் ஒருமுறை தம் மனைவியின் திவசத்திற்கு அரிசி வாங்கித் தலைமீது சுமந்து கொண்டுவந்தார். வரும்போது நாம் புலவனாக இருந்தும் இம் மூட்டையைத் தூக்குவதற்கு ஓர் ஆள் கிடைக்கவில் லையே! நமது தலைவிதி இவ்வாறுதானா உள்ளது என்று எண்ணமிட்டுக்கொண்டுவந்தார். அப்பொழுது புலவரின் நண்பர் ஒருவர் எதிர்ப்பட்டார். "என்ன மூட்டை சுமந்து வருகிறீர்கள்?" என்று உசாவினார். உடனே புலவர், "தலைவிதிவசம்" என்று பதிலிறுத்தார். அம்மொழி, தலைவி திவசம் என்றும், தலைவிதி வசம் என்றும் பொருள் படுதலை உணர்ந்த நண்பர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். புலவர் இறக்குந்தறுவாயில் இருந்தார். அப்பொழுது புலவருடைய மக்கள் புலவரைச் சுற்றியிருந்துகொண்டு, "அப்பா இனி எங்கட்கு யார் கதி!" என்று கூறி அழுதனர். புலவர் அழுகிற மக்களைப் பார்த்து, "எட்டப்பன் இருக்கும் போது ஓர் அப்பனுக்காக ஏன் அழுகிறீர்கள்?" என்று கூறினார். இறக்கும்பொழுதுகூட புலவர் சொல்லாற்றல் குன்றாதிருத்தலைக் கண்டு பலரும் இன்பமும் துன்பமும் ஒருங்கே எய்தினர்.

உமறுப் புலவர்

சீறாப் புராணம் என்பது முகமதுநபியின் வரலாறு கூறுவது. அதனை இயற்றியவர் உமறுப்புலவர் என்னும்

முகமதியர். உமறுப்புலவரின் தந்தை வேங்கடேசுர எட்டப்ப பூபதியிடத்திற்கு வந்து செல்லும் வழக்கம் உடையவர். அவர் கடிகைமுத்துப்புலவரின் கல்வித்திறத்தைப் பார்த்துக் களிப்படைந்தார். தம் மைந்தனையும் தமிழறிஞனாக்குமாறு கூறிப் புலவரிடம் ஒப்புவித்தார். அம்மைந்தனும் நன்கு கற்றுத் தேறிச் சீறாப்புராணம் முதலிய நூல்களைப் பாடும் ஆற்றலையடைந்தான்.

இவர் செய்த நூல்கள்

கடிகை முத்துப்புலவர் கடவுளின்மேற் செய்தது திருவிடைமருதூர் அந்தாதி என்னும் ஒரே ஒருநூல் மட்டுந்தான். மற்றவைகளெல்லாம் மக்கள்மேற் பாடப்பெற்ற மக்கட் புகழ்ச்சியாகும். சிவகிரி என்னும் ஊரில் பெருநிலக்கிழவராக இருந்த வரகுணராம வன்னியனார் மேல் திக்குவிசயம், ஊற்றுமலை பெருநிலக்கிழவர் மருதப்ப தேவர்மேல் மதனவித்தாரமாலை, எட்டையபுரம் அரசர்மேல் காமரசமஞ்சரி, சமுத்திரவிலாசம் முதலிய நூல்களைப் பாடியுள்ளார். இப்புலவர் புனைந்துரைப்பதிலும், சிலேடை, யமகம், திரிபு முதலிய வகைகளிற் பாடுவதிலும் வியக்கத்தக்க ஆற்றலுடையவர். சமுத்திரவிலாசம் என்பது கழிக்கரைப் புலம்பல் என்றும் கூறப்பெறும். இது நூறு செய்யுட்கள் அடங்கப்பெற்றது. சிலேடைப் பாக்களை மிகுதியாகக்கொண்டது. கடற்கரைப் பக்கத்தில் இருந்துகொண்டு, தலைமகனைப் பிரிந்த தலைவி ஆற்றாமல் கடலைப் பார்த்துப் புலம்புதலே இந்நூலின் செய்தியாகும். இந்நூலின் தன்மை ஒன்றைக்கொண்டே புலவரின் அறிவாற்றலை ஒருவாறு ஊகித்துணரலாம். இவர் செய்த தனிப்பாடல்கள் பல, தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் சேர்க்கப்பெற்றுள்ளன. மாதிரிக்கு ஒன்றை இங்குக் காட்டுவோம்.

புடவிகட கடெனவுடை படவடவை சிதறவரு
　　பொருதார்ச் சீறும்
தட்விகட களிற்றுதயன் இளசைவெங்க டேசுரெட்டன்
　　தருவான் முல்லை
அடவிகட உனதுகுடை அகலமத கயமேக
　　அனிலத் தேரை
நடவிகடல் நிமிர்முகடு தொடுபரிதி உதயமிதோ
　　நான்கண் டேனே.

**சமுத்திர விலாசம்**

உள்ள திருக்கை காணீரே உறங்கா திருக்கை காணீரே
　ஓசைக் கடலைப் பெருமலையே ஒழியேன் விரகப் பெருமலையே
கள்ள ருதாங் குவளைகளே கழலுங் கரந்தாங் குவளைகளே
　கரையிற் படராத் துப்பீரே கலந்த துடலத் துப்பீரே
அள்ளல் அலையும் களிக்கரையே அழைப்பார் மாதர்களிக்கரையே
　ஆறு வகுப்புக் காற்றேனே ஆழி புடைப்புக் காற்றேனே
வெள்ள மூரும் பானத்தே விரும்பா திருந்தேன் பானத்தே
　வெங்க டேச ரெட்டனையே மேவத் தடுக்கு மெட்டனையே.

---

## கரு. சைவ எல்லப்பநாவலர்

அருணாசல புராணம், அருணைக் கலம்பகம், அருணையந்தாதி, திருவிரிஞ்சைப்புராணம், செவ்வந்திப்புராணம், திருவெண்காட்டுப்புராணம் முதலிய பல நூல்களை இயற்றியவர் சைவ எல்லப்ப நாவலர்.

சைவ எல்லப்பநாவலருடைய பிறப்பிடம், காலம், தாய் தந்தையருடைய பெயர் முதலிய செய்திகள் எவருக்கும் விளக்கமாகத் தெரியவில்லை. அருணாசல புராணம் முதலிய அவருடைய நூல்களைக்கொண்டு அவருடைய கல்வியறிவின் பெருமையையும், சைவசமயத்தில் அவருக்குள்ள அழுத்தமான பற்றையும் ஒருவாறு அளவிட்டறிய

லாம். எல்லப்பநாவலர் ஊர் இன்னதென்று ஐயத்திற் கிடமின்றி முடிவுசெய்யப்பெறவில்லை. குலம் சைவவேளாளர் குலம் என்று கூறப்பெறுகிறது. தாய் தந்தையர் இட்ட பெயர் எல்லப்பர் என்பது. சைவத்தில் அவர் கொண்டுள்ள பற்று நோக்கிச், 'சைவ' என்னும் அடையும், அறிவுச் சிறப்புப்பற்றி '**நாவலர்**' என்னும் சிறப்புச் சொல்லும் அவருடைய பெயரோடு இயைந்தன.

எல்லப்பநாவலர் இளமையில் தந்தையார்பால் கல்வி பயின்றதாகவும், பிறகு தருமபுர ஆதீனத்தையடைந்து இலக்கண இலக்கியங்களையும், சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத் தெளிந்ததாகவுங் காதுவழிச் செய்திகள் சிலவற்றின் மூலம் தெரிகின்றன.

சைவ எல்லப்பநாவலர், இலக்கண இலக்கியப் பயிற்சியும் சைவசித்தாந்த நூற்பயிற்சியும் செய்து முடித்த பின்னர் இல்லறத்தை மேற்கொள்ள விரும்பினர். தம் அறிவுக்குத்தக்க ஒரு பெண்மணியைத் தேடினர். நாவலரின் நல்வினைப்பயனால் அறிவு நலம் அமைந்த ஒரு மங்கை வாழ்க்கைத் துணைவியாக அமைந்தாள். ஒத்த அறிவு வாய்ந்த இருவருடைய வாழ்க்கையும் இனிது நடைபெற்றது.

எல்லப்பநாவலர் அருணைக் கலம்பகம் இயற்றியது பற்றி, ஒன்றற்கொன்று மாறுபட்ட பல செய்திகள் வழங்குகின்றன. அவற்றுட் சில வருமாறு :—

அட்டப்பிரபந்தம் இயற்றிய பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் சைவ எல்லப்பநாவலரும் ஒருசாலை மாணாக்கர்கள். ஐயங்கார் தமது சமயமாகிய வைணவத்திடத்திலே பெரும் பற்றுக்கொண்டு விளங்குதலைக் கண்ட எல்லப்பநாவலருக்கும், சைவமதப்பற்று மிகுதலாயிற்று. ஐயங்கார் வைண

வத்தை உயர்த்திப் பேசும்போதெல்லாம் நாவலர் சைவத்தை உயர்த்திப்பேசுவார். இருவரும் ஆருயிர் நண்பர்களாக விளங்கினார்களாயினும் மதச்செய்தியில் மட்டும் ஒருவருக்கொருவர் சிறிதும் விட்டுக்கொடார்கள்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் திருவரங்கக் கலம்பகத்தைப் பாடி முடித்தார். அக்கலம்பகத்தின் அமைப்பு ஐயங்காருக்கே மிகுந்த உவகையை அளித்தது. அதனைத் தம்முடைய நண்பராகிய எல்லப்பநாவலரிடங் காட்டுதற்காக அவருடைய வீட்டிற்குச் சென்றார். அப்போது நாவலர் வீட்டில் இல்லை. ஐயங்கார் கலம்பகத்தை நாவலர் மனைவியிடங் கொடுத்து, அதனை நாவலரிடங் கொடுக்குமாறு கூறிவிட்டுத் திரும்பிச் சென்றார்.

எல்லப்பநாவலர் மனைவியும் அறிவுமிக்காராதலின், அக் கலம்பகத்தைப் படித்துப் பார்க்கத் தொடங்கினார்.

"வாடியோட வனசமன்ன இருகண்வெள்ளம் அருவிபோல்
மருவியோட மதனன்வாளி யுருவியோட வாடையூ
டாடியோட அன்றிலோசை செவியிலோட வண்டுழாய்
ஆசையோடு மெங்கள்பேதை யாவியோடல் நீதியோ
மோடியோட அங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனாயிரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே."

என்ற பாட்டைக் கண்டதும், அவ்வம்மையாருக்கு மிகுந்த சினமுண்டாயிற்று. அவர் அதனை உள்ளத்தே அடக்கி வைத்துக்கொண்டார். தம்முடைய தலைவராகிய எல்லப்ப நாவலர் வந்ததும், அவரிடத்தில் திருவரங்கக் கலம்பகத்தைக் கொடுத்தார். எல்லப்ப நாவலர் கலம்பகத்தை முற்றும் படித்தார். அதற்கு எதிரிடையாகத் தாமும்

ஒரு கலம்பகம் பாட எண்ணினார். அன்றிரவே அருணைக் கலம்பகத்தைப் பாடி முடித்தார். திருவரங்கக் கலம்பகத்தினிடத்திற் சினங்கொண்டிருந்த அம்மையார்,

கருடனோட மற்சமாமை கமலமோட முற்கரங்
காட்டிலோட பூன்றிராமர் கண்டமட்டி லோடவே
மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே
வஞ்சமுள்ள கண்ணனோட மாரன்நீறச் சேனனும்
இருளிலோட முண்டகத்தன் ஏங்கியோட வென்றவர்க்
கிறுமுறுதங் குயிரளித்த எந்தல்யாவன் வேதமே
அருளுமந்த முதல்வன்யாவன் அருணைகண்டு வாழ்மினோ
வாரணாதி மூலமென்ப தறிகிலாத மாக்களே.

என்னும் செய்யுளைத் தாம் செய்து, அதனை அக்கலம்பகத்தில் சேர்க்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஆனால், எல்லப்பநாவலர் அதனைக் கலம்பகத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை.''

"எல்லப்ப நாவலர் ஒருமுறை தருமபுர ஆதீனத்திற்குச் சென்றார். அப்போது, பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய திருவரங்கக்கலம்பகம் அவ்வாதீனத்தாருடைய பார்வைக்கு வந்திருந்தது. அங்கிருந்தார் சிலர், "கலம்பகம் ஐயங்காரால் நன்கு பாடப்பெற்றுள்ளது. இத்தகைய அரிய கலம்பக நூல் நம்முடைய சைவத்தில் இல்லையே!'' என்று எல்லப்ப நாவலரிடம் முறையிட்டார்கள். அவர்களுடைய முறையீட்டைக் கேட்ட எல்லப்ப நாவலர் அன்றிரவில் அருணைக் கலம்பகத்தைப் பாடி ஆதீனத்தார்களுக்குக் காட்டினார். அக்கலம்பகத்தை உற்று நோக்கிய ஆதீனத்தார் பெருங்களிப்படைந்து, அக்கலம்பகத்தை அவ்விடத்தில்தானே அரங்கேற்றச் செய்து, எல்லப்ப நாவலருக்குத் தக்க பரிசளித்துப் போற்றினார்கள்.''

இத்தகைய செய்திகள் பல அருணைக் கலம்பகத்தைப் பற்றி வழங்குகின்றனவாயினும், எதனையும் உறுதியென்று கோடற்குரிய ஆதாரம் ஒன்றுமில்லை.

எல்லப்பநாவலருடைய நூல்களெல்லாம் எளிய இனிய நடையில் அமைந்தவை. முன்னாளில் கணக்காயர்கள், தங்களுடைய திண்ணைப் பள்ளிக்கூடத்தின் இறுதி வகுப்பிற்கு அருணாசல புராணத்தைத்தான் பாடநூலாக அமைத்துக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார்கள். அந்நாளில் ஒரு மாணவன் அருணாசலபுராணம் படிக்கிறான் என்றால், தற்கால உலகில் பி.ஏ., படிக்கும் மாணவனுக்குள்ள மதிப்பு அவனுக்கு உண்டாகும். தற்காலத்திலும் அருணைக்கலம்பகம் புலவர் தேர்வுக்குப் போதிக்கப்பெறும் நூலாக அமைந்திருக்கிறது. அருணாசல புராணம் அனைவராலும் இனிது போற்றிக் கற்கப்பெறுகின்றது.

### அருணாசல புராணம்

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச் சிரத்தினில்வைத்
துலக மேழும்
தருமானை இடத்தினில்வைத் தருள்வானைப் பவளநெடுஞ்
சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப் பெருமானை
மகிழ வேறும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை அடிபணிந்து
பிறவி தீர்ப்பாம்.

### திருவருணைக் கலம்பகம்

சேணார் திருவுடைச் செல்வரைக் காணிற் சிறப்புச்செய்து
பேணா தவருமுண் டோபுவி மீதிற் பெருத்தெழுந்து
சோணா சலவடி வாய்வெளி யாய்நின்ற சோதிதனைக்
காணாத கண்ணனைச் சொல்வர்செந் தாமரைக் கண்ணனென்றே.

# ௬௯. கச்சியப்ப முனிவர்

தொண்டை மண்டலத்திலுள்ள திருத்தணிகை என்னுந் திருப்பதியிலே, இற்றைக்கு ஏறத்தாழ இருநூறு யாண்டுகளுக்கு முன்னே கச்சியப்ப முனிவர் தோன்றினார். அவருடைய குலம் காஞ்சிபுரத்துச் சைவவேளாளர் குலமாகும். தாய் தந்தையர்களால் தக்க காலத்திலே கல்விப் பயிற்சி செய்விக்கப்பெற்றார். ஒழுக்கம், அருள், அன்பு முதலிய நல்லியல்புகள் அவருக்கு இளமையிலேயே நன்கு அமைந்தன.

இறையன்பு குறைவற அமையப்பெற்ற அவர், நல்வினை மிகுதியினால் இளமைக்காலத்தில்தானே பல சிவப்பதிகட்குஞ் சென்று இறைவனைப் போற்றி வழிபடலானார். சோழநாட்டிலே மிகச் சிறந்து விளங்கும் சிதம்பரம் முதலிய பதிகளையடைந்து வழிபட்டார். பின்பு திருவாவடுதுறையை அடைந்தார். அங்குள்ள ஆதீனத்தில் எழுந்தருளியுள்ள பெரியார்களைக் கண்டு வணங்கவேண்டும் என்னும் நோக்கம் அவருக்குண்டாயிற்று. ஆதீனத்திற்குள் சென்று, திருக்கைலாயபரம்பரைச் சித்தாந்த சைவ ஞாயிறாகத்திகழ்ந்த நமசிவாயமூர்த்திகளைக் கண்டு வணங்கினார். அவருடைய திருவருள் நோக்கத்தைப் பெற்றார். அப்பொழுது அங்கு சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த அறிவாசிரியராகிய பின்வேலப்பதேசிகரை, ஒடுக்கத்திலேபோய் வழிபட்டுப் பேரன்போடு வணங்கினார். அவரிடத்திலே சைவத்துறவும் சிவதீக்கையும் பெற்றுக் கொண்டார்.

அப்பொழுது அங்கு, சிவஞானபோத மாபாடியத் தலைவராகிய சிவஞானமுனிவரும் அமர்ந்திருந்தார். அவருடைய கல்விப்பெருமை கச்சியப்பமுனிவர்க்கு

மிருந்த மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அம்முனிவர்க்கு மாணாக்கராக அமைந்து, பல தமிழ் இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் தருக்க நூல்களையும் சைவசித் தாந்த நூல்களையும் கற்றுணர்ந்தார். கச்சியப்பருடைய அறிவு, சிவஞானமுனிவர் மாணவர்களாகத் திகழ்ந்த பலருடைய அறிவினுஞ் சிறந்ததாகத் திகழ்ந்தது. ஆகவே சிவஞான முனிவருடைய மாணவர்களாகிய, இலக்கணம் சிதம்பரநாத முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், காஞ்சிபுரம் சரவணபத்தர், சிதம்பரபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளை ஆகிய பலருள்ளும் கச்சியப்பமுனிவரே முதன்மாணாக்கராகச் சிறந்து விளங்கினார்.

கச்சியப்ப முனிவர் வாக்குவன்மையும் சொற்பொழி வாற்றலும் நன்கு அமையப்பெற்றவர். எத்தகைய அரும் பொருளையும் எளிமையாகவும் இனிமையாகவும் விரித் துரைப்பதில் மிகவும் வல்லவர். அவருடைய சொல் லாற்றல் எல்லோருடைய நன்மதிப்பையும் மிகுதியாகப் பெற்றிருந்தது.

கச்சியப்ப முனிவர் செய்யுள் பாடும் விரைவு, நெட்டு ருப்பண்ணிய பழம்பாடலைத் திரும்பக் கூறுவதுபோல விருக்கும். இடத்திற்குத் தக்கபடியும் காலத்திற்குத் தக்க படியும் நுட்பமாகப் பேசுவதிலும் செய்யுள்கள் பாடுவதி லும் அவருக்கிணையாக அக்காலத்தில் ஒருவருமிலர். கல்வி கேள்விகள் நிறைவுபெற்ற பின்னர் மீண்டும் கச்சியப்பர் இறைவழிபாடியற்றும் பொருட்டுச் சிவப்பதிகள் பல வற்றிற்குஞ் செல்லலானார்.

திருவானைக்கா என்னும் சிவப்பதியை அடைந்து ஆங்கமர்ந்திருந்தபோது, திருவானைக்காப் புராணத்தையும்

பூவாளூர்ப் புராணத்தையும் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துத் தமிழ்மொழியிலே பாடியருளினர். அப் புராணங்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் நன்கு நிரம்பப்பெற்றவை.

கொங்கு நாட்டிலுள்ள திருப்பேரூர் என்னும் திருப் பதிக்குச் சென்று அங்கு அமர்ந்திருந்தபோது, பேரூர்ப் புராணத்தை மொழிபெயர்த்துப் பாடியருளினர்.

திருத்தணிகையை அடைந்து அங்கு தங்கியபொழுது, விசாகப்பெருமாளையருக்கும் சரவணப்பெருமாளையருக்குந் தந்தையாராகிய கந்தப்பையர் முதலிய பலருக்குக் கல்வி கற்பித்தருளினர்.

அப்பொழுது அங்கிருந்தார் சிலர், புறச்சமயத்தின ராற் செய்யப்பெற்ற சீவகசிந்தாமணி சிறப்புற்றிருத்தலை யும், சைவசமயிகளும் அதனைப்போற்றிக் கற்றலையும் எண்ணி வருந்தியிருந்தனர். அவர்கள் முனிவரையடைந்து சீவகசிந்தாமணியைப்போன்ற சிறந்த இலக்கியம் ஒன்று சைவசமயிகட்கு ஏற்றவகையில் இயற்றியருளுதல் வேண்டு மென்று வேண்டிக்கொண்டனர். முனிவருக்கும் அத் தகைய எண்ணம் முன்னரேயிருந்தது. ஆகவே, அவர் திருத்தணிகைப் புராணத்தைப் பாடி முடித்தார். அப் புராணம், சொல்வளம், செய்யுள்நடை, சந்தம், பொருட் சுவை ஆகியவைகள் நன்கு நிரம்பப்பெற்றுத் திகழ்கிறது. தமிழ்ப்புராணங்கள் பலவற்றிற்கும் அத்தணிகைப் புராணம் தலைமைபெற்று விளங்குகின்றது.

கச்சியப்ப முனிவர் கல்வியறிவாற்றலோடு கடவுளின் அருளாற்றலும் அமையப்பெற்று விளங்கினர். அவருடைய மாணவராகிய கந்தப்பையருக்கு வயிற்றிலே குன்ம நோயுண்டாயிற்று. அப்பொழுது கச்சியப்பர் திருத்

தணிகை யாற்றுப்படையைப்பாடி அந்நோயை அகற்றி யருளினார். திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதியும் வேறு சில நூல்களும் திருத்தணிகையில் இருந்தபொழுது செய்தருளினார்.

சென்னையை அடைந்து அங்கு சிறிதுகாலந் தங்கி யிருந்தார். அப்பொழுது அங்கிருந்த அன்பர்கள் பல ருடைய வேண்டுகோளின்படி விநாயக புராணமும் சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழும் செய்தருளினார். அவ்விடத்து அன்பர்கள் அடியுறையாக வழங்கிய பெரும் பொருளைக் கொண்டு, திருவாவடுதுறையில் நமச்சிவாயமூர்த்திகள் திருமுன்பு திருமண்டபப்பணி செய்தருளினார்.

சென்னையில் விநாயகபுராணம் அரங்கேற்றப்பெற்ற அவைக்கு ஐயாப்பிள்ளை என்னும் பெயருடைய ஒரு செல்வர் வந்திருந்தார். 'அவர் இஃதென்ன இராமாயணமா?' என்று சற்று இகழ்ச்சியாகப் பேசினார். அதனை அங்குள்ள வர்கள் மறைத்தும் கச்சியப்ப முனிவருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. முனிவர் தமது புராணச் சொற்பொழி வைத் தொடங்காது, இராமாயணத்தை யெடுத்துக் கொண்டு, முதல் ஆறு பாடல்களில்மட்டும் நூறு குற்றங் கள் கூறினார். இகழ்ச்சியாகப் பேசிய ஐயாப்பிள்ளை முனி வரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதுடன் நூறு வராக னும் உயர்ந்த பட்டாடைவகைளும் கொண்டுசென்று காணிக்கையாக வைத்தார். அதன்பிறகுதான் புராணம் அரங்கேற்றுதல் தொடங்கப்பெற்றது.

கச்சியப்ப முனிவர் சென்னையிலிருக்கும்போது அவ ருடைய ஆசிரியராகிய சிவஞான முனிவர் காஞ்சியிலிருந் தார். காஞ்சியிலிருந்த தமிழ் அறிஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து சிவஞான முனிவரை யடைந்தனர். அவர்கள்

முனிவரைப் பார்த்து, 'தாங்கள் பாடியுள்ள காஞ்சிப் புராணத்தின்கண், காப்புக்கடுத்தபடியாக ஏகாம்பரநாதர் வணக்கங் கூறுது கூத்தப்பிரான் வணக்கங் கூறியது தவறு' என்று சொற்போரிட்டனர். சிவஞானமுனிவர் கூறிய பதிலுரைகளை அப்புலவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சென்னையிலிருந்த தம்முடைய மாணவராகிய கச்சியப்ப முனிவருக்கு அச்செய்தியை அறிவித்தார்.

கச்சியப்பமுனிவர் சென்னையைவிட்டுக் கச்சியை அடைந்தார். ஒரு பேரவையைக் கூட்டினர். சிவஞான முனிவரிடம் கடவுள் வாழ்த்தைப்பற்றிச் சொற்போரிட்ட புலவர்களும் அங்கு வந்திருந்தனர். கச்சியப்ப முனிவர், காஞ்சிபுரத்துத் தேவார ஓதுவார்களை அழைத்தார். அப் பதிக்குரிய தேவாரப்பதிகமொன்றைப் பாடச்சொன்னர். அவ்வோதுவார்களும் அவ்வாறே ஓதத்தொடங்கி, முன்னர் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறிப் பாடத்தொடங்கினர்.

அப்பொழுது கச்சியப்ப முனிவர் அப்புலவர்களைப் பார்த்து, 'இந்த வோதுவார்கள், 'திருச்சிற்றம்பலம்' என்று கூறித் தொடங்குகிருர்களே இஃது உங்கட் கெல்லாம் உடன்பாடுதாஞ? நீங்களெல்லாரும் ஒன்று சேர்ந்து, இவர்களையெல்லாம் இப்பதிப் பதிகங்களைப் பாடத் தொடங்கும்போது, 'பிருதுவியம்பலம்' என்று கூறித் தொடங்கும்படியாகச் செய்யக்கூடாதா? என்று கேட்டார். அப்புலவர்கள் யாதும் பதிலுரையாது ஊமை களைப்போல் பேசாதிருந்தனர்.

அதன்பிறகு கச்சியப்பர், கடவுள் வாழ்த்தில் முன்னர் விநாயக வணக்கமும், அதன்பின் கூத்தப்பிரான் வணக்க மும் கூறுதலே சிறந்ததென்று பற்பல சான்றுகள்

காட்டிச் சொற்பொழிவு செய்து அப்புலவர்களின் வாயை அடக்கினர்.

பிறகு கச்சியப்பமுனிவர் கச்சியிலேயே தங்கினர். தம்முடைய ஆசிரியராகிய சிவஞானமுனிவர் கட்டளைப்படி, காஞ்சிப்புராணத்தின் இரண்டாங்காண்டஞ் செய்தருளினர். கச்சியாநந்த ருத்திரேசுவரர் வண்டுவிடுதூது, கச்சியாநந்த ருத்திரேசுரர் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கர வந்தாதி முதலியனவும் பாடியருளினர்.

பலவகையினுந் தமிழ்வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு செய்த அப்பெரியார், காஞ்சிநகரத்தின்கண் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எழுநூற்றுப் பன்னிரண்டிற்குச் சரியான சாதாரணஆண்டு சித்திரைத்திங்கள் புனர்பூச நாளிலே இறைவன் திருவடிப் பேறெய்தினர்.

---

## உ0. மிதிலைப்பட்டி
## அழகிய சிற்றம்பலக் கவிராயர்

ஊர் முதலியன

வரலாற்றுப் பெருமைபெற்று விளங்கும் ஊர்களில் மாபலிபுரமும் ஒன்றாகும். இவ்வூர் மாமல்லபுரம் எனவும் வழங்கப்பெறும். இவ்வூர் தொண்டைநாட்டுக் கடற்கரையில் அமைந்துள்ளது. அவ்வூரில் வேளாண்குடியினர் பலர் உளர். இற்றைக்கு முந்நூறு யாண்டுகட்கு முன்னர் அவ்வூரிலே அழகிய சிற்றம்பலக்கவிராயர் என்பார் ஒருவர் தோன்றினர். அவர் சமயம், சைவம் என்பதும் அவர் அறிஞர் என்பதும் அவருடைய பெயரினனே அறியப் பெறும். அக் கவிராயர் வள்ளல்களை நாடித் தென்னாடு சென்றார். தொண்டைநாடு சான்றோர்களை மிகுதியாகப்

பெற்றிருந்ததாயினும் அதற்கேற்ப வள்ளல்களைப் பெற்றிருக்கவில்லை.

வெங்களப்ப நாயக்கர்

அந்நாளில் மதுரையைத் திருமலை நாயக்கர் என்னும் நாயக்கமன்னர் அரசாண்டிருந்தார். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றஞ் செய்வித்தவர் இவர்தாம். இம் மன்னரின்கீழ்ப் பலர் சிற்றார் ஆட்சியை மேற்கொண்டு சிறந்து விளங்கியிருந்தனர். அவர்களில் வெங்களப்ப நாயக்கர் என்பவரும் ஒருவர். அவர் மிகுந்த தமிழ்ப் பற்றும் கொடைக்குணமும் உடையவராக இலங்கினார். வெங்களப்பநாயக்கரின் விழுமிய பண்பாட்டினையுணர்ந்த அழகிய சிற்றம்பலக்கவிராயர் அவர்மீது குறவஞ்சி என்னும் நூல் ஒன்றைப்பாடி அரங்கேற்றஞ்செய்தார். குறவஞ்சியின் இனிமையையும் பெருமையையும் இனிதுணர்ந்த நாயக்கர், பாண்டிநாட்டில் உள்ள மிதிலைப்பட்டி என்னும் ஊரை அழகிய சிற்றம்பலக்கவிராயருக்கு நன்கொடையாக வழங்கினார். கவிராயர் அவ்வூரைப் பெற்றது முதல் அவ்வூரிலேயே நிலைக்குடியாகத் தங்கினார். அதுமுதல் அவருடைய பெயர், மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் எனக் கூறப்பெறலாயிற்று. கவிராயருடைய வழிமுறையினர் இன்றும் மிதிலைப்பட்டியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் கற்றவர்கள் கல்லாதவர்கள் ஆகிய எல்லாருடைய பெயர்களுக்கும் இறுதியில், கவிராயர் என்னும் சிறப்புப்பெயர் சேர்த்து வழங்கப்பெறுகிறது.

ஓலைச்சுவடிகள்

கவிராயரிடத்தில் கணக்கற்ற நூல்கள் ஓலைச்சுவடியாக இருந்தன. அவைகள் கூடியவரை சுத்தப் படிகளாகவே அமைந்திருந்தன. உ. வே. சாமிநாதையர் அப்

படிகளில் தமக்கு வேண்டியவைகளை எடுத்துச்சென்று பெரும் பயன்பெற்றார். எஞ்சிய சுவடிகள் அவருடைய நினைவுக்குறியாக இன்றும் அவருடைய வீட்டில் இருக்கின்றன.

தளசிங்கமாலை

கவிராயர் இராமநாதபுரம் திருமலை சேதுபதிமீது **தளசிங்கமாலை** என்னும் நூல் ஒன்றைப்பாடித் தக்க நன்கொடை பெற்றார். இவருடைய வழிமுறையினரில் மங்கைபாகக் கவிராயர் என்பவர் ஒருவர் சிறந்து புலமையாளராக விளங்கினார். கவிராயரின் வழிமுறையினர் பலர் இன்று வறிய நிலைமையிலிருத்தல் வருந்தத்தக்க தொன்றாகும்.

---

## உக. இன்பகவிப் புலவர்

திருநெல்வேலி மாவட்டத்திலே மணல்பார் என்னும் ஊரிலே வலைஞர் குலத்தில் இன்பகவிப் புலவர் தோன்றினார். இன்பகவிப் புலவருடைய தாய் தந்தையர்கள் கிறித்துவர்களுடைய மதபோதனைக்கு உட்பட்டுக் கிறித்துவ சமயத்தைப் பின்பற்றியவர்கள்.

இன்பகவிப் புலவருடைய பிள்ளைப் பெயர், **சவியார் என்றிக் லேயாம்** என்பது. இளமைக்காலத்தில் தமிழ் மொழியை நன்குகற்று இனிமையான செய்யுள்களை விரைவாகப் பாடினார். அச் செய்யுட்கள் படிப்பவர்கட்கும் கேட்பவர்கட்கும் மிகுந்த இன்பத்தை உண்டாக்கின. அதனால் இடுகுறிப்பெயர் மறைந்து இன்பகவிஎன்னும் காரணப்பெயர் உண்டாகியது. இன்ப கவியார் வேறு தொழிலிற் புகவில்லை. பரிசில் வாழ்க்கையையே மேற்கொண்டார்.

தூத்துக்குடியில் அந்நாளில் இருந்த வலைஞர் தலைவனாகிய தொன்கபிரியேல் வாஸ்கோமேஸ் என்பவன், இன்பகவிப் புலவரை ஆதரித்துப் போற்றினான். இவர் பலவிடங்கட்குஞ் சென்று செல்வர்களைப் பெரிதும் புகழ்ந்து அரிய பரிசுகளைப் பெற்றார். இலங்கை முதலிய இடங்கட்குஞ்சென்று பொருளும் புகழும் பெற்றார்.

இவர் எட்டையபுரம் பெருநிலக்கிழவரைக் காணச் சென்றார். பெருநிலக்கிழவரும் தலைமை அலுவலாளனும் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். மற்றவர்களும் தத்தமக்குரிய இருக்கைகளில் இருந்தனர். இன்பகவியாருக்கு யாதோர் இருக்கையும் அகப்படவில்லை. எல்லோரும் இருக்கைகளில் அமர்ந்திருக்கும்போது அறிஞர் தரையிலே அமர்வாரா? அவ்வாறு அமரின் அஃது அவருடைய பெருமைக்குச் சிறுமையாக முடியாதா? "துறவிக்கு வேந்தனும் துரும்பு" என்பர். ஆனால் அறிஞர் எளியவர்களா? அறிஞர்களும் துறவிகளைப் போன்றவர்கள் அல்லரோ? எத்தனையோ புலவர்பெருமக்கள் தாம் பாவேந்தர் என்பதை உளங்கொண்டு பூவேந்தர்களை ஒரு பொருட்படுத்தாது நடந்திருத்தலை வரலாறுகளின்மூலம் உணர்கின்றோம் அல்லேமோ? இன்பகவியார் தரையிலே அமரவில்லை. பெருநிலக்கிழவரைப் பார்த்து;

"கங்கை குலத்தில் கனகமணி யாய்உதித்த
சங்கரக்கு மார தயாநிதியே—உங்களுடைச்
சம்பிரதிக் கந்தஇடம் தங்களுக்கும் இந்தஇடம்
இன்பகவிக் கெங்கே இடம்."

என்னும் வெண்பா ஒன்றை விரைந்து பாடினார். அறிஞரின் வெண்பாவைக் கேட்ட பெருநிலக்கிழவர் பெருமகிழ்ச்சி கொண்டார். உடனே அழகிய இருக்கை ஒன்று

புலவர்க்கு இடப்பெற்றது. வேறு பாடல்கள் இல்லாமல் இந்தப் பாடலே நல்ல பரிசிலையும் வாங்கிக்கொடுத்தது.

இன்பகவியார் தஞ்சைக்குச் சென்றார். சரபோசி மன்னரின் அமைச்சரைக் கண்டு உரையாடினார். அமைச்சரின் கேள்விகட்கு எழுந்த பதில்கள் பாவாகவே எழுந்தன. அங்கும் புலவருக்குத் தக்க பரிசில் கிடைத்தது.

அகவை முதிரமுதிரக் குடிப்பழக்கம் புலவரை அடிமை கொண்டுவிட்டது. "தா சீசா ஒன்றைத் தரா விடிலோ இன்றைக்கே, நீ சீ சா என்றே நிகழ்த்துவேன்" என்று பாடத்தொடங்கிய புலவரைப்போல் பாடத் தொடங்கிவிட்டார். குடிவெறியில் இருக்கும்போதுகூட அறிவுகெடாமல் பாடும் ஆற்றல் இவருக்கிருந்தது.

யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது ஆபிரகாம் என்பவரது இல்லத்தில் தங்கினார். ஆபிரகாம் இல்லத்தில் விருந்தோடு மதுவையும் நன்கு மாந்தினார். இன்பகவியார் மதுவின்பத்தில் மூழ்கிக் களித்தலை அங்கிருந்த ஒருவர் பார்த்தார். அவரும் நல்ல அறிஞர். இன்பகவியார் களி மயக்கத்திற் படிந்திருக்கும்போதுகூடச் செய்யுள் பாடுந் திறன் இருக்கிறதா என்பதைக் காண விரும்பினார். இன்பகவியாரைப் பார்த்து, "ஓய் இன்பகவிப் புலவரே! "மை" என்று தொடங்கி 'மயிர்' என்று முடியுமாறு ஒரு செய்யுள் இயற்றும் பார்ப்போம்" என்று கூறினார். அவ்வளவில் இன்பகவியார்,

"மையினமோ கார்மணலோ வண்டினமோ கொண்டலதோ
சைவலமோ யாதெனநான் சாற்றுவேன்—மையலுறு
கங்கைகுல மாலாபிர காமுகின்மேல் ஆசைகொண்ட
மங்கைஇவள் கொண்டை மயிர்"

என்று பாடினூர். இதனைக்கேட்டு அங்கிருந்தார் அனைவரும் வியப்படைந்தனர். யாழ்ப்பாணத்துச் செல்வர் ஒருவர்மீது அரிய குறவஞ்சி ஒன்றைப் பாடியிருக்கிறுர். நல்லூர்க் கந்தசாமிகோயிலுக்குத் திருவிழாப் பார்க்கச் சென்றிருந்தார். முருகக்கடவுள் மயிலூர்தியின்மேல் புறப்பட்ட காட்சி புலவரை இன்பப்பெருக்கில் அழுத்தியது. உடனே, "மயில் வாகனங் கொண்டாண்டி, நல்லூர்க் கந்தன் மயில்வாகனங் கொண்டாண்டி" என்னும் இசைப் பாடல் ஒன்றைப் பாடினூர். பாட்டு முடிந்தபிறகுதான் புலவருக்கு அவருடைய தவறு புலனுகியது. கிறித்துவராகிய நாம் சைவசமயக் கடவுளைப் பாடினேமே என்று உள்ளம் நாணினூர்."

"பத்திராசனங் கொண்டாரே ஏசுநாயகர்—சிலுவைப்
பத்திராசனங் கொண்டாரே"

என்று ஏசுநாதர்மீது இசைப்பா ஒன்றைப் பாடினூர். இவர் செய்த சில சிறு நூல்களும் கிறித்துமதத்தைப்பற்றியவை. இவர் கஅருடு-ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் காலமானூர்.

# உஉ. மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

ஊர் முதலியன

"அன்னம் அளிக்கும்ஊர் அண்டினரைக் காக்குமூர்
சொன்ன மழைபோற் சொரியுமூர்—உன்னினர்க்குத்
தீதுபிணி தீர்க்குமூர் செவ்வேள் இருக்குமூர்
ஓது திருப்பழநி ஊர்."

என்று அறிஞர்களாற் சிறப்பித்து ஓதப்பெற்றது பழநி மூதூர். இவ்வூர் திருவாவிநன்குடி, பொதினி, வைகாவூர், சிவகிரி, சித்தன்வாழ்வு முதலிய வேறு பல பெயர்களையும் பெறும். மாம்பழக்கவிச்சிங்க நாவலர் என்னும் பெரியார் இற்றைக்கு நூற்றுப் பதினைந்து யாண்டுகட்கு முன்னே, அஃதாவது கி. பி. 1836-ம் ஆண்டிலே இப்பழநியிலே பிறந்தார். இவருடைய தந்தையார்பெயர் முத்தைய ஆச்சாரியார் என்பர். தாயார்பெயர் அம்மணியம்மாள். இவர்களுடைய குலம் விசுவகன்மா என்னும் தெய்வகம்மியன் மரபு. இவர்களது சமயம் சைவம். மாம்பழம் என்பது ஒருகாரணத்தால் இக் குடியினருக்கு உண்டான சிறப்புப் பெயர். மாம்பழம் தம் தாய் தந்தையர்க்கு இரண்டாவது புதல்வராகத் தோன்றினர்.

கண் இழத்தல்

அகவை மூன்று நடந்துகொண்டிருக்கும்போது இவருக்குப் பெரியம்மைநோய் கண்டது. கண்டநோய் பழநியாண்டவன் திருவருளால் தீர்ந்ததாயினும் கண்ணொளி மறைந்து போய்விட்டது. கண்ணொளி மறைந்ததாயினும் அறிவிற் சிறந்திருந்தார். இளமைப்பருவத்திற் கற்பிக்க வேண்டிய கல்வியைத் தந்தையாகிய முத்தைய ஆச்சாரியாரே கற்பித்தார். எழுத்தினை மாம்பழத்தின் முதுகிலே எழுதிக் கற்பித்தார். பிறகு மாரிமுத்துக் கவிராயர் என்பவரைக் கொண்டு கற்பிக்கச்செய்தார்.

கவிராயராதல்

ஊனக்கண் அற்றிருந்தும் ஞானக்கண்ணைப் பெற்றிருந்தமையின் மாம்பழம் எளிதில் அறிவிற் சிறந்து திகழ்ந்தார். செய்யுள் பாடுவதிலும் ஆற்றலுடன் விளங்கினார். ஆகவே, கவிராயர் என்னுஞ் சிறப்புப்பெயர் மாம்பழத்தொடு பொருந்தியது.

வடமொழி பயிறல்

மாம்பழக் கவிராயர் வடமொழியையுங் கற்க விரும்பினார். சுப்பராயபாரதியார், இராமசாமிஐயர் என்பவர்களிடம் அதனையும் நன்கு கற்றுத் தெளிந்தார். புறக்கட் புலன் இருப்பின் அறிவு பல வழிகளிலுஞ் செல்லும். அஃதில்லாததாகவே அகக்கட்புலன் ஒருதுறையே செல்வதும் விரைவில் நினைத்த காரியத்தை முடிப்பதும் எளிதாயிற்று. மேலும் மாம்பழக் கவிராயருக்கு முருகப்பெருமான் திருவருள் நன்கு அமைந்திருந்தது. செய்யும் செய்யுட்களெல்லாம் எளிதாகவும் உயர்ந்ததாகவும் அமைந்தது. அவன் அருள் பெற்றார்க்கு அரியதொன்றும் இல்லையன்றோ?

பரிசில் வாழ்க்கை

மாம்பழக்கவிராயர் பரிசில்வாழ்க்கையை மேற்கொண்டார். பாப்பம்பட்டி என்னும் ஊரில் இருந்த வெங்கடசாமி நாயக்கர் என்பவர்மீது பல புகழ்ப்பாக்களைப் பாடிப் பலவகைப் பரிசில்களைப்பெற்றார். மேற்படி நாயக்கர் மீது பாடப்பெற்ற வேட்டைப்புகழ்ச்சி, புலிப்பவனி, குறவஞ்சி, கீர்த்தனை, சீட்டுக்கவி ஆகியவைகட்கு, பொன் முடிப்பு, பீதாம்பரம், சோடிசால்வை, கெண்டையுருமால், சரிகை வேட்டி, பெட்டிவண்டி முதலிய நன்கொடைகள் கிடைத்தன.

சேதுநாடடைதல்

மாம்பழக் கவிராயர் காலத்தில் இராமநாதபுரத்தில் பொன்னுச்சாமித் தேவர் அவர்களும் முத்துராமலிங்க சேதுபதியவர்களும் அரசர்களாக இருந்தனர். அறிஞர்களின் வரிசையறிந்து வழங்குவதில் அவர்களுடைய கீர்த்தி தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. மாம்பழக் கவிராயர் இராமநாதபுரஞ் சென்று பரிசில்பெற விரும்பினார். பல அன்பர்களுடைய உதவியினால் இராமநாதபுரத்தை நோக்கிப் புறப்பட்டார். இடையிலுள்ள மதுரை முதலிய இடங்களில் தங்கி இராமநாதபுரத்தை அடைந்தார். தமது வருகையை அரசர்கட்குத் தெரியப்படுத்தினார். கண்ணற்றவர்களை மன்னர்கள் பார்த்தல்கூடாது என்பது அந்நாளின் வழக்கமாக இருந்தது. அக் காரணத்தினால் அரசர்கள் மாம்பழக்கவிராயரைத் தம் அவைக்கு அழைக்கவோ போற்றவோ இல்லை. எத்தனையோ புலவர்களில் இவர் ஒரு புலவர்; அதிலும் குருட்டுப் புலவர் என்று எண்ணிப் பேசாதிருந்துவிட்டனர். மாம்பழக் கவிராயரோ பொறுமையை இழந்து வெகுளியை மேற்கொண்டுவிடவில்லை. பொறுமை கடலினும் பெரிதன்றோ? அரசர்களின் மனம் மாறுதல் அடையும்வரை காத்திருப்பதென்று முடிவு செய்து அவ்வாறே காத்திருந்தார்.

எண்ணம் நிறைவேறுதல்

நாட்கள் பலசென்றன. ஒருநாள் பொன்னுச்சாமித் தேவர் தமது பட்டிமண்டபத்திலிருந்த வடமொழிப் புலவர்களையும் தென்மொழிப் புலவர்களையும் பார்த்து ஒரு வடமொழிப் பாவைக் கூறினார். "இது திருமகள் வணக்கப் பாட்டாகும். இதன் பொருளைத் தமிழில் வெண்பாவில் அமைத்துப் பாடுபவர்கட்குத் தகுந்த பரிசளிக்கப்படும்"

என்று கூறினர். அப்பாடலையுங் கொடுத்தார். அவர்களுள் ஒருவர், அரசரைக் காணும்பொருட்டு நெடுநாளாகக் காத்துக்கொண்டிருக்கும் மாம்பழக்கவிராயரிடம் வந்தார். நிகழ்ந்ததைக் கூறினர். அவ்வடமொழிச் செய்யுட் பொருளை அமைத்து ஒரு வெண்பாச் செய்துதரவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அவர் விரும்பியவாறே வெண்பாவை முடித்துக்கொடுத்தார் மாம்பழக்கவிராயர். அச் செய்யுள் :

"அம்புயமென் றூதுசகி யாதுனது தாள்சகிமார்
அம்புநிகர் பார்வைசகி யாதுமெய்யவ்—வம்புயங்கை
தாங்கலமெய் மால்வலுரஞ் சார்தலரி தென்னிலென்வாய்
வீங்குரையாற் றுங்கொல்திரு வே."

என்பது இப்பாட்டின் பொருள் : "திருமகளே! நினது திருவடி அழகிய தாமரை மலரின் மகரந்தப்பொடி பட்டாலும் ஆற்றாது; நின் தோழியர்களின் கணைக்கு நிகரான பார்வைகளை நின் உடல் தாங்காது. அத்தாமரையைக் கையாகத் தாங்கியிருத்தலால் அவ்வுடல் திருமாலின் வன்மையான மார்பைச் சார்ந்திருத்தல் அருமையாகுமானல் என்மொழியிலே நிறைந்துவருஞ் சொற்களை நின்னுடல் பொறுக்குமோ?" என்பதாம்.

பாவின் அருமை பெருமையைப் பொன்னுச்சாமித்தேவர் நன்குணர்ந்தார். தக்கார் சிலரையனுப்பி மாம்பழக்கவிராயரைத் தம்பால் அழைத்துவரச் செய்தார். மாம்பழக்கவிராயர் நினைந்தது முடிந்ததென்று மகிழ்ந்தார். கையேட்டினருடன் அரச அவையை அடைந்தார். பொன்னுச்சாமித்தேவர் மாம்பழக்கவிராயரை வரவேற்றுப் போற்றினர். பொன்னுச்சாமித்தேவருடன் அவருடன் பிறந்தாராகிய முத்துராமலிங்க சேதுபதியும் அமர்ந்திருத்தலை உணர்ந்தார். முதலில் அரசவாழ்த்தாக;

"புகழான்ற நகமீன்ற பொன்னின்முலைக்
கன்னியொரு புறந்த ழீஇப்பல்
அகிலாண்ட முதலாண்ட அருள்மோன
சிவஞான அமலன் காக்க
பகர்பூங்காத் தொறும்பூவை பதங்கோலவச்
செழும்பாவைப் படிக்குந் தேவை
நகரேந்த்ர சுகமுத்து ராமலிங்க
பூபவனை நாளுந் தானே."

என்னுஞ் செய்யுளைப் பாடினர்.

(அ - ள்.) ஆன்ற - நிறைந்த. நகம் - மலை. அமலன் - சிவ பெருமான். பூவை - நாகணவாய்ப்புள். தேவை நகர் - இராம நாதபுரம்.

பிறகு பொன்னுச்சாமித் தேவர்மீது,

"மங்கரிய பங்கவிடர் வெங்கடலின் முங்கலுறு
வார்மீ ளற்குன்,
பொங்கவக ளங்கசமு கங்கருணை வங்கமது
போலு மாலோ,
கொங்கர்சக ரங்கர்க லிங்கர்பல ருங்கரமுன்
கூப்பக் கீர்த்தி,
தங்கவளர் துங்கசய சிங்கமெனும் எங்கள்பொன்னுச்
சாமி மாலே."

என்னும் செய்யுளைப் பாடினர்.

(அ - ள்.) மங்கரிய - தோற்றுதல் ஒழியாத. பங்கவிடர் - குற்றமுள்ள துன்பம். முங்கல் - மூழ்குதல். அகளங்கன் - களங்க மில்லாதவன். கருணைவங்கம் - அருள்தோணி.

மாம்பழக்கவிராயரின் பாடல்களைக்கேட்டுப் பொன்னுச்சாமித்தேவரும் முத்துராமலிங்கசேதுபதியும் மிகுந்த களிப்படைந்தனர். தகுந்தவாறு நன்கொடையும் வழங்கினர்.

கவிராயரும் புவிராயரும்

மாம்பழக்கவிராயர் பன்னாள் அரசவைக்குச்சென்று பொன்னுச்சாமித்தேவரையும் மன்னரையும் மகிழ்வித்து வந்தனர். மாம்பழக்கவிராயரின் மாபெரும் புலமையை நன்குணர்ந்த தேவர், அதனை எல்லோருக்கும் வெளிப்படுத்த எண்ணினார். ஒருநாள் உரையாடிக்கொண்டிருக்கும்போது 'கிரியிற் கிரியுருகுங் கேட்டு' என்பதனை ஈற்றடியாகக் கொண்டு ஒரு வெண்பாப் பாடவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். உடனே மாம்பழக் கவிராயர்,

"மாலாம்பொன் னுச்சாமி மன்னர்பிரான் தன்னாட்டில்
சேலாங்கண் மங்கையர்வா சிக்குநல்யாழ்—நீலாம்
பரியிற் பெரியகொடும் பாலைகுளி ரும்ஆ
கிரியிற் கிரியுருகுங் கேட்டு."

என்று பாடி முடித்தனர்.

(அ - ள்.) மால் - திருமால். சேலாங்கண் - கயல்மீனைப் போன்ற விழி. கொடும் பாலை - கொடிய பாலையை. நீலாம்பரி, ஆகிரி என்பன இராகங்கள்.

ஒருநாள் முத்துராமலிங்க சேதுபதியவர்கள் மாம்பழக் கவிராயரை நோக்கி, 'மஞ்ஞைமிடற் றுட்புகுந்த முள்ளெயிற்று வல்லரவ மகிழுந் தானே' என்னும் ஈற்றடியைக் கொடுத்து மற்றைய மூன்று அடிகளையும் முடிக்குமாறு கேட்டனர். அப்பொழுதே கவிராயர்,

"அஞ்ஞைகளைத் தினந்தினங்கொண் டாடிநனி
பாடிமிடி யதனாற் பல்லை
ஞஞ்ஞையெனத் திறக்காதெற் புரக்குமுத்து
ராமலிங்க நரேந்த்ரா கேண்மோ
கஞ்ஞையுறு சிறியர்பெரி யோரையும்வெல்
லுவர்விதியார் கடப்ப ரோர்கால்
மஞ்ஞைமிடற் றுட்புகுந்த முள்ளெயிற்று
வல்லரவம் மகிழுந் தானே."

என்று பாடி முடித்தனர்.

(அ - ள்.) அஞ்ஞைகள் - அறிவிலாதார். நனி பாடி - மிகுதி யாகப் பாடி. மிடி - வறுமை. ஞஞ்ஞை - இகழ்ச்சிக்குறிப்பு கஞ்ஞை - எளிமை.

மேலும் அவர், "குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே" என்னும் கட்டளைக்கலித்துறை அடியை முடிக்க வேண்டினர். கவிராயர் உடனே,

"கடத்தைப் பழித்துக் களபந் திமிர்ந்து கதிர்த்தரள
வடத்தைத் தரித்துச் சுணங்கு படர்ந்தொளிர் வள்ளிதன
தடத்தைத் தடவுந் தனது மலர்க்கைத் தலத்தினிற்குக்
குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே."

என்று முடித்தனர்.

(அ - ள்.) கடத்தைப் பழித்து - குடத்தை எள்ளி நகையாடி கதிர்த் தரள வடம் - ஒளிதங்கிய முத்துமாலை. குக்குடத்தைப் பிடித் தவன் - கோழிக்கொடியை ஏந்தியவன். சட்டியை நோக்க - சஷ்டி விரதத்தைக் கடைப்பிடிக்க.

ஒருநாள் பொன்னுச்சாமித்தேவர் அவர்கள் கவிராய ரைப் பார்த்து, அருணகிரிநாதர் திருப்புகழில் முதலாவது பாடலாகிய 'முத்தைத்தரு' என்பதில், முத்தைத்தரு என் பது முதல் ஓது என்பதுவரை முடிகிற பகுதிகள் வெண்பா வாக அமையுமாறு பாடவேண்டும் என்றார். கவிராயர் தேவர் அவர்களைப் பார்த்து, "வரமுதவிக் காக்கு மனமே வெண்சோதி பரவிய" என்னுஞ் சொற்றொடரை முதலிற் சேர்த்துக்கொள்ளுங்கள்; அது வெண்பாவாக அமைந் திருக்கும் என்றார். அவ்வாறு பார்த்தபோது,

வரமுதவிக் காக்கு மனமேவெண் சோதி
பரவியமுத் தைத்தரு பத்தித்—திருநகையத்
திக்கிறை சத்திச் சரவணமுத் திக்கொருவித்
துக்குருப ரன்னெனவோ து.

என்று நேரிசை வெண்பாவாக அமைந்துநின்றது. பின் னர்த் தேவர் அவர்கள் நான்கு இடங்களில் காசி என்னுஞ்

சொல் வருமாறு பாடவேண்டும் என்றார். உடனே கவி ராயர்,

நான்கு காசி

1. "இக்கா சினிப்பா லிலங்கா சினித்தேவர்
தொக்காசி கூறித் தொழக்கருணை—மிக்காளும்
கந்தா முருகா சிகாவளத்தின் மீதேறி
வந்தா தரித்தருளு வாய்."

என்று பாடினார். தேவர் மேலும் ஆறு காசி, பத்துக் காசி, பதினைந்து காசி வருமாறு பாடச்சொன்னபோதும்,

ஆறு காசி

2. "துங்கா சிவந்த சுமுகாசி லோதிவள்ளி
பங்காசி இக்குதிரைப் பாகாசித்—தங்காசின்
இச்சைதனி லேங்கா தெனையாள்கு காசிறந்த
செச்சைவடி வேலா தினம்."

பத்துக் காசி

3. "வாகாசி ராகாசி வாகாசி ஞகாசித்
தாகாசி யோகாசி தாகாசி—யேய்காசி
வண்குழலி பாகாசி வந்தவுத்துங் காசிறிது
தண்கருணை கூர்சந்த தம்."

பதினைந்து காசி

4. "காசினிபுக் காசிவருங் காசிவணிக் காசிறியேற்
காசிதடே காசினநா காசிவைபா—காசிலைபோல்
காசிவண்வா காசிவதுங் காசிவமோங் காசிவழாக்
காசிவர்தாழ் காசிவளா கா."

என்று பாடி மகிழ்வித்தார்.

1. (அ - ள்.) காசினி - பூமி. ஆசினித்தேவர் - விண்ணி லுள்ள தேவர்கள். சிகாவளம் - மயில்.

2. துங்கன்-தூய்மையானவன். சிலோதி-வட்டமாகக் கட்டப் பெற்ற கூந்தல். செச்சை - ஆடு.

3. தோளில் தலைமாலை அணிந்தவனே! குற்றமற்ற மணியை உடைய பாம்புகளை அணியாகப் பூண்டவனே! சித்து ஆகாத சிவ யோகியே! சிதாகாய வெளியே! பொற்பணிகள் அமைந்த தலையலங்காரம் பொருந்திய கூந்தலையுடைய உமாதேவியாரை ஒரு பாகத்தில் வைத்தவனே! மென்மையான செம்மேனியனே! உனது குளிர்ந்த அருணோக்கம் எப்பொழுதும் என்பாலிருக்க அருள்புரிவாயாக. நான்கு நிலவுலகில் மனிதனாகப் பிறந்து செய்யும் பிழைகளினால் தீமையே நிறைந்துள்ள சிறியேனுக்கு அருள்சுரந்து ஆதரிக்கத் தோன்றிய அருட்குருவே! சினம் மிகுந்த பாம்பினை அணியாகக் கொண்டவனே! உமாதேவியைப் பாகத்தில் உடையவனே! காத்தலையுடைய மலைபோன்ற தோளையுடையவனே! சிவபெருமானே! பெருமை வாய்ந்தவனே! சிவனடிவத்தோடு கொல்லும் வாழ்த்துறையிற் பழுதுபடாத க[illegible]முனிவர் தாழ்ந்து வணங்கும் காசிப் பதியோனே!

**கவிச்சிங்கம்**

மாம்பழக்கவிராயரின் அறிவாற்றல் பொன்னுச்சாமித்தேவர் அவர்கட்கும், சேதுபதியவர்கட்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. பொன்னுச்சாமித்தேவர் தமது இருக்கையை விட்டெழுந்து கவிராயருடைய வலது கையைத் தமது வலது கையினாற் பிடித்து நன்கு குலுக்கினார். "புலவர் பெரும! நும் அறிவாற்றல் புகலுதற்கரியது. நும்மைப்போல் விரைவாகவும் வியக்கத்தக்கபடியும் செய்யுள் செய்தல் எவராலும் இயல்வதன்று. தாங்கள் கலைமகள் இருக்கையாகவும், முருகன் அருட்கொடை பெற்றவராகவும் அமைந்துள்ளீர்கள். இப்பேரவையின்கண்ணே தங்கட்குக், "கவிச்சிங்கம்" என்னும் விருதுப்பெயரை உள்ளக் களிப்புடன் கொடுக்கின்றோம். இப்பெயர் என்றும் நின்று நன்றாய் விளங்குவதாக!" என்று கூறினார்.

கவிச்சிங்கம் என்னும் பெயரும் கைகுலுக்குதலும் பெற்ற கவிராயர் தமது நன்றியறிவுடைமையை,

"அவனிபுகழ் உனதுதிரு வடிமலரின்
எழுதுகளால் அன்று நீங்காப்
பவமதகன் ஒருகரிய பாறையும்பெண்
ணுகுமெனிற் பாராவாரம்
துவளவமு தெடுத்தினிய சுரர்க்கருள்நின்
திருக்கரத்தால் தொடப்பெற் றேற்குக்
கவலையினி உளதாமோ காமர்பொன்னுச்
சாமியெனுங் கருணை மாலே."

(அ - ள்.) அவனி - நிலம். துகள் - புழுதி. பவம் - பிறப்பு. கரிய பாறை - கருங்கல். பாராவாரம் - கடல். துவள - அசைய. அரசர்கள் திருமாலின் கூறெனக் கொள்ளுதல் மரபாதலின் இவ்வாறு கூறினர்.

"கங்கங்குலவு கதிர்வேலான் கனகமேரு கருணைமுகில்
பொங்கம்பெறுதென் புதுவைவளர் பொன்னுச்சாமி பூபனெனக்(கு)
எங்குந் திறல்கூர் கவிச்சிங்கம் எனுமோர்பெயரிட் டெழில்வளமை
தங்கும் புகழ்மே லாங்கலையும் தந்தையெனையா தரித்தனனே."

என்னுஞ் செய்யுட்களால் வெளிப்படுத்தினர்.

பரிசு வழங்கல்

பின்னர்ப் பொன்னுச்சாமித்தேவர் பொன் முடிப்பு பொற்சரிகைப் பீதாம்பரம் முதலிய அரும் பரிசுகளைக் கொண்டுவரச்செய்தார். விலை மிகுந்ததும் மணம் மிக்கதுமான கலவைச் சந்தனத்தைப் பணியாளரைக்கொண்டு நன்கு பூசச்செய்தார். "சந்தனம் என்னும் சொல் ஏழிடங்களில் வருமாறு ஓர் இனிய செய்யுள் உரையுங்கள்" என்றார். கவிச்சிங்க நாவலரும் அவ்வாறே,

கட்டளைக் கலிப்பா

"கந்தச் சந்தன மெய்யிற் பொருக்கெழக்
கனவ சந்தனம் பாலுன் றன் மோகமே
முந்தச் சந்தன மேவிச்செந் தேனும
முதுங்க சந்தன வென்றே மயங்கினள்

இந்தச் சந்தன குந்தர ளம்புனேந்
தெழுகச் சந்தன மின்னிவட் குச்சுகம்
தந்தச் சந்தன தெவ்வமுந் தீர்த்திடத்
தயவு கூர்பொன்னுச் சாமி நரேந்த்ரனே."

என்னும் செய்யுளைப் பாடினர்.

(அ - ள்.) கந்தம் - மணம். வசந்தன் அம்பால் - மன்மதன் அம்புகளால். சந்து-தூது. அனம் ஏவி - அன்னத்தை அனுப்பி. அமுதங் கசந்தன.. அச்சம் தனது எவ்வம்.

தேவர், பாட்டின் அருமை பெருமையைப் பெரிதும் போற்றிப் பரிசுகளைத் தம்முடைய கையினாலேயே எடுத்துக்கொடுத்தார். பரிசுகளைப்பெற்ற நாவலர் தேவர்மீது மேலும் பல பாடல்களைப் பாடினர். அப்பாடல்கள் அருமையும் பெருமையும் அமையப்பெற்றவை. அவற்றுள் ஒரு சிலவற்றைமட்டும் ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

### கலைமடந்தை

"வரமுயர்தென் புதுவைபுரி தவத்தின் சீரால்
வந்தபொன்னுச் சாமிமன்ன வளருன் கல்வித்,
தரமுணர்ந்து வியந்துதமிழ் மடந்தை தானும்
தன்மெய் வெண்மை யாகிவெறி தவழும் வண்டர்,
பரவுமலர் இடைக்குடிபுக் கிருந்து மேலாம்
பயனிலமா யினமினியப் பயன்கொள் வாமிந்
நரபதிபா னமையிவரே பெற்ற தாதா
நாமகளே யாமெனநின் றுவுற் றுளே."

(அ - ள்.) வெறிதவழும் - மணம் பொருந்திய. வண்டர் - வண்டுகள். பரவுமலர் - மொய்க்கும் பூ. தாதா - கொடையாளன்

### முருகனும் குறுமுனியும்

"தடசயில புயபொன்னுச் சாமிமன்ன
நினதுகல்வித் தரத்தால் நாணி,
அடலுடைய குகனுமறு முகங்காட்டி
யையனென அமர்ந்தா னன்றிக்,

குடமுனிவ னுந்தமிழி லாங்குவடு
மேவியின்னங் குறுகு வானேல்,
புடவிதனி லெவருளர்நற் புகழ்வளரும்
உனக்குநிகர் புகலற் கம்மா."

(அ - ள்.) தடசயிலப்புயம் - பெரிய மலைபோன்ற தோள். அடல் - பொருதல். குடமுனிவன் - அகத்தியன். குவடு - மலையுச்சி. புடவி - உலகம்.

திங்கள்

"தலைமைபெறு நிருபர்சிகா மணியாய்ச் சான்றோர்
தமக்கணியா யுதித்தபொன்னுச் சாமி என்னும்
கலைநிதியே கலாநிதிநின் முகம்போ லென்பர்
கவிஞர்சில ரதுநிதமிக் கவின்கொள் வாமென்,
தலையினிடைப் பணிந்துபடிந் தெழுந்து மாசோ
டாமைகண்டு வெள்கிமெலிந் தறவுங் கூனி,
மலையுமல தனதுமுகம் போன்று வெய்ய
வனுக்குமருக் கலியிருளை மாற்றி டாதே."

(அ - ள்.) நிருபர் - அரசர். கலைநிதி - கல்விப்பொருள். கலாநிதி - திங்கள். கவின் - அழகு.

அரசவைப் புலவராதல்

மாம்பழக்கவிராயரின் செய்யுட்கள் இனிமையும் புதுமையும் அமைந் தின்புண்டாக்குதலை நன்கு நுகர்ந்த பொன்னுச்சாமித் தேவர் மாம்பழப் புலவரின் செய்யுள் நலத்தை எந்நாளும் கேட்டு இன்புற விரும்பினர். அவரைத் தம் அவைப்புலவராக அமர்ந்திருக்குமாறு வேண்டிக்கொண்டார். கவிராயர், தேவரின் விருப்பத்திற் கிணங்கி அவைப்புலவராக அமர்ந்திருந்தார்.

விசுவநாதபாரதி

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சேதுபதியின் வாயிற் புலவராக அமர்ந்திருக்கும் நாளில் விசுவநாத பாரதியார் என்னும் ஓர் அறிஞர் பொன்னுச்சாமித் தேவர்மீது புகழ்

நூல் ஒன்று பாடிக்கொண்டு வந்தார். தேவர் விருப்பத்தின்படி அவர் குறிப்பிட்ட ஒரு நாளிலே தமது நூலே அரங்கேற்றஞ்செய்யத் தொடங்கினர். அவை கூட்டப்பெற்றது. அவைக்கு வந்த பாரதியார் அவையைச் சுற்றுமுற்றும் பார்த்தார். கவிச்சிங்கம் அமர்ந்திருப்பதைக் கண்டார். உண்மையில் சிங்கத்தைக் கண்டாற்போன்ற அச்சம் அவருக்கு உண்டாயிற்று. இந்தச் சிங்கம் இங்கிருப்பின் நம்முடையபாக்கள்மேன்மையடையமாட்டாது. எவ்வாறேனும் இவரை வெளியேற்றிவிட்டால் நாம் நமது விருப்பம்போல் ஆட்டம் போடலாம் என்று திட்டம் போட்டார். மெதுவாகப் பொன்னுச்சாமித் தேவரிடஞ் சென்றார். தேவரைப் பார்த்து, "அவைக்களம் மங்களகரமாக இருந்தால் நன்றாக இருக்கும்" என்றார். பொன்னுச்சாமித் தேவர் அவையை நன்றாகப் பார்த்தார். விசுவநாத பாரதியின் உள்ளக்கிடக்கை தேவருக்கு விளங்கவில்லை. "அவை மங்களகரமாகத்தானே இருக்கிறது" என்றார். அதற்குமேல் வெளிப்படையாகச் சொல்லுதற்கு விசுவநாதபாரதிக்குத் துணிவு பிறக்கவில்லை. மிரள மிரள விழித்தார். நூல் அரங்கேற்றத்தைத் தொடங்கினர். கவிச்சிங்க நாவலர் விசுவநாத பாரதியின் போக்கையும் தம்மைக்குறித்து அவர் மொழிந்ததையும் உணர்ந்து கொண்டார். விசுவநாத பாரதியின் இறுமாப்பையும் ஆணவத்தையும் அடக்கவேண்டும் என்று அவர் முடிவுசெய்து கொண்டார்.

நாவலர் தடை

விசுவநாத பாரதியார் தாம் பொன்னுச்சாமித்தேவர் மீது இயற்றிவந்த நூலே அரங்கேற்றஞ்செய்யத் தொடங்கியதும் முதலில் மூலத்தைமட்டும் நூறு பாடல்களேயும் படித்து முடித்தார். பிறகு பாடல்கட்குப் பொருள்

விரிக்கத் தொடங்கினர். அவ்வளவில் மாம்பழக்கவிச் சிங்க நாவலர் எழுந்தார். அவையோர்களையும் அரசர்களை யும் நோக்கினர். "நாம் இந்த நூலைச் சில ஆண்டுகட்கு முன்பு பாடினேம். ஒரு செல்வரிடம் அரங்கேற்றஞ் செய்து தகுந்த நன்கொடையும் பெற்றேம். இப்பொழுது விசுவநாதபாரதி அந்த நூலை எப்படியோ பெற்றுத் தேவர் அவர்களுடைய பெயரைச் செருகி இங்கே கொண்டு வந்திருக்கிறார். இவ்வாறு கள்ளத்தனம் செய்வது மிகவும் இழிவுடைமையாகும். இதனை அரசர் அவர்கள் நன்கு உசாவி விசுவநாதபாரதியை நன்கு ஒறுத்தல்வேண்டும்" என்று கூறினர். நாவலர் நவின்றவைகளைக் கேட்டுப் பாரதியாரும் அவையினரும் திடுக்குற்றனர். பொன்னுச் சாமித்தேவர் விசுவநாதபாரதியின் முகத்தைப் பார்த் தார். "நாவலர் கூறுவது உண்மைதானா?" என்று கேட்டார்.

விசுவநாதபாரதி ஆடு திருடிய கள்ளனைப்போல் விழித்தார். பொறுமை யிழந்தார். உள்ளங் கொதித்தார். நாவலரைப் பார்த்து, "ஓ நாவலரே! நீவிர் கூறுவது உண்மைதானா? உள்ளதை ஒளியாமல் உரையும். இந் நூலை நீவிர் இயற்றி வேறொருவரிடம் பரிசுபெற்றது உண்மையாயின் இதிலுள்ள சில செய்யுட்களை இவ் வவைக் கண் இயம்புவீரா? அவ்வாறு இயம்புவீராயின் நீவிர் இயற்றியதாக நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்," என்று கூறினர்.

நாவலர் சிறிதுந் தயங்கவில்லை. "சில செய்யுட்கள் என்ன நூல் முழுவதையுமே முதலில் இருந்து முடிவு வரையில் கூறுவேன்" என்று மிகுந்த இறுமாப்புடன் கூறினர். விசுவநாதபாரதி நாவலர் கூற்றை நம்பவில்லை.

நாம் பலநாள் தொல்லைப்பட்டு இயற்றிய இந்த நூலை இவர் எவ்வாறு முழுவதுங் கூறுவார். இது நம்மை மிரட்டுவ தற்காகப் பேசும் பேச்சாகும் என்று எண்ணினர். நாவலரைப் பார்த்து, "எங்கே பாடும் பார்க்கலாம், வாயினல் ஆரவாரமாகப் பேசினல் எல்லோரும் ஏமாந்துபோவார்கள் என்று நினைக்கிறீர்போலும்" என்று கூறினர். அவ்வளவில் நாவலர் அவையோர்கள் வியப்படையவும், விசுவநாதபாரதி திகைப்புடன் அச்சத்தை அடையவும், பொன்னுச்சாமித்தேவர் ஈதொரு புதுமையென்று களிப்படையவும், விசுவநாத பாரதி முன் பாடியபடியே ஒரு சிறிதும் பிழையாமல் நூறு பாடல்களையும் பாடி முடித்ததுடன், அரங்கேற்றிய காலம் இடம் ஆகியவைகளை அமைத்து மேற்கொண்டும் இரண்டொரு பாடல்கள் பாடினர். இச்செய்யுள் இத்தனவது செய்யுள் இதன் பொருள் இன்னது என்பனபோன்ற பிறசெய்திகளையுங் கூறினர்.

விசுவநாதபாரதி மருண்டு ஊமையைப்போல யாதும் பேச நாவெழாமல் வாயடங்கியிருந்தார். அரசரும் அவையோரும் பெரிய வியப்புக் கடலுள் அழுந்தினர். பொன்னுச்சாமித்தேவர் நுண்ணுணர்வு மிக்காராதலின் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது இதன் உண்மையைக் கவிச்சிங்கத்தின் மூலமாகவே உணர்தல்வேண்டும். பாவாணர்கள் பொறாமையினல் இவ்வாறு எதுவுஞ் செய்வார்கள் என்று உள்ளத்தில் எண்ணினர். பிறகு கவிச்சிங்கத்திற்குப் பாரதியார் ஏதோ தீமை செய்திருக்கிறர் என்றும் முடிவு கட்டினர். ஆகவே தேவர் நாவலரைப்பார்த்து, "பேரறிவு படைத்த பெரும்புலவீர்! இங்கு நிகழ்வதைப்பார்த்தால் ஓர் இனிமையான இந்திரசால நாடகம்போல் இருக்கிறது. இதன் உண்மையை அவையினரும் நானும் அறிந்துகொள்ள

விரும்புகிறேம். தாங்கள் திருவுளத்தில் அருள் சுரந்து இதன் உண்மையை எமக்கு விளக்கியருள வேண்டும்" என்று பணிவுடன் வேண்டிக்கொண்டார். பொன்னுச் சாமித் தேவரின் பொன்னுரை கவிச்சிங்க நாவலருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. அவர் மெய்ம்மையை விரிக்கலானர்.

"புலவர்களைப் புரக்கும் பெரியீர்! தங்கள்மீது அமைந்துள்ள இந்நூல் உண்மையில் விசுவநாத பாரதியால் இயற்றப்பட்டதுதான். இந்நூலை முன்னரே யாம் பாடியிருப்பதாகவும், பரிசுபெற்றிருப்பதாகவும் தங்களையும் அவையினரையும் நம்புமாறு செய்தற்குக் காரணம் ஒன்று உள்ளது. அஃதியாதென்பீர்களாயின் கூறக்கேண்மின். இவ்விசுவநாத பாரதியார் தொடக்கத்தில் அவை மங்களகரமாக இருக்கவேண்டுமென்று தங்களிடம் கூறினர் அல்லரோ? அவ்வாறு கூறக்காரணம் யாதெனத் தாங்கள் ஆராய்ந்தீர்களா? நாம் இங்கிருப்பதைக் குறித்தே பாரதியார் அவ்வாறு கூறினர். நாம் இங்கிருப்பதைத் தாங்களும் அவையினரும் அமங்களகரம் என்று எண்ணாமல் இருக்கும்போது பாரதியார்மட்டும் எண்ணக் காரணம் யாது? அறியாமையா? ஆணவமா? அல்லது எம்பால் உள்ள அச்சமா? ஒருவரைக் குறித்துப் பலர் முன்னிலையில் இகழ்ந்துரைப்பது நேர்மையாகுமா? பாரதியாரின் இச்சிறுசெயலைக் கண்டித்து அவர்க்கு அறிவுச்சுடர் கொளுத்தும்பொருட்டே நாம் இவ்வாறு செய்தேம். இவ்வாறு செய்யாதிருப்பின் இத்தகையோர்க்கு நல்லறிவு உண்டாகுமா? மேலும் நாம் ஒருமுறை கேட்டதைக் கேட்டவாறே ஒப்புவிக்கும் நினைவாற்றலையும் பெற்றுளேம் என்பதை இவ் அவையினருக்கு அறிவிக்கவும் விரும்பினேம். ஒருமுறை கேட்டதை முறைதவறாது திரும்பக் கூறுவோர் ஏகசந்தக்

கிராகி என்று அழைக்கப்பெறுவர். முருகன் திருவருளால் இத்தன்மை எமக்கும் அமைந்துள்ளது" என்று கூறினர். நாவலர் கூறியதைக்கேட்டு அவையினர் மகிழ்ந்தனர். பாரதியாரும் கவலை நீங்கினர். பிறகு விசுவநாதபாரதி பாடிய நூலுக்குக் கவிச்சிங்கம் பொருளுரைக்க அரங்கேற்றம் இனிது முற்றுப்பெற்றது. பொன்னுச்சாமித் தேவர் பாரதிக்கும் நாவலருக்கும் நன்கொடை வழங்கி மகிழ்வித்தார்.

படிபடி

மாம்பழக் கவிச்சிங்கத்திற்கு நாள்தோறும் அமுதுபடி அரண்மனையில் இருந்து வந்துகொண்டிருந்தது. உக்கிராவண அதிகாரி சரிவர அனுப்பாமல் பொருள்களைக் குறைவாகவும் காலங்கடந்தும் அனுப்பிக்கொண்டிருந்தான். இதனால் சமையலும் சாப்பாடும் ஒழுங்காக நடைபெற முடியாமல் இருந்தது. நாவலர் ஒருநாள் தேவரோடு உரையாடிக்கொண்டிருக்கையில் அமயம் அறிந்து,

வடிவுகொளும் அமுதனைய கலைகளுணர்ந்
 தடைகுநர்புன் மருளாங் கங்குல்
விடிதரநன் கருள்செயுநின் பெருந்தகைமை
 அறிந்திருந்தும் விருப்பால் இன்னம்
படிபடிஎன் றடிக்கடிஎப் படிமொழிவல்
 படிமகிழும் படிநாள் தோறும்
நெடியபுகழ் வளர்க்குமனு நீதபொன்னுச்
 சாமிமன்ன நிருப ரேறே.

என்னுஞ் செய்யுளைக் கூறினர்.

கலைகள் உணர்ந்து சிறந்துவிளங்கும் நின்னைப்பார்த்து இன்னும் நூல்களைப் படிபடி என்று அடிக்கடி எப்படிக் கூறுவேன் என்று ஒருபொருளும், அறிஞர் வறுமையைப் போக்கிக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் நின்னைப் பார்த்து

அமுதுபடி தா அமுதுபடி தா என்று அடிக்கடி எப்படிக் கேட்பேன் என்று மற்றொரு பொருளும் விளங்குகின்றது.

உண்மையை உணர்ந்த பொன்னுச்சாமித்தேவர் ஒழுங்காக உணவுப்பொருள்கள் அனுப்பிவைப்பதற்குக் கண்டிப்பான ஏற்பாடு செய்தார்.

### பாராச் சேவகன்

சித்திரைத்திங்கள் வெய்யில் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. தமது விடுதியிலிருந்து புறப்பட்ட கவிச்சிங்க நாவலர் வியர்வை வழியவும் விரைவாகவும் அரண்மனைக்குச் சென்றார். முதல் வாசலில் இருந்த பாராச்சேவகன் புதியவனாக இருந்தான். அவன் கவிச்சிங்கத்தை இன்னாரென்று உணர்ந்துகொள்ளவில்லை. புதிதாக வரும் ஒருவர் என்று எண்ணிக்கொண்டான். நாவலரைத் தடுத்து நிறுத்தினான்; அரசரைப் பார்ப்பதற்கு இதுசமயம் அல்ல என்று கூறி உள்ளே செல்லாதவாறு தடுத்தான். கவிச்சிங்கத்தை அறிந்திருந்த பாராச் சேவகர்கள் முதல் காவலன் செயலைக்கண்டு வருந்தினர். இச்செயலை அரசர் அறிந்தால் யாது நேரிடுமோ என்று அஞ்சினார்கள். தடுத்தவனை நாவலர் அடிகளில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுமாறு செய்தனர். நாவலர் உள்ளே சென்றார். வழக்கம்போல் உரையாடிக்கொண்டிருந்தார். காவலன் தம்மைத் தடுத்தசெயல் அவருடைய உள்ளத்தை வருத்திக்கொண்டேயிருந்தது. அவர் சமயம் பார்த்துத் தேவரை நோக்கி :

தருமகுண மிகுமுனது சமுகமுரு வறுமையெனச்
சலிக்கக் காய்ந்து,
வருமிரவி வெயிலதனுன் மயங்கியின்று நானிங்கு
வந்த போழ்தில்,

அருமைதவிர் பாராச்சே வகர்தமது பெயர்ப்பொருளை
    அறியக் காட்டி,
கருவமொடு தடுப்பதென்னே காமர்பொன்னுச் சாமியெனுங்
    கருணை மாலே.

பாட்டின் பொருளைக்கண்ட தேவர் வாயிற்காவலனை அழைத்துத் தண்டிக்கத் தொடங்கினர். அக் காவலன் முதலில் தடுத்தாலும் பிறகு வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டதைக் கூறி அவனைத் தண்டனையினின்றும் காப்பாற்றினர். அதுமுதல் அக்காவலன் கருத்துடன் நடந்து கொள்ளத் தொடங்கினன்.

உணவுவகை உரைத்தது

ஒருநாள் சாப்பாடு முடித்துக்கொண்டு நாவலர் சேது மன்னர் பேரவைக்குச் சென்றார். என்றுமில்லாத வழக்கமாகத் தேவர் நாவலரைப் பார்த்து, 'தங்கள் இருப்பிடத்தில் இன்று உணவுவகைகள் யாவை?' என்று கேட்டார். அவ்வளவில் நாவலர்,

முதிர்கொடிக்கொத் தவரைக்காய் கத்தரிக்காய்
    நண்பருப்பு மூலமா தஞ்சி,
மதிமிகவு மிளகுரச மாகிமத னெய்ததியால்
    வருந்து வாளோ,
கதிர்குலவு நினதுபுயக் காமருபூர் தாமமருள்
    கவிஞர் நாளும்,
துதிபுதுவைப் பதியதிப சுமுகபொன்னுச்
    சாமியெனுந் துரைச்சிங் கேறே.

என்னுஞ் செய்யுளைச் சிலேடைப்பொருள் அமைய இயம்பினர்.

பொடி நிகழ்ச்சி

கவிச்சிங்க நாவலர் மூக்குத்தூள் போடும் வழக்கம் உடையவர். ஒருநாள் பொன்னுச்சாமித் தேவர் முன்பு

சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார். பொடிப் போடும் எண்ணம் உண்டாயிற்று. பொடி டப்பியைத் தேடிப் பார்த்தார். அஃது அகப்படவில்லை. கவிராயர் மறந்திருந்த சமயம்பார்த்து அந்தப் பொடி டப்பியைப் பொன்னுச் சாமித்தேவர் எடுத்து மறைத்துவைத்திருந்தார். பாவாணர் தேடுதலைக்கண்டதும், "புலவீர்! எதையோ தேடுகின்றீர்கள்போல் இருக்கின்றதே; தேடுவது யாதோ?" என்று கேட்டார். நாவலர், 'அது தங்களிடத்தில் கூறத்தக்கதன்று; சிறிய செய்தி' என்று கூறினார். உடனே தேவர், 'அவ்வாறாயின் அது பொடிச்செய்தி போலும்' என்றார். இரு பொருள் தரும் இதனைக்கேட்ட நாவலர், 'ஆம்' என்று தலையை ஆட்டினார்.

"தாங்கள் இழந்த பொருளைத் திரும்பவும் பெற வேண்டுமானால், ஒரு வெண்பாவில் ஐந்து இடங்களில் பொடி என்னுஞ் சொல் விரவிவர, முருகக்கடவுள்மீது ஒரு வெண்பாப் பாடவேண்டும்," என்று கூறினார். அக்கணமே கவிராயர்,

கரும்பொடி மாவஞ்சவெறி கைப்பொடிசில் வெற்பர்
தருங்கொம் பொடிசைதெய்வத் தையல்—விரும்புபுய
வான்பொடியா நின்றகதிர் மானுமயி லோயெனையாள்
தேன்பொடியார் பூப்பதந்தந் தே.

என்னும் வெண்பாவைப் பாடினார்.

(அ - ள்.) கரும் பொடி மா - கரும்பை முறிக்கும் யானை. திகைப்பு ஒடி - திகைப்பை ஒடித்து. வெற்பர் தருங் கொம்பு - வள்ளி; இசை - பொருந்திய. தெய்வத் தையல் - தெய்வயானையம்மை. வான் பொடியாநின்ற - வானையுந் தூள்செய்யாநின்ற. கதிர் மானும் - கதிரவனை யொக்கும். அயில் - வேல். தேன் பொடி - மகரந்தப்பொடி.

இந்தச் செய்யுளைக் கேட்ட பொன்னுச்சாமித்தேவர் அழகிய பொடி டப்பி ஒன்றைப் பரிசளித்தார்.

நிரோட்டக வெண்பா

ஒருநாள் பொன்னுச்சாமித்தேவர் கவிச்சிங்கத்தைப் பார்த்து, 'கால் (ா) கொம்பு (ொ) விசிறி (ி) ஒற்று நகர ஞகரம் பகர மகரம் ஆகியவை நீங்கிய அநாசிக நிரோட்டக வெண்பா ஒன்று பத்து நிமிடத்திற்குள் சிவபரம்பொருள் மீது பாடவேண்டும் என்றார். அவ்வளவில் கவிச்சிங்கம்,

*அலக கசட தடர ளகட*
*கலக சயச கதட—சலத*
*தரள சரத தரத ததல*
*கரள சரள கள.*

என்னும் அநாசிக நீரோட்டக வெண்பாவைப் பாடினர்.

**பொருள்:** அலக - எல்லையுடையவாக, கசடது அடர் - குற்றங்களின் செறிவும், அளம் - உவர்த்தலும், கட - கடந்த, கல் அக - புலமை மிக்காரின் உள்ளத்தில் உறைகின்றவனே! சய - வெற்றியை உடையவனே! சக தட - உலகம் எல்லாம் இடம் உடையவனே! சலச - தாமரையில் எழுந்தருளியவனே! தரள - அசைவினை யுடைய. சர - சரபமாக வந்தவனே! தத - விரிந்த. ரத ததல - தேரை நிலையாகக் கொண்டவனே! கரள - விடத்தினை. சரள - நேர்மையாக. கள - கண்டத்தில் அணிந்தவனே!

இப் பாட்டினைக் கேட்ட தேவர் கவிச்சிங்க நாவலரைப் பெரிதும் பாராட்டினர்.

கவிச்சிங்கமும் கற்றுக்குட்டியும்

கவிச்சிங்க நாவலர் இராமநாதபுரத்தில் அரசவைப் புலவராக அமர்ந்துள்ளபோது, நாவலருடைய நண்பர் ஒருவர் இராமநாதபுரத்திற்கு வந்தார். எல்லோரும் செய்யுள் பாடிப் பரிசு பெறுகிறார்களே, அவ்வாறு நாமும் பாடிப் பரிசுபெறவேண்டும் என்று எண்ணினர். அவர் மிகுந்த கல்வியறிவுடையவரல்லர். சில நூல்களைக் கற்ற

சிற்றறிஞர். ஆகையால், மிகுந்த முயற்சியின்மீது ஒரு செய்யுளைச் செய்துமுடித்தார். கவிச்சிங்க நாவலரை அவருடைய விடுதியிற் பார்த்து அளவளாவிக்கொண்டிருந்தார். நாவலருடைய நண்பர் தமது நோக்கத்தை நாவலருக்குக் கூறினர். நாவலர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். 'நீகூடப் பாவாணனாகிவிட்டாயா? நீ பாடியுள்ள பாட்டைக் கூறு கேட்போம்' என்றார். உடனே அந்தக் கற்றுக்குட்டிப் புலவர்,

வீதிதொறு மாடஞ் சிறக்க விளங்குதென் புதுவை வாழும்
நாதியிலே எனவந் தார்க்கு நல்குபொன் னுச் சாமி வேந்தே!
சேதியொன்று செப்பக் கேளும் செகத்திற்பற் பலரைப் பாடி
பாதிவலி குன்றி னேற்குப் பரிசுதந் தருளு வாயே!

என்று பாடினர்.

பாடலைக் கேட்ட கவிச்சிங்க நாவலர் விழுந்து விழுந்து நகைத்தார். நாவலர் நகைப்பின் காரணம் கற்றுக்குட்டிப் புலவருக்கு விளங்கவில்லை. நமது பாடல் மிக அருமையாக அமைந்திருக்கிறதுபோலும். அதனால்தான் இவர் இவ்வாறு நகைக்கிறார் என்று கற்றுக்குட்டிப் புலவர் எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். நாவலர் தம் நண்பரைப் பார்த்து, "அன்ப! நின் பாடல் நன்றாக இருக்கின்றது. வீதிதொறும் மாடு அஞ்சு இறந்தால் அவ்வூர் எவ்வாறு விளங்கும்?" என்று கேட்டார். நண்பருக்கு நாவலர் நகைப்பின் காரணம் இப்பொழுதுதான் விளங்கிற்று. "எவ்வாறேனும் நானும் பரிசுபெறுமாறு செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். நாவலர், 'வீதிதொறு மாடகூடம்' என்று திருத்தினர். அந்நண்பரையும் சேதுவேந்தர் பேரவைக்கு அழைத்துச் சென்று பரிசு வாங்கிக் கொடுத்தார்.

**பழநிக்குத் திரும்புதல்**

கவிச்சிங்க நாவலருக்கு இராமநாதபுர இருப்பு ஒத்துக் கொள்ளவில்லை. பலவகை நோய்கள் உண்டாயின. உடம்பு முழுவதும் சிரங்குகள் புறப்பட்டன. ஆகவே, பொன்னுச் சாமித் தேவரிடமும் சேதுவேந்தரிடமும் செய்தியைக்கூறி அவர்களுடைய உடன்பாடு பெற்றுக்கொண்டு பழநிக்குத் திரும்பினர். இவர் சேதுநாட்டிலும் பிறவிடங்களிலும் அவ்வப்போது பாடிய கவிகள் பல. அவைகள் தனிப் பாடற்றிரட்டு, மாம்பழக் கவிச்சிங்க நாவலர் வரலாறு முத லிய நூல்களிற் சேர்க்கப்பெற்றுள்ளன. இவர் ஐம்ப தாண்டுகள் வரை உலகில் வாழ்ந்து பல பாடல்கள் பாடி யுள்ளார்.

**இவர் செய்த நூல்கள்**

க. விநாயகமூர்த்தி பதிகம், உ. பழநிப்பதிகம், ங. குமரகுரு பதிகம், ச. சிவகிரிப்பதிகம், ரு. திருச்செந்திற் பதிகம், சு. பழநி நான்மணிமாலை, எ. திருப்பழநி வெண்பா, அ. பழநி வெண்பாவந்தாதி, கூ. பழனுபுரிமாலை, க0. குமரனந்தாதி, கக. சிவகிரி யமகவந்தாதி, கஉ. பழநிக் கோயில் விண்ணப்பம், கங. தயாநிதிக்கண்ணி, கச. ஆநந்த கீத ரசம் முதலியன. கவிச்சிங்கமாகிய இவர், சிலேடை யமகம் முதலிய பாடல்களைப் பாடுவதில் மிக வல்லவர். இவருடைய நூல்களில் ஒன்பான் வகைச் சுவையும் நன் கமைந்து விளங்கும். இவருடைய நூல்களும் பாடல் களும் "மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிரபந்தத்திரட்டு" என்னும் பெயருடன் அச்சிட்டு வெளிப்படுத்தப்பெற் றுள்ளன.

## உ௫. தத்துவராய அடிகள்

### தோற்றம்

செந்தமிழ் நாட்டிலே வீரமாநகர் என்னும் ஊரிலே இற்றைக்குச் சற்றேறக்குறைய நானூறு யாண்டுகளுக்கு முன்னர் அந்தணாளர் குலத்திலே தத்துவராய அடிகள் தோன்றினார். இவருடைய தாய்மாமனாகிய சொரூபாநந்தர் என்பவரும் தத்துவராயரும் தக்க செந்தமிழறிஞர் களிடத்திலே கல்விகற்றுக் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். இவர்களுக்கு இடப்பெற்ற பிள்ளைப் பெயர்கள் யாவை என்பது தெரியவில்லை. மெய்யறிவு நூல்களைக் கற்றுத் துறவற நிலையை எய்திய பின்னரே இவர்களுக்குச் சொரூபாநந்தர் தத்துவராயர் என்னும் பெயர்கள் உண்டாயின.

### ஆசிரியரை அடைதல்

மெய்யறிவு நூல்களைக் கற்றுச் சிறப்புடன் விளங்கிய சொரூபாநந்தரும் தத்துவராயரும் தகுதிவாய்ந்த அறி வாசிரியரை அடைந்து அருளுரை பெறுதற்குப் பெரிதும் விழைந்து நின்றனர். நெடுங்காலமாகியும் அவர்களுடைய எண்ணம் நிறைவேறவில்லை. இருவரும் இல்லந் துறந்து சென்று அறிவாசிரியரைத் தேடுதல்வேண்டும் என்று முடிவு செய்தனர். முடிவுப்படியே புறப்பட்டுப் பல இடங் களினும் தேடித்திரிந்தனர். ஓராண்டுவரை ஊர் ஊராக அலைந்தும் தகுதிவாய்ந்த குருவை அடையவில்லை. மேலே யாது செய்யலாம் என்று கலந்து ஆராய்ந்தனர். இருவரும் ஒன்றாகவே சுற்றுவது பயனில்லையாதலின், தனித்தனியே பிரிந்து ஆளுக்கொரு திக்காகச்சென்று தேடுதல் வேண்டும் என்று முடிவு செய்தனர். முதலில் யார் குருவை அடைந்து அருளுரை பெறுகிறார்களோ அவர்கள் மற்றவர்களுக்கு

அறிவாசிரியராக ஆவது என்று ஓர் உறுதியுஞ் செய்து கொண்டார்கள். பிறகு, கானவன் வலையிற்பட்டுக் கைதப்பி யோடும் மான்போல் குருவைத் தேடித் திரிந்தார்கள். சொரூபாநந்தர் தெற்குத்திக்கிலே தேடித்திரிந்தார். பல இடங்களில் பல தினங்கள் வரையில் தேடினர். காடு, மலை, ஆற்றோரம் என்னும் இடங்களெல்லாம் தேடினர். பிறகு கோவத்தம் என்னும் பதியைக் குறுகினர்.

அப்பதியின் எல்லையைக் குறுகுதற்குமுன் சொரூபா நந்தருக்குப் பேரின்பம் உண்டாகியது. உடல் பூரித்து மயிர்கள் சிலிர்த்தன; கைகள் தாமாகவே குவிந்தன; கண்களில் இன்பக்கண்ணீர் பெருகியது. இந்த நற்குணங் களைச் சொரூபாநந்தர் கண்டார். நம்முடைய குருநாதன் எழுந்தருளியிருக்கும் பதி இதுவேயாகும் என்று உறுதி யாக எண்ணினர். அந்த ஊரை வலஞ்செய்து ஊருக் குள்ளே சென்றார். அந்த ஊரிலே பெரியோர்கள் யாரே னும் உள்ளார்களோ என்று உசாவினர். அவ்விடத்தில் உள்ளவர்கள் "இந்த ஊருக்குப் புறத்திலே நாணற்காடு ஒன்று இருக்கின்றது. அதற்குள்ளே பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய பெயர் சிவப்பிரகாச அடிகள். அவர் எப்பொழுதேனும் நாணற்காட்டை விட்டு வெளியே வருகின்றார். அவருடைய தோற்றம் கண்டவர்கட்கு இன்பத்தை உண்டாக்கும். நீர் அவரைப் போய்ப்பாரும்," என்று இயம்பினர்கள்.

சொரூபாநந்தர் நாணற்காட்டிற்குச் சென்றார். அங்கு சில நாட்கள் காத்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் அந்தச் சிவப்பிரகாச அடிகள் என்னும் பெரியார் நாணற்காட்டை விட்டு வெளியே வந்தார். சொரூபாநந்தர் சிவப்பிரகாச அடிகளின் அடிகளிலே விழுந்து வணங்கினர்.

"ஐயனே எனதுள்ளே நின்று அனந்தசென் மங்கள் ஆண்ட
மெய்யனே உபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கும் உதவிக்கோர் உதவி நாயேன்
செய்யுமா றொன்றுங் காணேன் திருவடி போற்றிபோற்றி."

என்று கூறிப் போற்றினர். அவ்வடிகளைப் பார்த்து, "நான் கணக்கற்ற உடல்களை எடுத்துப் பிறவிக்கடலிலே அலைந்து கொண்டு வருந்துகின்றேன். எனக்கு அருண்மொழி வழங்கி நாயேனை ஈடேற்றுதல்வேண்டும்" என்று கூறித் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அரற்றினர்.

## அருண்மொழிப் பேறு

சுத்த வைதீகசைவராகிய அந்தச் சிவப்பிரகாச அடிகள் சொரூபானந்தரின் உடற்குறிகளை உற்று நோக்கினர். நாம் இதுவரையில் எதிர்பார்த்திருந்த பக்குவி இவனே என்று கருதினர். சொரூபானந்தரைப்பார்த்து, "அப்பா உனக்காகத்தான் நான் இங்கே இதுவரையில் காத்துக் கொண்டிருந்தேன்" என்று கூறி அருண்மொழி வழங்கித் திருவருள்பாலித்துக் கடைக்கணோக்கமுஞ் செய்தருளினர். அவ்வளவில் சொரூபானந்தர் மெய்யறிவு கைவரப்பெற்றார். அவ்விடத்தில் தானே ஒருமைநிலையை அடைந்து மேலான தவநிலையில் அமர்ந்தார். அவர் வெகு விரையில் சிறந்த நிலையை எய்தினர்.

## தத்துவராயர் செய்தி

குருநாதனைத் தேடி வடக்குத் திக்கிற்சென்ற தத்துவராயர் திருவேங்கடமலைவரையிற் சென்று தேடினர். பயனில்லை; பிறகு திரும்பித் தென்னாட்டிற்கு வந்து தம் மாமனாகிய சொரூபானந்தரையே தேடிக் கண்டுபிடித்தார். சொரூபானந்தர் தமக்குக் குருநாதன் கிடைத்தவரலாற்றையும் அருண்மொழி பெற்றமையையும் கூறினர். அதனைக்

கேட்ட தத்துவராயர் மிகுந்த வியப்படைந்தார். முன் செய்துகொண்ட முடிவுப்படி சொரூபாநந்தரை வணங்கி அவரிடமே அருண்மொழிபெற்று மேலான தவநிலையை அடைந்து திகழ்ந்தார். ஆசிரியரும் மாணவரும் ஓரிடத்தில் தானே மேலான தவநிலையில் அமர்ந்திருந்தார்கள்.

தத்துவராயர் நூல்கள் இயற்றல்

தத்துவராயர் செய்யுள்செய்யும் பேராற்றலை மிகுதியாகப் பெற்றிருந்தமையைச் சொரூபாநந்தர் முன்னுளில் நன்கு அறிந்திருந்தார். அவரைக்கொண்டு உலகத்திற்குப் பயன்படுமாறு நூல்கள் சில இயற்றுவிக்கவேண்டுமென்று சொரூபாநந்த அடிகள் எண்ணினர். தம் கருத்தைத் தத்துவராயருக்குப் பல தடவைகளிற் குறிப்பாகப் புலப்படுத்தினர். தவநிலையில் ஈடுபட்டிருந்த தத்துவராயர் நூல் இயற்றுதலில் உள்ளத்தைச் செலுத்தவில்லை. இறுதியில் ஒருநாள் சொரூபாநந்த அடிகள் ஒரு சூழ்ச்சியைச் செய்தார். ஓர் அமாவாசை நாள் அன்று "எண்ணெய் தேய்த்து மூழ்கவேண்டும்; எண்ணெய் கொண்டுவாருங்கள்" என்று ஏவலாளர்கட்குக் கட்டளையிட்டார். அப்போது தத்துவராயர் அண்மையில் இருந்தார். தம் குருநாதன் அமாவாசை என்பதை மறந்துவிட்டார்போலும் என்று எண்ணினர். தாம் அதனைக் கூறத்தொடங்கி, "அம்" என்றவர், குருவுக்கு மாணவன் அறிவுரை கூறியதாக முடியுமோ என்று அவ்வளவில் நிறுத்திக்கொண்டார். தத்துவராயரின் செயலைக்கண்ட சொரூபாநந்தர் மிகுந்த சினங்கொண்டவர்போல் நடித்தார். விதிவிலக்கு முதலிய எல்லாவற்றையுங் கடந்து நிற்கும் நமக்கு நீ அறிவுரை கூறவந்தாயன்றோ? நீ நம் எதிரிலே இருக்கவேண்டா; குருவுக்கு மிஞ்சிய மாணவனாகிய நீ இவ்விடத்தை விட்டுப் போய்விடு" என்று கட்டளையிட்டார்.

ஆசிரியர் உரைகளைக் கேட்ட தத்துவராயர் உள்ளங் கலங்கினர். பரப்பிரமமாக விளங்கும் குருநாதனுக்கு விதிவிலக்குக் கற்பித்த குற்றவாளியாகிய நான் இந்த உடலோடிருத்தல் கூடாது. கடலில் விழுந்து உடலை அழித்தலே இதற்குக் கழுவாயாகும் என்று முடிவுசெய்தார். ஆசிரியர் கட்டளைப்படி அவ்விடத்தைவிட்டு அகன்று கடலை நோக்கிச் செல்லத் தொடங்கினர். ஆசிரியருக்கு முதுகு காட்டாமல் ஆசிரியரை நோக்கியவாறே பின்னிட்டபடி செல்லத் தொடங்கினர். ஆசிரியர்மீதும் பரமாசிரியர் மீதும் வேதாந்தக் கருத்துக்களை அமைத்துப் பல நூல்களைப் பாடிக்கொண்டே சென்றார். அப்பொழுது தத்துவ ராயரால்,

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவப்பிரகாச வெண்பா | 11. | நான்மணிமாலை |
| 2. | தத்துவாமிர்தம் | 12. | கலிப்பா |
| 3. | திருத்தாலாட்டு | 13. | ஞானவிநோதன் கலம்பகம் |
| 4. | பிள்ளைத்தமிழ் | 14. | உலா |
| 5. | வெண்பாவந்தாதி | 15. | சிலேடை உலா |
| 6. | கலித்துறையந்தாதி | 16. | நெஞ்சுவிடு தூது |
| 7. | சின்னப்பூ வெண்பா | 17. | கலி மடல் |
| 8. | தசாங்கம் | 18. | அஞ்ஞவதைப் பரணி |
| 9. | இரட்டைமணிமாலை | 19. | மோகவதைப் பரணி |
| 10. | மும்மணிக்கோவை | 20. | அமிர்தசார வெண்பா |

என்னும் இருபது நூல்கள் பாடப்பெற்றன. சொரூபானந்தர் தத்துவராயருடைய செயல்களையெல்லாம் உடனுக்குடன் அறிந்துவந்து சொல்லுமாறு மாணவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். அம்மாணவர்கள் தத்துவராயர் பாடிய நூல்களையெல்லாம் அப்பொழுதைக் கப்பொழுது எழுதிக்கொண்டுபோய்ச் சொரூபானந்தர் முன்னிலையிற் படித்தார்கள். அவைகளைக் கேட்ட சொரூபானந்தர் உள்ளத்துக்குள் மகிழ்ச்சியடைந்தாராயினும் அதனை வெளிக்

குக் காட்டாமல், "மயிருள்ளவன் வாரி முடிக்கிறதைப்போல வாயுள்ளவன் பாடியனுப்புகிருன்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

தத்துவராயர் பாடுதுறை என்னும் நூலையும் பாடிக் கொண்டு கடலை நெருங்கிவிட்டார். தத்துவராயர் கடலில் விழுந்திறப்பதற்குத் துணிந்து கடற்கரையை அடைந்து, கடலில் இறங்கிக் கழுத்தளவு தண்ணீரில் சென்றுவிட்டால், அவரைத் தடுத்துத் தம்மிடம் அழைத்துவருமாறு சொரூபானந்தர் முன்னரே ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி மாணவர்கள், "குருநாதன் தம்மை அழைத்துவருமாறு கட்டளையிட்டுள்ளது" என்று தெரியப்படுத்தினர்கள். அவ்வளவில் தத்துவராயர் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, "அருட்கடலாகிய அடிகள் பெருங்குற்றவாளியாகிய என்னையும் அழைத்துவருமாறு கட்டளையிட்டதோ" என்று கூறிப் பேரின்பம் அடைந்தார். திருவருட் கழன்மாலை, போற்றிமாலை, புகழ்ச்சிமாலை முதலியவைகளைப் பாடிக்கொண்டு குருநாதன் திருமுன்பை அடைந்து பணிந்தார். சொரூபானந்த அடிகள் தத்துவராயரைப் பார்த்து, "இரு" என்று கட்டளையிட்டார். தத்துவராயர் வழக்கம்போல் பணிவிடைசெய்துகொண்டு களிப்புடன் இருந்தார்.

சசிவன்னபோதம்

ஒருநாள் சொரூபானந்த அடிகள் தத்துவராயர் இயற்றிய நூல்களையெல்லாம் பார்வையிட்டார். நூல்களின் சொல்லமைதி பொருளமைதி முதலியன சொரூபானந்தருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. அவர் அதனை உள்ளடக்கிக்கொண்டு தத்துவராயரைப் பார்த்து, "இந்த நூல்கள் மிகுதியாகக் கற்றவர்கட்கே அன்றி மற்றவர்கட்

குப் பயன்படமாட்டா. நீ இவைகளையெல்லாம் உன் பொருட்டுச் செய்துகொண்டாயே அல்லாமல், உலகத்தார் பொருட்டாகச் செய்யவில்லை" என்று கூறினர். இந்தச் சமயத்தில் அட்டில் தொழிலாளர்கள்வந்து உணவுகோடற்குச் சொரூபாநந்த அடிகளை அழைத்தனர். சொரூபாநந்தர் எழுந்து சென்றார்.

தனியே இருந்த தத்துவராயர் ஆசிரியர் கூறிய உரைகளை எண்ணிப் பார்த்தார். ஆசிரியர் கூறிய உரை உண்மையானதுதான் என்று அவருக்குத் தெரிந்தது. சொரூபாநந்த அடிகள் நீராடல் முதலியவைகளைச் செய்து முடித்து உணவுகொண்டு மீண்டு வருவதற்குள் எல்லோருக்கும் பயன்படத்தக்க வகையில் சசிவன்னபோதம் என்னும் ஓர் அரிய நூலை மோகவதைப் பரணியின் ஒரு பிரிவாகச் செய்துமுடித்தார். ஆசிரியர் திருமுன்பு அந்நூலினை வைத்து வணங்கினர். தத்துவராயர் விரைந்து பாடிய அந்நூலின் தன்மையைப் பார்த்துச் சொரூபாநந்தர் மிகுந்த களிப்படைந்தார்.

### பிரமகீதை முதலிய நூல்கள்

பிறகு, தத்துவராயர், பிரமகீதை, ஈசுரகீதை முதலிய நூல்களைச் செய்தார். வேதாந்த நூல்கள் பலவற்றினின்றும் அரிய செய்யுட்களைத் திரட்டியும், தாமே புதிதாக இயற்றிச் சேர்த்தும் குறுந்திரட்டு என்னும் ஒரு நூலினையுஞ் செய்தார்.

### புலவர்கள் வருகை

தத்துவராயர் நூல்கள் பல இயற்றிக்கொண்டு தவநிலையில் அமைந்திருக்கும்போது புலவர்கள் பலர் வந்தனர். அவர்கள் தத்துவராயர் இயற்றிய நூல்களைப் படித்துப் பார்த்தனர். பிறகு தத்துவராயரைப் பார்த்து, "போர்

முகத்திலே ஆயிரங் களிற்றியானைகளைக் கொன்ற வீரனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பெறவேண்டிய பரணி என்னும் நூலை, வீரம் என்பதைக் கனவிலும் கேட்டறியாத, உம்முடைய ஆசிரியரின்மேல் நீர் எப்படிப் பாடினீர்?' என்று உசாவிச் சொற்போர் நிகழ்த்தினார்கள்.

தத்துவராயர் அந்தப் புலவர்களைப் பார்த்து, "நம்முடைய ஆசிரியராகிய அடிகள் மாணவர்களின் ஆணவமாகிய யானையைக் கொல்லுதலால் பாடினோம்" என்று கூறினார். அதற்கு அந்தப் புலவர்கள், "நீர் சொல்லும் ஆணவமாகிய யானை கண்ணுக்குத் தெரியாமையால் நீர் கூறுவது பொருந்தமாட்டாது. மேலும், ஒரு மாணவனுடைய ஆணவமாகிய யானையைக் கெடுத்தற்குப் பலநாட்கள் செல்லுமே! அவ்வாறாக, இவர் ஒரே சமயத்தில் ஆயிரம் மாணவர்களின் ஆணவ யானையைக் கெடுத்தது எப்படி?" என்று வினவினர்.

தத்துவராயர் அந்தப் புலவர்களோடு வீணாகச் சொற்போர் புரிவதில் பயனில்லை என்று முடிவுசெய்தார். நடைமுறையிற் காட்டவேண்டுமென்று துணிந்தார். அவர்களுக்கு யாதும் பதில் உரையாமல் தவநிலையில் அமர்ந்திருந்தார். சொரூபாநந்த அடிகளின் கடைக்கணோக்கம் பட்டமையால், வந்த புலவர்கள் அனைவருக்கும் இராப்பகல் ஒன்றும் தெரியாமல் போய்விட்டது. மூன்றுநாள் அளவு ஆடாமல் அசையாமல் நிர்விகர்ப்ப சமாதியில் அமர்ந்திருந்தார்கள். நான்காம் நாள் தத்துவராயர் தவநிலை கலைந்தார். புலவர்களும் கண்விழித்து இவ்வுலக நினைவு வரப்பெற்றார்கள். அவர்கள் சொரூபாநந்த அடிகளையும் தத்துவராய அடிகளையும் விழுந்து வணங்கினார்கள். "நாங்கள் அறிவற்றபடியினாலே சொற்போரிட்டோம்.

தங்களுடைய கடைக்கண் நோக்கத்தினுல் மெய்யறிவு கைவரப் பெற்ருேம். ஒரே சமயத்தில், தங்கள் கடைக் கண் நோக்கத்தினுல் பதினுயிரம் மாணவர்களுடைய ஆணவ யானைகளையும் அழித்தொழித்தல்கூடும். எங்கள் குற்றங்களைப் பொறுத்தருளுதல் வேண்டும்'' என்றுகூறி, ஆளுக்கொரு செய்யுள் பாடித் தத்துவராயர் நூலைப் புகழ்ந்து சென்ருர்கள்.

இறுதி

சொரூபாநந்த அடிகள் ஒரு திருவிளையாடலைத் திருவுளத்தில் எண்ணினுர். தாம் தனியே புறப்பட்டுச் சென்ருர். தத்துவராயரும் தம்முடைய ஆசிரியரைப் பின்தொடர்ந்தார். சொரூபாநந்தர் காடென்றும் மேடென்றும் பாராமல் பலவிடங்களினும் சுற்றித் திரிந்தார். இறுதியிற் கடற்கரையை அடைந்து கடலின்மேலே நடந்தார். கடல் சொரூபாநந்தருக்குப் பிரிந்து வழிவிட்டுக் கொடுத்தது. அவ்வழியே சென்ருர். தத்துவராயரும் பின் தொடர்ந்தபோது கடல் தத்துவராயருக்கு வழிவிடவில்லை. தத்துவராயர் கடற்கரையில் நின்று பசுவைப் பிரிந்த கன்றுபோல் கதறினுர். சொரூபாநந்தர் தத்துவராயருக்குக் காட்சி கொடுத்துத் திருவுடல் மறைந்தருளினுர்.

தத்துவராயர் தம்முடைய ஆசிரியரையே உள்ளத்தில் எண்ணிக்கொண்டிருந்து தாமும் வீடுபேற்றை அடைந்தார். தத்துவராய அடிகளின் உடல் திருத்தில்லைக்கும் திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்திற்கும் இடையே அடக்கஞ் செய்யப்பட்டது.

# உச. குமாரதேவர்

### தோற்றம்

ஏறக்குறைய முந்நூறு யாண்டுகட்குமுன்னர்க் கன்னட நாட்டிலே குமாரதேவர் தோன்றினார். குமாரதேவர் அரச குடும்பத்தில் பிறந்து சின்னாள் அரசியற்றியவர் என்பது பெரும்பாலானவர்களுடைய கொள்கையாகும்.

### பழைய வரலாறு

குமாரதேவர் முற்பிறப்பில் மல்லிகார்ச்சுனமலையில் இறைவனை நோக்கித் தவம்புரிந்து கொண்டிருந்தார். அப்போது அவ்விடத்திலே வேறோர் அன்பரும் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்துகொண்டிருந்தார். அந்த அன்பருடைய தவத்திற்கிரங்கிய சிவபெருமான் அவருக்கு முன் தோன்றிக் காட்சி கொடுத்தார். "அன்பனே! நீ விரும்பியது யாது? அதனைக் கூறுவாயாயின் அளித்தருள்வோம்," என்று திருவாய் மலர்ந்தருளினார். அந்த அன்பர் உள்ளத்திலே ஒன்றை நினைத்தார். நினைத்ததைக் கேளாமல் வேறொன்றைக் கேட்டார். அவ்வளவில் சிவபெருமான் தமது திருவுளத்தில் முனிவுகொண்டார். "நீ ஒன்றை நினைத்து வேறொன்றைக் கேட்டாய்; ஆகவே சடாமுனி ஆகக்கடவாய்" என்று சாபங்கொடுத்தார்.

எதிர்பாராதவாறு சாபத்தை எய்திய அன்பர் உள்ளங் கலங்கி வருந்தினார். "தவமும் தவமுடையார்க் காகும், அவமதனை அஃதிலார் மேற்கொள்வது," என்னும் திருவள்ளுவர் திருவாய்மொழி பொய்யாகுமோ? அவர் திடுக்கிட்டு எழுந்தார். "இறைவனே! நான் கருதியதைக் கேளாமல் ஊழ்வினையினால் தவறிப்போனேன். இனி அடியேன் யாது செய்வேன்? அந்தோ அடிமைக்கு இச் சாபம் எக்காலத்திலே நீங்கும்?," என்று அடிவணங்கிக் கேட்டார்.

சிவபெருமான் சடாமுனியான அந்த அன்பரைப் பார்த்து, "நீ போய்ப் பழமலையில் (விருத்தாசலம்) மணிமுத்த ஆற்றின் கரையில் வளர்ந்தோங்கி யிருக்கின்ற அரசமரத்தின் மேல் அமர்ந்திருப்பாயாக! இங்கு தவஞ் செய்துகொண்டிருக்கின்ற நம் அன்பனாகிய ஒருவன் கன்னடநாட்டில் அரசனாகப் பிறந்து சிலநாள் அரசாட்சி செய்திருப்பான்; பிறகு இல்லறந் துறந்து பேரையூர்ச் சாந்தலிங்கரிடத்திலே அருண்மொழிபெற்று அவர் கட்டளைப்படி பழமலைக்கு வருவான். அப்பொழுது நீ இருக்கும் அரசமர நிழலில் வந்து தங்குவான். நீ அவனைக் கண்டு சாபநீக்கஞ் செய்யுமாறு வேண்டிக்கொண்டால் அவ்வாறே செய்வான்" என்று திருவாய்மலர்ந்தருளினார். சடாமுனி ஆகிய அன்பர் இறைவனைப் பார்த்து, "இறைவனே! அவர்க்கு வீடுபேற்றுநிலை எப்பொழுது?," என்று உசாவினார். அதற்குச் சிவபெருமான், "அந்த அன்பன் இதற்குமுன்பு ஐந்து நல்லுடல்கள் எடுத்து நம்மை நோக்கித் தவஞ்செய்துள்ளான். இஃது ஆறாவது உடல். இன்னும் ஓர் உடல் எடுத்த அளவில் வீடுபேற்றை அடைவான்," என்று திருவாய் மலர்ந்தருளினார். சடாமுனியாகிய அன்பர் நல்லது என்று இறைவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சடாமுனியாகி இறைவன் இயம்பிய அரசமரத்தின்மீது அமர்ந்திருந்தார்.

குமாரதேவர்

இறைவனால் குறிப்பிடப்பெற்ற அன்பர் கன்னடநாட்டில் மன்னனாகத் தோன்றினார். கல்வி முதலியவைகளைக் கற்றுச் சிறப்படைந்தார். திருமணமும் ஆகியது. அரசாட்சியை மேற்கொண்டு அரசியல் அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோதினும் குமாரதேவருடைய உள்ளம் அவைகளிலெல்லாம் செல்லவில்லை. அறிவுநூல்களை

ஆராய்ச்சி செய்வதிலேயே தமது பொழுதைப் பெரும் பாலும் செலவுசெய்து வந்தார். பழைய வாசனையினால் அவருடைய உள்ளம் சிறந்த நிலையை அடைந்து விளங்கியது. அரசி குமாரதேவருக்கேற்ற வாழ்க்கைத் துணைவியாய் அமைந்து தானும் தன் கணவனோடு மெய்யறிவுநூல்களைக் கற்று அதனை ஆராய்ந்துவந்தாள். மெய்ஞ்ஞானச் செல்வனாகிய மன்னனுக்கு வாழ்க்கைப்பட்டது வீண் போகவில்லை. நாட்கள் சென்றன. காலச்சக்கரம் கன வேகமாகச் சுழன்றது. குமாரதேவர் அரசியல் அலுவல்களைக் கான்ற சோறெனை வெறுத்தார். தக்க குருநாதனை அடைந்து அருண்மொழிபெற்றுப் பரதேசநாட்டை யாளுதலே செய்யத்தக்கது என்று உறுதிசெய்தார். ஒருநாள் அரண்மனையைவிட்டு வெளியேறுதலைக் குறித்து நெடும் போது தனியிடம் ஒன்றில் அமர்ந்து எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அரசரின் நிலை அமைச்சர் முதலியவர்கட்கு மிகுந்த கலக்கத்தை அளித்தது. அமைச்சர்கள், பெரியோர்கள், அரசரின் குரு முதலியோர் அரசர் தனித்திருக்கும் இடத்திற்குச் சென்று அரசரைப் பார்த்து, "செய்யவேண்டிய அலுவல்களைப் பாராமல் வீணாகப் பொழுது போக்கிக்கொண்டு தனித்திருத்தல் அரச தருமம் ஆகாது. ஆதலால் செய்யவேண்டிய செயல்களை வழக்கம்போல் மேற்கொள்ளுதல் வேண்டும்," என்று கூறினார்கள்.

துறவியாதல்

குமாரதேவர் அமைச்சர் முதலியவர்களைப் பார்த்து, "நான் வீண்போது போக்கவில்லை. செய்யவேண்டிய செயல்களை விரைந்து செய்யாமல் வீண்பொழுது போக்கிக் கொண்டிருத்தலைப் பற்றித்தான் எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறேன். செய்யவேண்டிய செயல்கள் யாவை என்

பிர்களாயின் தன்னையும் தலைவனையும் உணர்ந்து வீடு பேற்றை யடைதற்கு முயலுதலேயாகும். எட்டுணைப் பயனும் அற்ற இவ் வரசாட்சியிலே நான் பல நாட்களாக வீண்பொழுது போக்கிவிட்டேன். எனக்கு இனிமேல் இவ் வரசாட்சி வேண்டியதில்லை. நீங்கள் வேறு அரசனை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டு அரண் மனையைவிட்டுப் புறப்பட்டுத் தெருவையடைந்தார். குமார தேவருடைய தாய் தந்தையர் மனைவி முதலிய யாவரும் அரசரைத் தடுத்துநிறுத்தப் பார்த்தனர். அவர்கள் எல் லோருக்கும் அரசர் தக்கவாறு பதிலுரைத்துவிட்டு ஊரை விட்டு வெளியேறினர்.

ஆசிரியரை அடைதல்

அந்நாளில் பேரையூரிலே சாந்தலிங்க அடிகள் என் னும் பெரியார், மெய்ஞ்ஞானச் செல்வராய் விளங்கி நிற்கும் செய்தி குமாரதேவருக்கு முன்னரே தெரிந்திருந்தது. ஆகவே அவர் சாந்தலிங்க அடிகளை அடைந்து வணங்கினர். தமக்கு அருண்மொழி (உபதேசம்) வழங்கிக் கடைத் தேற்றவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். சாந்தலிங்க அடிகள் குமாரதேவரின் மேலான நிலையை உடற்குறிகளால் பார்த்துக் களிப்படைந்தார். ஆயினும் அதனை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் குமாரதேவரின் உள்ளத்திடத்தை யும் நிலையையும் நன்கு ஆராய விரும்பினர். அவர் தமது பக்கத்தில் நின்ற கையேட்டுத் தம்பிரானைப் பார்த்து, "அப்பா! இவனைப் பார்த்தால் அரசனைப்போலக் காணப் படுகிறான். இவன் துறவற நிலைக்கு ஏற்றவன் அல்லன். அரசாட்சிக்கே போகுமாறு கூறுவாயாக," என்று உரைத்தார்.

குமாரதேவரிடம் துறவுக்குறிகள் பல விளங்குதலைக் கண்ட தம்பிரான், அக் குறிகளைச் சாந்தலிங்க அடிகட்குக்

குறிப்பாகத் தெரிவித்தார். அதன்மேல் சாந்தலிங்க அடிகள், "அப்படியானால் இவனை நமது எருதுக்குப் புல்லறுத்துப் போடுமாறு கூறு. பக்குவம் அறிந்து ஆக வேண்டியதைச் செய்வோம்," என்று திருவாய் மலர்ந்தருளினார்.

புல்லறுத்தல்

கையேட்டுத் தம்பிரான் அரிவாளையும் புல் கட்டுங் கயிற்றையும் குமாரதேவரிடம் கொடுத்துப் புல்லறுத்துக் கட்டிவருமாறு கூறினார். குமாரதேவர் அத் திருத்தொண்டைத் தலைமேற்கொண்டு செய்யத்தொடங்கினார். பள்ளர்கள் புல்லறுத்துக்கொண்டிருக்கும் வயல்களுக்குச் சென்றார். பள்ளர்கள் புல் அறுப்பதைப் பார்த்துத் தாமும் அவ்வாறே அறுக்கத்தொடங்கினார். இடக்கையால் புல்லைப் பற்றிக்கொண்டு வலக்கையில் உள்ள அரிவாளைப் புல்லின் மேற்போட்டு இழுக்காமல் கையின்மேற்போட்டு இழுத்தார். அவ்வளவில் இடக்கையில் அரிவாள் அறுத்துக் காயம் உண்டாகியது. அரியணையில் அமர்ந்திருந்த அரசர் அரிவாள்தொழிலை எவ்வாறு அறிவார்? இடக்கை அறுபட்டதைக்கண்ட அளவில் வலக்கையைப் பார்த்துச் சினந்தார். இவ்வியத்தகு காட்சியை அங்குப் புல்லறுத்துக் கொண்டிருந்த பள்ளர்கள் கண்டார்கள். அவர்கள் குமாரதேவரைப் பார்த்து, "ஐயா! நீர் யாவர்?," என்று உசாவினார்கள். அதற்குக் குமாரதேவர், "நான் பேரையூர்ச் சாந்தலிங்க அடிகளின் மாட்டிற்குப் புல்லறுப்பவன்," என்று பதிலுரைத்தார். இம்மொழிகளைக் கேட்டுப் பள்ளர்கள் வியப்படைந்தார்கள். இவரைப் பார்த்தால் அரசரைப்போலத் தெரிகிறது. எக்காரணத்தாலோ புல் அறுக்கிறார் என்று எண்ணமிட்டார்கள். தாங்களே புல் அறுத்துக் கட்டுக்கட்டி குமாரதேவரின் தலையின்மீது தூக்கி

வைத்தார்கள். குமாரதேவர் புற்சுமையைத் தூக்க முடியாமல் திணறினர். புல்லறுத்த பள்ளர்களே அந்தச் சுமையை எடுத்துக்கொண்டுவந்து மடத்திற்கு வெளியே வைத்துவிட்டுச் சென்றார்கள். இவ்வாறு இரண்டு மூன்று நாட்கள் நடைபெற்றன. மூன்றாவது நாள் புற்சுமையை எடுத்துவந்த பள்ளன் குமாரதேவருடைய செய்திகள் எல்லாவற்றையும் கையேட்டுத் தம்பிரானுக்குத் தெரியப் படுத்தினன். குமாரதேவர் கையை அறுத்துக்கொண்ட செய்தியைக் கையேட்டுத்தம்பிரான் சாந்தலிங்க அடிகளுக்குக் குறிப்பாகத் தெரியப்படுத்தினர். அடிகள் குமார தேவரைப்பார்த்துச் சினங்கொள்பவரைப்போலப் பொய் யாக நடித்தார். குமாரதேவர் மெய்யாகவே அஞ்சி ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்துவிட்டார்.

அருண்மொழி பெறுதல்

ஒருநாள் இரவு சாந்தலிங்க அடிகள் கையேட்டுத் தம்பிரானே அழைத்தார். "எங்கள் இருவருக்கும் வெவ் வேறாகக் கட்டமுதுகட்டி ஒரு தடியில் மாட்டி அரசனிடங் கொடுத்து நம்மோடு நாளேக் காலேயில் அனுப்பி வைப்பா யாக," என்று கட்டளேயிட்டார். கையேட்டுத் தம்பிரானும் அவ்வாறே செய்து அனுப்பிவைத்தார். அடிகள் முன்னும் குமாரதேவர் பின்னுமாக இருவரும் வழி நடந்தனர். சிறிது தொலே முன்னால் சென்ற சாந்தலிங்க அடிகள் திரும்பிப் பார்த்து, "என்ன தாழ்த்தல்?" என்றுகூறி அதட்டினர். குமரதேவர் அச்சமடைந்து, "அடிகாள்! ஒருபுறம் அச்சு லிங்கமும் மற்ருெருபுறம் கணயத்தமும் இழுக்கின்றதே அடியேன் யாதுசெய்வேன்," என்று பதிலுரைத்தார். சாந்த லிங்க அடிகள் அக் குறிப்பை யுணர்ந்து தமக்குத்தாமே மகிழ்ச்சியடைந்தார். பிறகு ஆங்கிருந்த ஒரு குளக்கரை யில் இருவரும் அமர்ந்தனர் இரு கட்டுச்சோறு மூட்டை

களையும் ஒன்றுபடுத்தினர். குமாரதேவர் அடிகளுக்கிட அடிகள் உண்டபின் குமாரதேவரும் உண்டார். பிறகு இருவரும் அவ்விடத்தில் சிறிதுபோது உரையாடிக்கொண்டிருந்தனர். அப்புறம் புறப்பட்டு மடத்தை அடைந்தனர். நாட்கள் சில சென்றபின் சாந்தலிங்க அடிகள் குமாரதேவருக்கு அருண்மொழி வழங்கியருளினர். குமாரதேவர் அவ்விடமே தவநிலையில் அமர்ந்து முதிர்ச்சி பெற்றனர்.

### பழமலைக்குச் செல்லுதல்

ஒருநாள் சாந்தலிங்க அடிகள் குமாரதேவருக்கு "மகாராசா" என்று பெயரிட்டழைத்து, "நீ விருத்சாசலத்திற்குச் செல்லுதல் வேண்டும்," என்று கட்டளையிட்டருளினர். குமாரதேவர் நல்லது என்று கூறி விடைபெற்றுக்கொண்டு விருத்தாசலம் என்னும் பழமலையை நோக்கிப் புறப்பட்டார். வழி நடந்து சின்னச்சேலம் என்னும் ஊரை நெருங்கினர். குமாரதேவரிடத்திலே அன்பு கொண்ட பழமலைநாதர், மனித உருவத்தோடு வந்து வழியில் ஓரிடத்திலே தண்ணீர்ப்பந்தல் வைத்துக்கொண்டிருந்தார். அவர் குமாரதேவரைப் பார்த்து, "அப்பா! நீ மிகுந்த நீர்வேட்கையோடு செல்வதாகத் தெரிகிறது. நம்மிடத்தில் நால்வகைத் தண்ணீரும் இருக்கின்றன. உனக்கு வேண்டியமட்டும் சாப்பிட்டு நீர்வேட்கை தணியலாம்," என்று கூறித் தண்ணீர் கொடுத்தார். குமாரதேவர் அதனைச் சாப்பிட்டு நீர்வேட்கை தணிந்தார். பிறகு புறப்பட்டு விருத்தாசலத்தை அடைந்து, மணிமுத்த ஆற்றின் கரையில் சடாமுனி தங்கியிருந்த அரசமர நீழலில் அமர்ந்திருந்தார்.

### பெரியநாயகி திருவருள்

குமாரதேவர் களைப்புடன் அமர்ந்திருத்தலை விருத்தகிரியமர் பெரியநாயகி அம்மையார் அறிந்தார். தமக்குத்

திருமுழுக்காட்டுதற்குப் பொன் ஏனத்தில் வைத்திருந்த ஆன்பாலை எடுத்துக்கொண்டு ஒரு முதிய மாதுபோல் குமாரதேவரிடத்திற்கு வந்தார். அறிதுயிலில் இருந்த குமாரதேவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார். குமார தேவருடைய திருமுடியைத் தமது திருமடியின்மேல் தூக்கிவைத்து அந்தப்பாலைப் புகட்டினார். குமாரதேவர் தளர்வு நீங்கிக் கண்ணை விழித்துப் பார்த்தார். "அம்மா! நீவிர் யார்?," என்று உசாவினார். பெரியநாயகியார் குமார தேவரைப்பார்த்து, "அப்பா குமாரதேவா! நான்தான் பெரியநாயகி. நீ எப்பொழுதும் எம்மிடத்தில்தானே நலத் துடன் இரு," என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். குமாரதேவர் பெயநாயகியாருடைய திருவருளை எண்ணி மிகுந்த களிப்புடன் அமர்ந்திருந்தார்.

சடாமுனி சாபநீக்கம்

அரசமரத்தில் நீண்டகாலந் தங்கியிருந்த சடாமுனி குமாரதேவரைக் கண்டு மகிழ்ந்தது. நாம் தேடியிருந்த பொருள் கிட்டியது எண்ணி, அரசமரத்தைவிட்டுக் கீழே இறங்கிவந்து அந்தணாளர் உருவத்துடன் குமாரதேவரைப் பணிந்துநின்றது. குமாரதேவர், அந்தணாளர் உருவத் துடன் வந்துள்ள சடாமுனியைப் பார்த்து, "அப்பா! நீ யார்?" என்று உசாவினார். அதற்குச் சடாமுனி, "நான் சடாமுனி," என்று பதிலுரைத்தது. "நீ இவ்விடத்திற்கு வந்த காரியம் யாது?" என்று கேட்டார். சடாமுனி தன்னுடைய வரலாறு முழுமையையும் விளக்கமாகக் கூறிற்று. குமாரதேவர் அந்தச் சடாமுனிக்குச் சாபநீக்கம் செய்தார். அவ்விடத்தில்தானே சிறிது நாள் தங்கி யிருந்தார்.

### அன்பன் ஒருவனுக்கு அருள்புரிதல்

இல்லறத்தான் ஒருவன் குமாரதேவரை அருள்மிகு பெரியார் என்று அறிந்து நாள்தோறும் வழிபட்டுவந்தான். அந்த அன்பனுக்கு எல்லாவகையான செல்வங்களும் நாள் தோறும் பெருகின. அவன் ஒருநாள் குமாரதேவரைப் பணிந்து, "அடிகாள்! அடியேனுக்கு ஏதேனும் ஒரு திருப் பணி கட்டளையிட்டருளவேண்டும்," என்று வேண்டிக் கொண்டான். குமாரதேவர் அந்த அன்பனைப் பார்த்து, "அவ்வாறு திருப்பணி செய்யவேண்டுமென்று உனக்கு விருப்பமிருந்தால், பெரியநாயகியார் கோவிலுக்கு முன் பாக ஒரு மண்டபம் கட்டிவைப்பாயாக," என்று கட்டளை யிட்டருளினர். அவன் அப்படியே அந்தத் திருப்பணி யைத் தொடங்கினன். உத்திரக் கல் மேலே ஏறுதபடியி னல் மிகுந்த வருத்தமடைந்து குமாரதேவருக்குச் செய்தி யைத் தெரியப்படுத்தினன். அவர் திருநீற்றைக்கொடுத்து, "இந்த நீற்றை அந்தக் கல்லின்மேலே போட்டுத் தூக்குவா யாக!" என்று கட்டளையிட்டார். அவ்வாறே செய்த அளவில் கல் மேலேறியது. திருப்பணியும் இனிது முடிந் தது. அந்த அன்பன் குமாரதேவரைப் பலவாறு போற் றிப் புகழ்ந்தான். குமாரதேவர் அந்த அன்பனை அழைத் துக்கொண்டு கோபுரவாயிலுக்குச் சென்றர். அங்கு செய்துவைத்துள்ள இரண்டு துவாரபாலகர்களுடைய முது கும் உரைபட்டிருப்பதை அவனுக்குக் காண்பித்தார். "அப்பா! இவர்களுக்குத் தவனகஞ்சி காய்ச்சிப் படைப்பா யாக!" என்று கட்டளையிட்டார். அவனும் அவ்வாறே செய்தான்.

### மடமையும் புதுமையும்

ஒருநாள் குமாரதேவர் ஓர் அறிவிலியின் இல்லத்திற் குச் சென்று ஐயத்தின்பொருட்டுக் கையை ஏந்தினர்.

அந்த வீட்டினர் இவருடைய பெருமையை உணர்ந்துகொள்ளாமல் வீட்டிற் சமைத்துவைத்திருந்த கயலைச் சோற்றோடு கலந்து இவருடைய கையிலே போட்டார்கள். குமாரதேவர் அதனை உணர்ந்தார். அப்படியே குளத்தின் நீர் அருகில் சென்றார். கறியாகச் சமைக்கப்பட்டிருந்த கயல் உயிர்பெற்றுக் குளத்திற் குதித்தோடிப் போய்விட்டது.

தொழுநோய் போக்கல்

தொழுநோயாளன் ஒருவன் தன்னுடைய நோய் தீர வேண்டுமென்று நாள்தோறும் குமாரதேவரைப் போற்றி வழிபாடு செய்துகொண்டுவந்தான். ஒருநாள் அவனுக்குத் துன்பம் மிகுதியாகிவிட்டது. குமாரதேவருடைய திருவடிகளில் விழுந்து கோவென்று கதறி முறையிட்டான். குமாரதேவர் அத்தொழுநோயாளனைப் பார்த்து, "அப்பா! நாம் மருத்துவம் அறியோம்; யாது செய்யலாம்?" என்று கூறினர். அதற்கு அத்தொழுநோயாளன், "அடிகளுடைய திருக்கையினால் திருநீறாகிலும் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தால் என்னுடைய நோய் நீங்கும்," என்று மிகவும் வருந்தி வேண்டிக்கொண்டான். குமாரதேவர் திருவுளம் இரங்கினர். திருநீற்றை அள்ளி அவனுடைய இடக்கையில் வைத்தார். வலக்கையினால் மூடிக்கொள்ளச் சொன்னர். பழமலைநாதர் கோவிலில் ஓரிடத்தில் இருக்கும் ஆனைமுகக் கடவுளைக் குறிப்பிட்டு, "அப்பா! நீ அந்தக் கடவுளுக்கு முன்னேபோய் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு நின்று அங்கே நடக்கின்ற புதுமையை நமக்கு வந்து கூறுவாயாக!" என்று கட்டளையிட்டருளினர். அவன் அப்படியே சென்று நின்றான். அவனுக்கு உறக்கம் உண்டானதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டது. அப்பொழுது அந்த ஆனைமுகக்கடவுள் தம் தும்பிக்கையை நீட்டி இவனுடைய இடது கையில் இருந்த

திருநீற்றினைத் தொட்டதுபோலக் கண்டான். குமாரதேவரிடத்திற்குத் திரும்பிவந்து அந்தச் செய்தியைக் கூறினான். குமாரதேவர் அந்த நீற்றினைத் தொட்டு அணிந்துகொண்டு அவனையும் அணிந்துகொள்ளுமாறு கூறினார். அவன் அவ்வாறே பல நாள் செய்தான். அதனால் அவன் தொழுநோய் நீங்கி நலம் பெற்றான்.

தேரை நிறுத்துதல்

குமாரதேவர் திருவாரூர்த் திருவிழாவைக் காண்டற்கு வந்தார். தியாகராயப்பெருமான் எழுந்தருளிய தேர் இழுக்கப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. குமாரதேவர் தேருக்கு முன்னே நின்று தியாகராயப்பெருமானை வணங்கிக்கொண்டிருந்தார். போலிச் சைவர்கள் இருவர் குமாரதேவருடைய திருக்கோலத்தைப் பார்த்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் வேடிக்கையாக, "வீரசைவ மருளரைப் பார்த்தீர்களோ!" என்று குமாரதேவருடைய காதுகளில் நன்கு கேட்குமாறு பேசிக்கொண்டனர். அவ்வுரையாடலைக் குமாரதேவர் கேட்டு உள்ளம் வருந்தினார். தேரில் வரும் தியாகராயப்பெருமானைப் பார்த்துத், "தியாகராயப்பெருமானே! வீரசைவம் மருளானால் தேர் நடக்க; அருளானால் தேர் நிற்க" என்று திருவாய்மலர்ந்தருளினார். அவ்வளவில் தேர் நின்றுவிட்டது. குமாரதேவர் சிறிது தொலையிற் சென்று ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார். தியாகராயப்பெருமானுடைய தேர்த்திருவிழாவை அந்நாளில் தஞ்சைமன்னன் முன்னின்று நடத்திக்கொண்டிருந்தான். திருக்கோயிலின் புரவலனாக அம்மன்னனே அமைந்து நின்றான். தேர் நிலையை அடைந்தபிறகுதான் உணவு கொள்ளும் உறுதியுடையவன் அவன். தேர் நின்றுவிட்ட செய்தியை அவன் அறிந்தான். அங்கு நிகழ்ந்த செயல் அவனுக்குத் தெரியாது. அவன், "அந்தோ! இந்த இடை

யூறு எவரால் நிகழ்ந்தது? வீணுக என்னுடைய உறுதி தவறுகின்றதே!" என்று மனந்தளர்ந்தான். தேரை ஓடச்செய்வதற்குத் தன்னால் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்துபார்த்தான். முன்னிலும் மும்மடங்கு ஆட்களைவிட்டு இழுத்துப் பார்த்தான். எதற்கும் தேர் அசையவேயில்லை. அரசன் மிகுந்த வருத்தத்துடன் வாடி ஓரிடத்தில் அமர்ந்திருந்தான். அப்போது அங்கு நிகழ்ந்த செய்தி அவனுக்குத் தெரிந்தது. அவன் குமாரதேவர் தங்கியிருந்த இடத்திற்கு வந்தான். அவரைக் கண்டு அடிவணங்கினுன். குமாரதேவர் அரசனைப் பார்த்து, "இம் மருளனிடத்தில் உங்களுக்கு என்ன வேலை? போங்கள்," என்று கூறினுர்.

அரசன் குமாரதேவரை மீளவும் பணிந்து, "அடிகாள்! இந்தக் குற்றத்தைப் பொறுத்துத் தேரை நடப்பித்தருளவேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். குமாரதேவர் திருவுளம் இரங்கினுர். அரசனுடனும் படைகளுடனும் தேருக்கு முன்னுற் சென்றுர். தியாகராசப் பெருமானைப் பார்த்துப், "பெருமானே! வீரசைவம் அருளானுல் தேர் நடக்க; மருளானுல் தேர் நிற்க" என்று திருவாய்மலர்ந்தருளினுர். தேர் விரைந்து நிலையடிக்குப் போய்ச் சேர்ந்தது. யாவரும் உள்ளங்களித்தனர்.

மந்திரவாதிக்கு அறிவு புகட்டல்

குமாரதேவர் விருத்தாசலம் அடைந்தார். வழக்கம் போல் அரசமரத்தின்கீழ் அமர்ந்திருந்தார். அந்நாளில் பிறநாட்டில் இருந்த ஒரு மந்திரவாதி விருத்தாசலத்தில் இருந்த ஒரு பத்திரகாளியை மறைமொழியினுல் தனது வழிப்படுத்திக்கொள்ள எண்ணினுன். தனது ஊரைவிட்டுப் புறப்பட்டு விருத்தாசலத்தை நோக்கி வந்துகொண்

டிருந்தான். பத்திரகாளி அந்த மந்திரவாதியின் வருகையை அறிந்து அச்சங்கொண்டாள். தனக்கு ஏற்படவிருக்குந் தொல்லையைக் குமாரதேவரால் போக்கிக்கொள்ளலாம் என்று எண்ணினாள். ஒரு பெண்ணைப்போலக் குமார தேவரிடத்திற்கு வந்தாள். அவரை வலம் வந்து வணங்கினாள். அவருக்கு எதிரே நின்றாள். குமாரதேவர், "நீ யார்?" என்று உசாவினார். பத்திரகாளி குமாரதேவரைப் பார்த்து, "அடிகாள்! நான் இவ்வூரில் இருக்கும் பத்திர காளி. என்னைத் தன்வழிப் படுத்திக்கொள்ளுமாறு ஓர் இழிஞன் வருகின்றான். அதனால் அஞ்சி உம்மிடத்திற்கு வந்தேன்," என்று கூறினாள்.

குமாரதேவர் பத்திரகாளியைப் பார்த்து, "எம்மால் உனக்கு ஆகவேண்டியது என்ன?" என்று கேட்டார்.

"அடிகளுடைய திருவடிகளை அடியாளுடைய முடியின்மேல் வைத்தருளினால் அடியேனுக்கு வரவிருக்கும் துன்பம் வாராதொழியும்," என்றாள் பத்திரகாளி. குமார தேவர் திருவுளம் இரங்கினார்; "அவ்வாறே செய்வோம்," என்று கூறிப் பத்திரகாளியின் கோவிலுக்குச் சென்றார். பத்திரகாளியின் சிலைமுடியின்மீது தம் அடிகளைத் தூக்கி வைத்தருளினார். மந்திரவாதி பத்திரகாளியின் கோயிலுக்கு வந்தான். தன்னுடைய மந்திரவேலையைத் தொடங்கினான்; அவனுடைய இரண்டு கண்களும் குருடாகி விட்டன. மந்திரவாதி மிகுந்த அச்சங்கொண்டான். "இந்தச் சிவப்பதியில் பெரியோர்கள் வாசஞ்செய்திருப்ப தாகத் தெரிகிறது. நாம் வகைதெரியாமல் வந்து மாட்டிக்கொண்டோம்," என்று எண்ணினான். "இங்கு பெரியோர்கள் யாரேனும் இருக்கின்றார்களா?" என்று உசாவினான். குமாரதேவர் தங்கியிருக்குஞ் செய்தி தெரிந்தது.

அவன் குமாரதேவர் இருக்குமிடத்திற்கு வந்தான். அவருக்குமுன்பு வணங்கிநின்றான். குமாரதேவர் அவனைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டார். அம் மந்திரவாதி குமாரதேவரைப் பார்த்து, "நான் ஒரு மந்திரவாதி. இந்த இடத்திற்கு இன்ன காரியத்தின்பொருட்டு வந்தேன். எனக்கு இத்தகைய தொல்லை நேரிட்டது. இதனை அடிகளே தீர்த்தருளுதல் வேண்டும்," என்று வேண்டிக்கொண்டான். குமாரதேவர் எல்லோரிடத்திலேயும் அருள் செய்வராதலின், கொடியவனாகிய அந்த மந்திரவாதியின் இடத்திலேயும் திருவுளம் இரங்கினார். அவனைப் பார்த்து, "அடே தீயவனே! நீ உன்னுடைய உடலுள்ள அளவும் மாந்திரீகத்தொழிலை விட்டுவிடுவதற்கு இணங்குவாயானால் உனக்கு ஒரு கண்மட்டும் தெரியுமாறு செய்வோம்," என்று கூறினார். மந்திரவாதி, "அப்படியே விட்டுவிடுகிறேன்," என்று குமாரதேவருடைய திருவடிகளைத் தொட்டு உறுதிமொழி கூறினான். அவனுக்கு ஒரு கண் தெரியுமாறு குமாரதேவர் அருள்புரிந்தார். அவன் தன்னுடைய நாட்டிற்குச் சென்றான்.

சிதம்பர அடிகள்

இல்லறத்தான் ஒருவனுக்கு நீண்டகாலமாக மக்கட்பேறு உண்டாகாமல் இருந்தது. அவன் உள்ளன்புடன் குமாரதேவரை வழிபட்டு வந்தான். குமாரதேவர் திருவுளம் இரங்கி அந்த இல்லறத்தானுக்குத் திருநீறு வழங்கினார். அதனால் அவனுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுக்கு எழுத்துப் பயிற்சி முதலியன கற்பித்தபின் புலமைப்பயிற்சி அளிக்கத் தொடங்கினான். அதற்குத் தகுதிவாய்ந்த அறிஞரைத் தேடினான். அந்நாளில் மதுரைமாநகரில் சிதம்பரம்பிள்ளை என்பவர் சிறந்த புலவராகத் திகழ்கிறார் என்னுஞ் செய்தியை அறிந்

தான். அந்தச் சிதம்பரம் பிள்ளையை மதுரையில் இருந்து வரவழைத்தான். இரண்டு பிள்ளைகளுக்கும் சிதம்பரம் பிள்ளை தமிழாசிரியராக அமைந்து கல்வி கற்பித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் குமாரதேவர் வயிற்றுத் தீயைத் தணிக்குமாறு அந்த இல்லறத்தானுடைய மனைக்குச் சென்றார். தமிழாசிரியராகிய சிதம்பரம்பிள்ளை குமாரதேவரிடத்தில் சிறிதும் பணிவற்று இறுமாந்திருந்தார். குமாரதேவர் அந்தச் சிதம்பரம் பிள்ளையைத் தடுத்தாட்கொள்ள எண்ணினார். அவரை நோக்கி ஒரு மொழியைக் கூறிப் பொருள் வினவினார். சிதம்பரம் பிள்ளைக்கு எவ்வளவோ புலமை யிருந்தபோதிலும் குமாரதேவர் திருமுன்பு பதிலுரைப்பதற்கு நாவெழவில்லை. அறிவு மயங்கி நின்றார். பிறகு ஒருவாறு தெளிவடைந்து குமாரதேவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார். "அடிகாள்! இந்த அடிமை ஆணவமுனைப்பால் அறியாது செய்த தவற்றினைப் பொறுத்துக் காப்பாற்றியருளுதல் வேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். அப்பொழுதே துறவு பூண்டு குமாரதேவரைப் பின்தொடர்ந்து சென்றார். தாமும் ஐயமேற்றுக் குரு பணிவிடைகளைப் புரிந்து நின்றார்.

அருள்புரிதல்

சிதம்பரம் பிள்ளையின் மெய்யன்பையும் அறிவையும் குமாரதேவர் அறிந்தார். அவரைத் தம்முடைய ஆசிரியராகிய சாந்தலிங்க அடிகள் இருக்கும் பேரையூருக்கு அழைத்துக்கொண்டு சென்றார். இருவரும் சாந்தலிங்க அடிகளைக் கண்டு வணங்கினர். சாந்தலிங்க அடிகள் குமாரதேவரைப் பார்த்து, "அப்பா! உன்னுடன் இருப்பவன் யார்?" என்று உசாவினார். அதற்குக் குமாரதேவர், "இவன் தென்னாட்டுச் சைவன்'! என்று மறு

மொழி கூறினர். அடிகள் மீண்டும் குமாரதேவரைப் பார்த்து, "இவனை ஏன் இங்கு அழைத்துக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டார். குமாரதேவர் அதற்கு யாதும் பதிலுரைக்காமல் இருந்துவிட்டார்.

இரண்டு மூன்று நாட்கள் ஏகின. சிதம்பர அடிகளின் நடையைக் கையேட்டுத் தம்பிரான் நன்கு பார்த்தார். பிறகு அவர் சாந்தலிங்க அடிகளைப் பார்த்து, "அடிகாள்! இந்தச் சைவன் அறிவாற்றல் மிகுந்த கெட்டிக்காரனாக இருக்கின்றபடியால், இவனைத் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ளுதல்வேண்டும்," என்று விண்ணப்பஞ் செய்தார். சாந்தலிங்க அடிகள் கையேட்டுத் தம்பிரானைப் பார்த்து, "நமக்கு இருக்கிற வழிமுறைகள் போதும், நமது வழிமுறைக்கு வழிமுறை இல்லாமலிருந்து இப்போது கிடைத்திருக்கிறபடியால் அப்படியே செய்விக்க வேண்டும்," என்று கூறினர். கையேட்டுத் தம்பிரான் யாதும் பதிலுரைக்காம லிருந்துவிட்டார். பிறகு ஒரு நாள் சாந்தலிங்க அடிகள் குமாரதேவரை அழைத்து, "நீ உன் இருப்பிடத்திற்குச் செல்வாயாக!" என்று கட்டளையிட்டார். குமாரதேவர் சாந்தலிங்க அடிகளைப் பார்த்து, "இவன் இவ்விடத்தில் இருக்கட்டும்" என்று கூறினர். சாந்தலிங்க அடிகள் குமாரதேவரைப் பார்த்து, "அவன் இவ்விடத்திற்கு வேண்டா. நீயே அழைத்துக்கொண்டு போ!" என்று கூறினர். குமாரதேவர் மேலும் சாந்தலிங்க அடிகளைப் பார்த்து, "நான் இவனை அழைத்துக் கொண்டுபோய் யாது செய்கிறது?" என்று கேட்டார். "நீ இவனைக் கொண்டுபோய்ப் பக்குவமறிந்து உனக்குச் சொன்னதை இவனுக்குச் சொல்லி வைத்துக்கொள்," என்றார். குமாரதேவர் "அப்படியே நல்லது," என்று சிதம்பர அடிகளையும் அழைத்துக்கொண்டு விருத்தா

சலத்தை அடைந்தார். பிறகு தகுந்தகாலம் பார்த்து அருண்மொழி வழங்கியருளினார். இவர்தாம் திருப்போரூர்ச் சந்நிதிமுறை முதலிய நூல்கள் இயற்றிய சிதம்பர அடிகள்.

நூல்கள் இயற்றல்

பெரியநாயகி அம்மையார் குமாரதேவரைக்கொண்டு நூல்கள் செய்விக்கவேண்டும் என்று எண்ணினார். அவருடைய கனவில் தோன்றி, "அப்பா! குமாரதேவா! நீ நூல்கள் இயற்றவேண்டும்" என்று திருவாய்மலர்ந்தருளினார். குமாரதேவர் பெரியநாயகி அம்மையாருடைய திருவருட்டுணைகொண்டு மகாராசா துறவு, சுத்தசாதகம் முதலிய பதினாறு நூல்களை இயற்றியருளினார்.

இறுதி

குமாரதேவர் வீடுபேறடையும் காலம் அணமியிருப்பதை அறிந்து இரண்டாவது அடிமையாகிய இரட்டி சிதம்பர அடிகள் என்பவர் குமாரதேவரைப்பார்த்து, "அடிகள் மறைந்தருளியபின் அடியார்கள் வழிபாடு செய்துய்யும் பொருட்டு, ஒரு திருப்பணி கட்டளையிட்டருளவேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். அதற்குக் குமாரதேவர், "நாம் மறைந்துபோனபிறகும் கூட நமது பெயர் இருக்க வேண்டுமோ?" என்று கூறி மறுத்துச் சின்னாளில் வீடுபேற்றை அடைந்தார். பெரியநாயகி அம்மையார் திருவருள் நோக்கப்படி இரட்டி சிதம்பர அடிகள் குமாரதேவர் பெயரால் கோயில் மடம் முதலியவைகளைக் கட்டினார்.